# புதுமலர்

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

**புதுமலர் - 7** சூலை - செப் 2024
திருவள்ளுவர் ஆண்டு 2054

| | |
|---|---|
| ஆசிரியர் | : **கண.குறிஞ்சி** |
| இதழ் முகவரி : | : 6, முதல் வீதி, சக்தி நகர் மேற்கு, திண்டல் (அஞ்சல்), ஈரோடு 638 012. |
| இதழ் தொடர்பு எண் | : **94433 07681** |
| மின்னஞ்சல் | : gana.kurinji@gmail.com |
| வடிவமைப்பு | : **கண.குறிஞ்சி** |
| தனி இதழ் | : ரூ. 100 ஆண்டுக் கட்டணம் : ரூ. 400 |
| மூன்றாண்டுக் கட்டணம் | : ரூ. 1000 புரவலர் கட்டணம் : ரூ. 5000 |


இதழுக்கான கட்டணம்
அனுப்பியவர்கள் உரிய தொகை
அனுப்பிய பிறகு, மறவாமல்
இதழின் தொடர்பு எண் மூலம்
அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு
கனிவுடன் வேண்டுகிறோம்
இல்லாவிடின், இதழை
அனுப்புவதில் சிரமம் ஏற்படும்.

**புலனம் (வாட்ஸ்அப்) மூலம்
தகவல் தெரிவிப்பதை
உறுதியாகத் தவிர்க்கவும்**

ஆண்டுக்கட்டணம்
குறித்துத்தகவல் தெரிவிக்க
வேண்டிய தொடர்பு எண்:
94433 07681

நெறியாளர்கள்
- வீ.அரசு
- பொதியவெற்பன்
- ஜமாலன்
- ரவி குமாரசாமி

**நினைவில் வாழும் தி.க.சி. மற்றும் தொ.மு.சி.ரகுநாதன் ஆகியோரது படத்தைக் கொடுத்து உதவிய மதிப்புயர் தோழர்கள் த. ஸ்டாலின் குணசேகரன் மற்றும் எஸ். கே. கங்கா ஆகியோருக்கு மனமார்ந்த நன்றி**

வங்கிக் கணக்கு விவரம்

G. SHANMUGA SUNDARAM

INDIAN BANK, THINDAL BRANCH, ERODE

S/B A/C no. 7390 144 253 IFSC NO. IDIB000T202

**G Pay – 94433 07681 – G. Shanmuga Sundaram**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இதழின் குரல் | 04 |
| சீர் வாசகர் வட்ட முதல் விருதாளர் | 07 |
| • இரண்டு விருதுகள் | |
| - **க.மோகனரங்கன்** | 08 |
| • தி.க.சிவசங்கரன் எனும் தி.க.சி.யின் நூற்றாண்டை நோக்கி... | |
| - **வீ. அரசு** | 10 |
| • மறுவாசிப்புக் கோரும் சிதம்பர ரகுநாதனின் இலக்கிய உரையாடல்கள் | |
| - **க. பஞ்சாங்கம்** | 26 |
| • தமிழ்த் திரை உலகில் பாவேந்தர் | |
| - **நிழல் திருநாவுக்கரசு** | 34 |
| • புரட்சிப் பாவலர் பாவேந்தரும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் | |
| - **பொழிலன்** | 39 |
| • புரட்சிக்கவி பாரதிதாசனார் ஒரு மீள்பார்வை | |
| - **இந்திரன்** | 49 |
| • பாலர்களுக்குப் பாடிய பாவேந்தர் | |
| - **கமலாலயன்** | 53 |
| • அம்பேத்கரைக் கட்டுடைத்தல் | |
| - **ஆனந்து டெல்டும்டே தமிழில் - கண. குறிஞ்சி** | 59 |
| • இன்னொரு வியட்நாம் : பாலஸ்தீன விடுதலைக்கான மாணவர் எழுச்சி. | |
| - **யமுனா ராஜேந்திரன்** | 67 |
| • தொல்கபிலர்-ஒரு தமிழர் | |
| - **கணியன் பாலன்** | 76 |
| • குடி குடியைக் கெடுக்கும் | |
| - **கதிர் நம்பி** | 88 |
| • தென்னிந்தியாவில் இந்துத்துவ மீட்டுருவாக்கமும், நிலைப்படுத்துதலும்: கிருஷ்ணதேவராயர் ஆட்சியை முன்வைத்து | |
| - **அழகிய பெரியவன்** | 97 |
| • கவிதை - **ரவி குமாரசாமி** | 103 |
| • உங்கள் மன ஓசை - **மு.சிவகுருநாதன்** | 104 |
| • புத்தகப் பேழை | 107 |
| • பொதியவெற்பன் அவர்களது பவளவிழா நிறைவு-தஞ்சை | 112 |
| • பேராசிரியர் வீ.அரசு அவர்களுக்குப் பாராட்டு விழா | 115 |



# இதழின் குரல்

புதுமலர் (ஏப்ரல்-சூன் 2024) சார்பாக வெளியிடப்பட்ட பாவேந்தர் பாரதிதாசன் ஆவணச் சிறப்பிதழ் மிகப் பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளது. பாவேந்தர் குறித்து முக்கியமான பத்துக் கட்டுரைகள் அதில் இடம் பெற்றிருந்தன. இருப்பினும் பக்கநெருக்கடியால் சில கட்டுரைகைளை வெளியிட முடியாமல் போனது. எனவே இந்த இதழில் பாவேந்தர் குறித்த நான்கு கட்டுரைகள் கூடுதலாக இணைக்கப் பட்டுள்ளன. இருப்பினும், பாவேந்தர் குறித்துப் பதிவிட இன்னும் பற்பல ஆய்வுகள் உள்ளன. புதுமலரில் அவை அவ்வப்பொழுது வெளியிடப்படும்.

• இந்த இதழ் அச்சிடும் பொழுது வெளியான இரண்டு செய்திகள் நம்மைக் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளன. 2010 ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் காஷ்மீர் குறித்துப் பேசியதற்காக **எழுத்தாளர் அருந்ததிராய்** அவர்கள் மீதும், காஷ்மீர் மத்தியப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் **பேராசிரியர் ஷேக் உசைன்** ஆகிய இருவர் மீதும் கொடுமையான சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் ( Unlawful Activities Prevention Act -- UAPA) பிரிவு 13, இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 153A, 153B, மற்றும் 505 ன் கீழ் வழக்குத் தொடரத் தில்லி துணை நிலை ஆளுநர் அனுமதி அளித்திருப்பது குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 468 CrPC படி ஏற்புடையதல்ல. ஏனெனில் இது போன்ற குற்றத்திற்கு மூன்று ஆண்டுகளுக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் 14 ஆண்டுகள் கழித்துப் பழைய வழக்கைத் தூசு தட்டி எடுத்து வழக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கியது நியாயமற்றது.

2010ஆம் ஆண்டு காஷ்மீர் கருத்தரங்கில் பேசிய பேச்சு நாட்டுநலனுக்கோ, பொது அமைதிக்கோ எதிரானதல்ல என மக்கள் சிவில் உரிமைக் கழகம் (பியூசிஎல்) உள்ளிட்ட மனித உரிமை

அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன. ஆனால் கருத்துரிமையைக் காலில் போட்டு மிதித்து நசுக்குவது பாரதீய ஜனதாக் கட்சி அரசுக்கு இயல்பான ஒன்றாகும்.

2019 ஆம் ஆண்டில் ஊபாச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தம் மூலம், தனிநபர்களையும் அவர்கள் எந்தச் சட்டவிரோத அமைப்புகளுடன் தொடர்பில் இல்லாமலிருந்தாலும் ‘‘பயங்கரவாதிகள் (terrorist) என்று அரசு குற்றஞ்சாட்ட முடியும், வழக்குத் தொடுக்க முடியும். தனக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்களைப் பழிவாங்க இப்படிப்பட்ட திருத்தத்தை முன்பே மோடி அரசு கொண்டு வந்து விட்டது.

2014 முதல் மோடி ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து 36 ஊடகவியலாளர்கள் மீது பொய் வழக்குகள் புனையப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். இதில் 16 பேர் கொடூரமான ஊபாச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதியப்பட்டுச் சிறைக் கொட்டடியில் வாடுகின்றனர். தவிரவும் 28 ஊடகவியலாளர்கள் கடந்த 10 ஆண்டுகளில் கொடூரமாகக் கொலை செய்யப் பட்டுள்ளனர் என்பதை எண்ணும் போது சனநாயக இந்தியாவில் ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் எவ்வளவு கீழ்நிலையில் உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

பத்தாண்டு மோடி அரசின் ஆட்சியில் பேச்சுரிமை, கருத்துரிமை தொடர்ந்து ஒருக்கப்பட்டு வருவதால், உலக அளவில் பத்திரிகைச் சுதந்திரக் குறியீட்டு அளவில் (Press Freedom Index) உலகிலுள்ள 180 நாடுகளில் 161 ஆம் இடத்தில்தான் இந்தியா உள்ளது என்பதை (Reporters without Frontiers - 2023) பன்னாட்டு மனித உரிமை அமைப்புகள் அம்பலப் படுத்தி உள்ளன.

மேலும் நியூஸ் கிளிக் மின்னிதழ், பிபிசி ஆவணப்படம், பன்னாட்டு மன்னிப்பு அவை (Amnesty International) ஆகியவை மோடி அரசை விமர்சனம் செய்ததால் கடும் தாக்குதலுக்கு உள்ளாயின.

இத்தகைய பின்னணியில், புக்கர் பரிசு பெற்ற சர்வேதேச அளவில் புகழ் பெற்ற எழுத்தாளராகிய அருந்ததி ராய் அவர்கள் மீது ஏவப்பட்ட ஊபாச் சட்டத்தை உடனடியாகப் பாரதீய ஜனதாக் கட்சி அரசு திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்துவோம்.

• மோடி அரசின் அடுத்த தாக்குதல் **நீட்** தேர்வை விடாப்பிடியாகத் திணிக்கும் பாசிசப் போக்காகும். கடந்த காலத்தில் "தீட்டு" மூலம் ஒதுக்கப்பட்ட நாம், இப்பொழுது "நீட்"மூலம் பழிவாங்கப் படுகிறோம். அனிதா போன்ற திறமை மிக்க ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவு நீட் மூலம் முற்றிலும் நாசமாக்கப்படுகிறது. பெரும்பாலான அரசுப் பள்ளிமாணவர்கள் படிக்காத பாடப்பகுதியில் தேர்வு வைத்து அதுதான் திறமையின்

அடையாளம் எனும் பொய்யைத் தங்களது அதிகார பலத்தால் நிலை நிறுத்தப் பார்க்கிறது மோடி அரசு.

பணம் படைத்தவர்களுக்கு மட்டுந்தான் இனி மருத்துவராகக் கூடிய வாய்ப்பு என்பது நடைமுறையாகி விட்டது. நீட் பயிற்சி மைய மாபியாக்கள் இலட்சத்தில் அல்ல, கோடிகளில் புரண்டு கொண்டிருக்கின்றனர். பயிற்சி மையங்களில் மிகக் குறுகிய காலத்தில் கிடைக்கக் கூடிய அளவில்லாத இலாபத்தைக் கணக்கிட்டு கார்ப்பரேட்டுகள் இந்த வணிகச் சந்தையில் குதித்து விட்டன.

கல்வி என்பது சேவை என்ற நிலைமாறி, அது ஒரு பண்டமாக மாற்றப்பட்டுவிட்டது. பண்டத்தை நல்ல விலைக்கு விற்று கொள்ளை இலாபம் அடிப்பதுதான் வியாபார தர்மமாகி விட்டது.

இந்த ஆண்டு நடைபெற்ற "நீட்" தேர்வே இதற்குச் சரியான எடுத்துக் காட்டாகும். இந்தாண்டு நீட் தேர்வில் இலட்சக் கணக்கான ரூபாய்கள் விளையாடி உள்ளது. பீகாரில் 34 இலட்சம் ரூபாயை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டு நீட் தேர்வு வினாக்கள் முன்பே விலைக்கு விற்கப்பட்டுள்ளன. நீட் பயிற்சி மையங்களின் மோசடி, ஆள் மாறாட்டம், சிறிதும் நியாயமற்ற கருணை மதிப்பெண் முறை என அதிகார அத்துமீறல் தடையின்றி அரங்கேறியுள்ளது. இத்தகைய கேவலமான ஊழல் பாரதீய ஜனதாக் கட்சி ஆளும் பீகார், குஜராத், அரியானா ஆகிய மாநிலங்களில்தான் வகைதொகை இல்லாமல் நடந்துள்ளது

தேசியத் தேர்வு முகமையும், மோடி அரசும் இத்தகைய கயமையை மூடி மறைக்க முற்படுவது மிகவும் இழிவானது. 24 இலட்சம் மாணவர்களின் எதிர்காலத்தோடு விளையாடும் ஆபத்தான போக்கு கடும் கண்டனத்திற்குரியது.


"நீட்" தேர்வால் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் தமிழக மாணவர்கள்தான். அதனால்தான் தமிழகத்திலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் நீட் தேர்வைக் கடுமையாக எதிர்க்கின்றன. தமிழக அரசு தொடக்கத்திலிருந்தே நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்குக் கேட்டுப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருவது பாராட்டத் தக்கதாகும்.

நீட் தேர்வின் மோசடியைப் புரிந்து கொண்டு இன்று இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்கள் போராட்டத்தில் குதித்துள்ளன. எனவே நீட் தேர்வை விரும்பாத மாநிலங்களுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

அதேபோல், மருத்துவக் கல்லூரி இடங்களில் ஒன்றிய அரசுக்கான ஒதுக்கீட்டை இரத்து செய்ய வேண்டும்.

இதைப்போன்ற பல்வேறு கல்விசார் சிக்கல்களுக்குக் கல்வியை மாநிலப் பட்டியலுக்குத் திரும்பக் கொண்டுவருவது சிறந்த 'தீர்வாக அமையும். கலை இலக்கியம் மற்றும் அறிவுத்துறை சார்ந்தவர்கள் இத்தகைய போராட்டங்களிலிருந்து ஒதுங்கி நின்றால் வருங்காலம் நம்மை மன்னிக்காது.

# சீர் வாசகர் வட்ட முதல் விருதாளர் பொதியவெற்பன்



2019 முதல் சீர் வாசகர் வட்டம் தமிழ் பதிப்புத்துறையில் பெரும் அதிர்வுகளை உண்டாக்கி வருகிறது.

வாசிப்பை ஓர் இயக்கமாக மாற்றியது இதன் தனிச்சிறப்பு. **புதுமைப்பித்தன் கதைகள்** (2021) **தாய் மாக்சிம் கார்க்கி**, (2022) **கந்தர்வன் கதைகள்** (2023)

**இருபதாம் நூற்றாண்டுச் சிறுகதைகள் நூறு** (2023) ஆகிய நூல்களை மக்கள் பதிப்பாகக் கொண்டுவந்து பலரது பாராட்டுக்களைப் பெற்றது.

சீர் வாசக வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் **கவிஞர் தம்பி** அவர்கள் ஏற்கெனவே தனது **நன்செய் பிரசுரம்** வழியாக 2018 முதல் **"பெண் ஏன் அடிமையானாள்?"** எனும் தந்தை பெரியாரின் குறுநூலை **நாலரை இலட்சம் படிகள் விற்பனை** செய்து மாபெரும் சாதனை படைத்ததை அனைவரும் அறிவர்.

இப்பொழுது சீர் வாசகர் வட்டத்தின் பல நூற்றுக் கணக்கான வாசகர்கள் தங்களின் பரவலான பங்களிப்போடு ஒரு விருதினை உருவாக்கி அதன் சார்பாக முதல் விருதினை ஆய்வறிஞர் பொதியவெற்பன் அவர்களுக்குச் சூன் 30 ஆம் நாள் கோவையில் வழங்குகின்றனர். இவ்விருது ஒரு இலட்சம் ரூபாய் கொண்டதாக இருக்கும்.

விருது பெறும் பொதியவெற்பன் அவர்களைத் தமிழ் கூர் நல்லுலகம் நன்கறியும். இலக்கிய விமர்சகர், பதிப்பாளர், கவிஞர், நிகழ்த்து கலைஞர் எனப் பன்முக ஆளுமை மிக்க அவரைப் "புதுமலர்" இதழ் சார்பாக வாழ்த்துகிறோம்

...................

# இரண்டு விருதுகள்

**க.மோகனரங்கன்**



நடுவண் அரசின் சாகித்திய அகாதெமி நிறுவனம் வழங்கும் இவ்வாண்டிற்கான **பால புரஸ்கார் விருது கவிஞர் யூமா வாசுகிக்கு** அவர் எழுதிய சிறார் கதைகளின் தொகுப்பான **'தன்வியின் பிறந்தநாள்'** என்கிற நூலுக்கும், **யுவ புரஸ்கார் விருது லோகேஷ் ரகுராமன் எழுதிய' விஷ்ணு வந்தார்'** என்கிற சிறுகதைத் தொகுப்பிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எந்த எழுத்தாளரும் விருதுகளைக் கருத்தில்கொண்டு எழுதுவதில்லை. அதேசமயம் தகுதியானவர்களை அடையாளம் கண்டு தக்கதருணத்தில் வழங்கப்படும் விருதானது சரியானதொரு சமூக அங்கீகாரமாக அமைவதோடு அவர்கள் தொடர்ந்து தம் பணியில் தீவிரம் குன்றாமல் செயல்பட உத்வேகம் தருவதாகவும் இருக்கும். அவ்வகையில் இவ்வாண்டு இவ்விருதுகளைப் பெற்றிருக்கும் இருவரும் தமது தனித்துவமான எழுத்துக்களின் வழியே வாசகர்கள் விமர்சகர்கள் எனப் பலரது கவனத்தையும் தம்பால் ஈர்த்தவர்களே.



பால சாகித்திய புரஸ்கார் விருதானது 50,000 ரூபாய் விருதுத் தொகையும் ஒரு செம்புப் பட்டயமும் அடங்கியது. இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் உள்ளிட்ட 24 மொழிகளுக்கும் குழந்தை இலக்கியத்திற்குப் பங்களிப்புச் செய்த ஒருவருக்கு ஒவ்வொரு ஆண்டும் இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருதிற்குப் பட்டியலில் இடம் பெறும் எழுத்தாளர்களின் கடந்து ஐந்து ஆண்டுகளில் எழுதிய படைப்புகளில் ஒன்று மூவரடங்கிய தேர்வுக் குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டு இறுதியாக ஒரு நூல் தெரிவு செய்யப்படும்.

இவ்வாண்டு இவ்விருதினைப் பெறும் யூமாவாசுகி பட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். கும்பகோணம் கவின் கலைக் கல்லூரியில் இளங்கலை ஓவியம் பயின்றவர். ஓவியராகத் தன் பணியினை பத்திரிகைகளில் தொடங்கியவர் பிறகு கவிஞராகவும் எழுத்தாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் தொடர்ந்தார். (1) தோழமை இருள் (2) இரவுகளின் நிழற்படம் (3) அமுத பருவம் வலம்புரியாய் வணைந்ததொரு சங்கு ( தமிழினி பதிப்பகம்) (4) என் தந்தையின் வீட்டை சந்தையிடமாக்காதீர்! ( NCBH) முதலிய கவிதைத் தொகுப்புகள் (1) ரத்த உறவு ( தமிழினிப் பதிப்பகம்) (2) மஞ்சள் வெய்யில் ( அகல் வெளியீடு) ஆகிய நாவல்கள் (1) உயிர்த்திருத்தல் (தமிழினிப் பதிப்பகம்) என்ற சிறுகதைத் தொகுப்பு ஆகியவை இவருடைய இலக்கியப் பங்களிப்பு.

இவற்றோடு குழந்தைகளுக்காக இவர் எண்ணற்ற புனைவுகளைச் சொந்தமாக எழுதியிருப்பதோடு வேற்று மொழிப் படைப்புகள் பலவற்றை மொழிபெயர்த்தும் தந்திருக்கிறார். இவரது சிறார் நூல்களில் பெரும்பாலானவற்றை பாரதிப் புத்தகாலயமும் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனமும் வெளியிட்டுள்ளன.

இவர் மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழியாக்கம் செய்த ஓ.வி.விஜயனின் காசக்கின் இதிகாசம் ( காலச்சுவடு பதிப்பகம்) நாவலுக்காக **மொழிபெயர்ப்பு விருது 2017** ல் இவருக்கு கிடைத்திருக்கிறது. குதிரை வீரன் பயணம், மழை முதலிய சிற்றிதழ்களின் ஆசிரியராகவும் சிறிதுகாலம் இவர் செயல்பட்டிருக்கிறார். தற்போது மனைவி மகனுடன் பட்டுக்கோட்டையில் வசித்துவரும் இவர் அரசுப் பள்ளி ஒன்றில் ஓவிய ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார்.

யுவபுராஸ்கார் விருதும் பாலபுரஸ்கார் விருதுபோலவே செம்புப்படயமும் ஐம்பதினாயிரம் விருதுத்தொகையும் அடங்கியது. இந்தியாவிலுள்ள 24 மொழிகளிலும் 35 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர் ஒருவருக்கு அவருடைய இலக்கியப் பங்களிப்பிறகாகச் சாகித்திய அகாதெமி நிறுவனத்தால் வழங்கப்படுவது.

தமிழில் இவ்விருதினை இந்த ஆண்டு பெறுபவர் லோகேஷ் ரகுராமன். தஞ்சாவூர் மாவட்டத்தில் நன்னிலம் அருகில் நாடாகுடி என்ற சிற்றூரைச் சேர்ந்த இவர் தற்சமயம் பெங்களூரில் மென்பொருள் துறையில் பணிபுரிந்து வருகிறார். தமிழினி, சொல்வனம், கணலி போன்ற மின்னிதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். இவருடைய சிறுகதைகள் தொகுக்கப்பட்டு சால்ட் பதிப்பகத்தின் மூலம் (1) விஷ்ணு வந்தார் (2) அரோமா என இரண்டு தொகுதிகள் வெளியாகியுள்ளன. இன்னும் நூலாக்கம் பெறாத சிறுகதைகளும் உண்டு. அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த புதிய அறிதல்களோடு நம் பண்பாட்டு மரபின் பழைய தொன்மங்களையும் உள்ளடக்கி, மாறுபட்ட களங்களில் தமது கதைகளை எழுதிப் பார்க்கும் லோகேஷ், ஆகிவந்த வடிவத்தை ஒதுக்கி வைத்துவிட்டு புதிய சொல்முறைகளை முயன்று பார்க்கும் முனைப்புள்ளவராகத் தன் கதைகளில் வெளிப்படுகிறார். வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்படாத இந்த மனோபாவம் அவருடைய எழுத்தில் அவருக்கு ஒரு விதமான சுதந்திரத்தையும் அதேசமயத்தில் அதிக பொறுப்புணர்ச்சியையும் தருகிறது. அந்த சவாலைப் பல கதைகளிலும் அவர் முதிர்ச்சியுடன் கையாள்கிறார். இவ்விருது அவருக்கு இன்னும் பரவலான வாசகப்பரப்பை பெற்றுத்தரும் என எதிர்பார்க்கிறேன்.

யூமா வாசுகி, லோகேஷ் ரகுராமன் இருவருக்கும் புதுமலர் இதழோடு இணைந்து என் வாழ்த்துகளைப் பகிர்ந்துகொள்கிறேன்.

# தி.க.சிவசங்கரன் எனும் தி.க.சி.யின் நூற்றாண்டை நோக்கி...

**தாமரை இதழ்வழி (1965-1972)**
**தி.க.சி கட்டமைத்த இடதுசாரிக் கருத்துருவாக்கம்.**

**பேராசிரியர் வீ.அரசு**

*"... சென்ற பதினைந்து ஆண்டுகளாக (1945-1960), ஆரம்பத்தில் அத்தி பூத்தது போலவும், பிறகு இங்கொன்று அங்கொன்றாகவும், அப்பால் ஆண்டுதோறும் கணிசமான அளவிலும் நடந்த, பாரதி, கம்பன், வள்ளுவன், இளங்கோ விழாக்களிலும், அண்மையில் வள்ளலார், வேதநாயகம் பிள்ளை, மனோன்மணியம் சுந்தரனார், மறைமலையடிகள், கவிமணி, புதுமைப்பித்தன், கல்கி, டி.கே.சி நினைவு நாட்களிலும் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் முதலியார், என்.எஸ்.கே. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் விழாக்களிலும் ஜீவா, ரகுநாதன், எஸ்.ஆர்.கே., முகவை போன்றோரும் மற்றவர்களும் கலந்துகொண்டு புதிய முறையில் விமர்சனக் கருத்துகளை வழங்கி வந்தார்கள். இந்தக் கருத்துக்களில் சில பல நூல் வடிவம் பெற்றன. மேற்கூறியவர்களோடு ஒரு திசைப் பயணிகளாக மேலும் பலர் குறிப்பாக எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் அணிவகுத்து நின்றனர். 'ஜனநாயகம்', 'சாந்தி', 'சரஸ்வதி', 'தாமரை' போன்ற கலை இலக்கிய இதழ்களின் வழியாக, கலை இலக்கிய வளர்ச்சிக்குப் புதுநெறி காட்டப் போராடினர்." (ஜீவா.தலையங்கம்.தாமரை ஜூலை.1961. தமிழகக் கலை இலக்கிய மகாநாட்டு மலர்)*

தோழர் தி.க.சி. என்று எல்லோராலும் அழைக்கப்படும் தி.க. சிவசங்கரன் (1925-2014) அவர்களின் ஆளுமை உருவாக்கம் உருப்பெறத் தொடங்கிய காலம்தான், மேலே ஜீவா விவரித்திருக்கும் காலம் ஆகும். தமிழ்ச்சூழலில், இடதுசாரி கருத்துசார்ந்த நிலைப்பாட்டில் வாழ்ந்த பல்வேறு ஆளுமைகள் குறித்த, விரிவான பதிவுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூறமுடியாது. அவர்கள் வாழ்ந்த

காலம் நெருக்கடிக்குள்ளான காலம். தகவல்கள் விரிவாகப் பதிவு செய்யப்படாத காலம். இன்றைய சூழலில் பல்வேறு இடதுசாரி ஆளுமைகள் குறித்தத் தேடலை மேற்கொண்டு, அவர்கள் குறித்தப் பதிவுகளைச் செய்யவேண்டிய கடமை நமக்குண்டு. ஆதாரபூர்வமான தரவுகளை முன்னெடுத்து இடதுசாரிக்கருத்து நிலையாளர்களைப் பொதுவெளியில் கொண்டாட வேண்டும். அந்தக் கொண்டாட்டம் புதிய வரலாறுகளை அறிதலாகவும் இளம் செயற்பாட்டாளர்களுக்கு உற்சாகம் தரும் அநுபவமாகவும் அமையக்கூடும். இந்தக் கண்ணோட்டத்தில் தி.க.சி. என்ற ஆளுமையை இங்கு பதிவு செய்ய முயலுகிறேன். தி.க.சி.யின் நூற்றாண்டை நோக்கிய (30.03.2025 இல் நூற்றாண்டு தொடங்குகிறது) இத்தருணத்தில், அவரைப் போற்றிப் பேசும் நல்வாய்ப்பாக இப்பதிவைச் செய்கிறேன்.

**தி.க.சி.யின் ஆளுமையைப் புரிந்துகொள்ள அவரது வாழ்க்கை நிகழ்வுகளைப் பின்வரும் வகையில் தொகுத்துக் கொள்வோம்.**

• நெல்லை வாலிபர் சங்கத்துடன் இணைந்து, நண்பர்களுடன் ‘இளந்தமிழன்’ கையெழுத்துப் பத்திரிக்கை நடத்துதல் மற்றும் வல்லிக் கண்ணன் அவர்களோடு தொடர்புகொண்டு செயல்பட்ட தி.க.சி (1941-1946).

• நெல்லையில் ‘கலைஞர் கழகம்’ என்னும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் செயல்பட்ட தி.க.சி (1947-1954).

• நெல்லையில் ‘முற்போக்கு எழுத்தாளர் மன்றம்’ என்னும் அமைப்பில் நண்பர்களோடு செயல்பட்ட தி.க.சி. (1955-1958)

• சிந்துபூந்துறை சண்முகம் அண்ணாச்சி அவர்களுடன் இணைந்து நூல் வெளியீட்டுத் துறையில் செயல்பட்ட தி.க.சி (1952 1962).

• வங்கி ஊழியராக (1948-1964) வாழ்ந்த தி.க.சி. அவ்வமைப்பின் தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபட்டு வாழ்ந்த காலம்.

தமது ஏழாவது வயதில் தந்தையை இழந்த தி.க.சி. தனது தாயின் அரவணைப்பில் வளர்ந்ததாகக் கூறுகிறார். இந்துக் கல்லூரியோடு தொடர்புடைய நெல்லை வாலிபர் சங்கத்துடன் இணைந்து செயல்படத் தொடங்குகிறார். கையெழுத்துப் பத்திரிக்கை நடத்துகிறார்கள். ‘இதய ஒலி’ எனும் கையெழுத்துப் பத்திரிக்கையை நடத்திக் கொண்டிருந்த வல்லிக்கண்ணனை நண்பர்களுடன் சந்திக்கிறார். தி.க.சி நண்பர்களுடன் இணைந்து நடத்தும் ‘இளந்தமிழன்’ இதழில் வல்லிக்கண்ணன் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். அரசாங்க வேலையை உதறிவிட்டு முழுநேர எழுத்தாளராக செயல்பட்டுக் கொண்டிருந்த வல்லிக்கண்ணன் அவர்களோடு 1941இல் தி.க.சிக்குதொடர்பு ஏற்படுகிறது. இவரது ஆளுமை வளர்ச்சியில் வல்லிக்கண்ணன்

பெரும் தாக்கம் செலுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. தி.க.சி. வல்லிக்கண்ணனைத் தமது குருநாதர் என்றே சொல்லிக்கொண்டார்.

தி.க.சி.யோடு பேசும் வாய்ப்பு ஏற்பட்டால், வல்லிக்கண்ணன் பற்றி பேசாமல் இருக்கமாட்டார். அதைப்போல் வல்லிக்கண்ணன் அவர்களைச் சந்தித்தால், தி.க.சி. பற்றி நிறையப் பேசுவார். சோசலிசக் கருத்தாக்கம் மீது நம்பிக்கைகொண்ட நண்பர்களாக இவர்கள் வாழ்ந்தனர். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, சென்னை நகரத்தில் நடைபெறும் முற்போக்கான கலை இலக்கிய நிகழ்வுகள் அனைத்திலும் இவ்விருவரைக் காண முடியும். சென்னை நகரத்தில் கலை இலக்கியம் தொடர்பான ஈடுபாடு உடைய இளைஞர்களிடத்தில், இவ்விருவரது தாக்கம் கணிசமான அளவில் உண்டென்றே கூறமுடியும்.

இளைஞனாக வளரும்போதே, வாசிப்பதில் மிகுந்த ஈடுபாடு உடையவராகவும் ஒரு கட்டத்திற்குப் பிறகு பாரதி மீது ஆழ்ந்த ஈடுபாடு மிக்கவராக மாறி, வாழத் தொடங்கினார் தி.க.சி. 1940 1950 காலச்சூழல் என்பது பிரித்தானியர்கள் இந்தியாவை விட்டு வெளியேறும் காலமாக இருந்த அதே நேரத்தில், இடதுசாரி இயக்கங்கள் வீரியத்தோடு வளர்ந்து கொண்டிருந்த காலம் அது. தி.க.சி. இடதுசாரி கருத்துநிலைகளை உள்வாங்கிய இளைஞனாகவே வளரத் தொடங்கினார்.

1947இல் தொ.மு.சி. ரகுநாதன் அவர்களுடனும் இணைந்து 'கலைஞர் கழகம்' என்னும் அமைப்பில் பல நண்பர்களுடனும் செயல்படத் தொடங்கினார். இந்த அமைப்பு குறித்து தி.க.சி.தனது 1948ஆம் ஆண்டு (4.1.1948) நாட்குறிப்பேட்டில் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

> ***"இன்றைய கழகக் கூட்டத்திற்கு (கலைஞர் கழகம்) சம்பந்த மூர்த்தி தலைமை வகித்தார். கு.ஸ்ரீனிவாசனின் நாடகத்தை கு.ஸ்ரீ.யே வாசித்தார். சபாபதியின் (கோவில்பட்டி பஞ்சப் பிரதேசத்துக்குத் தலைவர் சுற்றுப்பிரயாணம் செய்த விஷயத்தைப் பற்றிய) கண்டனத் தீர்மானம் கடுமையான விவாதம் நடந்து வாபஸாயிற்று". (தி.க.சி. நாட்குறிப்புகள்: 26:2014).***

மேற்குறித்த செய்தியின் மூலம் கலை இலக்கியத்துறையில் தி.க.சி.யின் செயல்பாடுகள் எவ்வகையில் இருந்தன? என்பது பற்றித் தெரிந்து கொள்ளமுடிகிறது. கோவில்பட்டிப் பகுதியில் உள்ள பஞ்சம் குறித்த விவாதத்தையும் இக்குழுவினர் மேற்கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. நாட்குறிப்பேட்டில் கோவில்பட்டிப் பஞ்சம் தொடர்பான விரிவான செய்திகள் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

'தி.க.சி. நாட்குறிப்புகள்' (தொகுப்பு: வே. முத்துக்குமார்) எனும்

நூலின் மூலம் தி.க.சி என்ற மனிதரின் அரசியல் செயல்பாடுகள், தொழிற்சங்கச் செயல்பாடுகள், வாசிப்பு முறைமைகள், அவரது ஈடுபாடுகள், குடும்ப உறவுகள் ஆகிய பல செய்திகளின் விரிவான பரிமாணத்தை அறிய முடிகிறது. 1940கள் தொடங்கி அந்தப் பத்தாண்டுகளின் இறுதிக் காலங்களில் தி.க.சி.யின் செயல்பாடுகளை அறிய உதவும் இந்த ஆவணத்தில் மூலம், அவரது இயல்பான பண்புகள், மனிதாபிமான அணுகுமுறைகள் ஆகிய பல கூறுகளை அறிவதற்கான தரவாக இந்த நாட்குறிப்பேடு அமைந்திருக்கிறது.

தொ.மு.சி. தமது பேட்டி ஒன்றில் (இரா. சீனிவாசன்: ‘சாந்தி’ இதழ் குறித்த ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு.1989). கலைஞர் கழகம் குறித்தும் அதில் டி.செல்வராஜ் மற்றும் தி.க.சி. ஆகியோர் குறித்தும் கூறியிருக்கிறார். அந்தப் பேட்டியில் 1954இல் தி.க.சி., டி. செல்வராஜ் ஆகியோரோடு இணைந்து நெல்லையில் ‘முற்போக்கு எழுத்தாளர் மன்றம்’ உருவாக்கியது குறித்தும் பதிவு செய்துள்ளார். இம்மன்றத்தின் மூலமாக ‘புதுமைப்பித்தன் நினைவு’ சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தினர். இப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ‘சாந்தி’ இதழில் வெளிவந்த, சுந்தர ராமசாமி அவர்களின் ‘தண்ணீர்’ கதைக்கு ரூ. 100 பரிசளிக்கப்பட்டது. இவ்விழா நாடகக்கலைஞர் தி.க. சண்முகம் அவர்கள் தலைமையில் 1955இல் நடந்தது. இவ்வமைப்பில் ப.சீனிவாசன், நா. வானமாமலை ஆகியோரும் இணைந்து செயல்பட்டனர். தொ.மு.சி.ரகுநாதன், நா.வானமாமலை ஆகியோருடன் இணைந்து இக்காலங்களில் தி.க.சி. செயல்பட்டார். திருநெல்வேலிப் பகுதியில் இடதுசாரி கண்ணோட்டத்துடன், கலை இலக்கியங்களில் ஈடுபடுபவர்களாக அக்காலத்தில் கி.ராஜநாராயணன், சுந்தரராமசாமி ஆகியோர் செயல்பட்டனர். இவர்களுடைய செயல்பாடு நெல்லை முற்போக்கு எழுத்தாளர் மன்றத்துடன் தொடர்புடையதாக இருந்தது. 1954இல் ரகுநாதன் நடத்திய ‘சாந்தி’ இதழில் வெளியான 40 கதைகளில் 10 கதைகள் சுந்தரராமசாமியின் கதைகள் என்பதை அறியமுடிகிறது. அன்றைய இடதுசாரி இயக்கத்தின் விவசாயத் தொழிலாளர் இயக்கத்தில் கி. ராஜ நாரயணன் முக்கியப் பங்கு எடுத்துச் செயல்பட்டார். இந்தச் சூழலை அடிப்படையாகக் கொண்டே தி.க.சியை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நெல்லை சிந்து பூந்துறையில் வாழ்ந்த தோழர் சண்முகம் அண்ணாச்சி, தமிழில் இடதுசாரி மரபுசார்ந்த எழுத்துக்களை அச்சிட்டு, ‘நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ்’ மூலம் வெளிக்கொண்டு வந்தார். அவருக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டவர் தி.க.சி.. இப்பதிப்பகத்தின் மூலம் அடிப்படையான மார்க்சிய நூல்கள் பல

தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடப்பட்டன. ஜனசக்தி பிரசுரலாயம் 1940களில் செய்து கொண்டிருந்த பணியை 1950களில் இப்பதிப்பகம் செய்தது. அவர்கள் வெளியிட்ட சில நூல்கள் வருமாறு: 'அரசியல் போதனை மலர்கள்', 'பாட்டாளி வர்க்கமும் பாட்டாளிக் கட்சியும்' மற்றும் பல்வேறு லெனின் நூல்கள்; வீர நினைவுகள் (ஜீலியஸ் பூசிக்), நீல விழியாள் ('சாந்தி' கதைகள்) மற்றும் பல்வேறு படைப்புகள் வெளிவந்தன. சீன இலக்கியங்களை தி.க.சி இக்காலத்தில் மொழியாக்கம் செய்தார். அவை மேற்குறிப்பிட்ட பதிப்பகத்தின் மூலம் வெளிவந்தன. நா.வா. மொழியாக்கம் செய்த நூல்களும் இப்பதிப்பகத்தின் மூலம் வெளிவந்தன. தோத்தாத்ரி எழுதிய அறிவியல் நூல்களையும் இவர்கள் வெளி யிட்டனர். 1950களில் வளமான இடதுசாரி மரபு சார்ந்த அச்சு ஊடகம் நெல்லையில் செயல்படுவதற்கு தி.க.சி.யின் பங்களிப்பு முதன்மையானது. இவ்வகையான தகவல்கள் பொதுவெளியில் விரிவாகப் பதிவாகவில்லை. அவை முழுமையாக வெளிவரும்போது தி.க.சியின் பங்களிப்பை புரிந்துகொள்ள முடியும்.

'அறிவு' (1936) என்னும் இதழ் சாத்தான் குளம். அ. இராகவன் மற்றும் தோழர்.ப. ஜீவா ஆகியோர்களால் நடத்தப்பட்ட முதல் இடதுசாரி கருத்துநிலை சார்ந்த இதழ் என்று கூறமுடியும். 1937இல் ஜனசக்தி அப்பணியைத் தொடர்ந்து நடந்தத் தொடங்கியது. 1940களில் இறுதியில் 'ஜனயுகம்', 'ஜனநாயகம்', 'முன்னணி' ஆகிய இதழ்கள் கம்யூனிஸ்ட்கட்சியால் நடத்தப்பெற்றவை. 'ஜனயுகம்' இதழைத் தான் ஆசிரியராக இருந்து நடத்தியதாகத் தோழர், கவிஞர் தமிழ்ஒளி பதிவு செய்துள்ளார். இவ்விதழ்களின் தொடர்ச்சியாக, இஸ்மத் பாஷாவின் 'சமரன்' (1952), கே.சி.எஸ். நடத்திய 'நீதி', தொ.மு.சி. ரகுநாதனின் 'சாந்தி' (1954), விஜய பாஸ்கரனின் அவர்களின் 'சரஸ்வதி' (1954) ஆகிய இதழ்கள் ஐம்பதுகளில் வெளிவந்தன. இவற்றின் உச்ச வளர்ச்சியாக 'தாமரை' (1959) வெளிவரத் தொடங்கியது. இவ்வகையான இடதுசாரி இதழ்களோடு தி.க.சி. கொண்டிருந்த உறவு ஆழமானது. இவ்விதழ்களில் இவர் மேற்கொண்ட பல்வேறு விவாதங்கள், இடதுசாரிக் கருத்துநிலை சார்ந்தவர்களிடத்தில் தாக்கங்களை உருவாக்கின: எடுத்துக்காட்டாக 'சரஸ்வதி'யில் நடந்த விவாதத்தைக் கூறமுடியும். 'வீர வழிபாடு வேண்டாம்' என்று புதுமைப்பித்தனை விமர்சனம் செய்து தி.க.சி. சரஸ்வதியில் எழுதினார். புதுமைப்பித்தன் மறைந்தபின் 1952 இல் புதுமைப்பித்தன் மலரைச் சுந்தரராமசாமி கொண்டு வந்தார். 1948இல் புதுமைப்பித்தன் வாழ்க்கை வரலாற்றை தொ.மு.சி. எழுதி வெளியிட்டார். இந்தச் சூழலில் புதுமைப்பித்தன் குறித்த தி.க.சி.யின் விவாதங்கள் பல்வேறு தரப்பிலும் விவாதத்திற்குள்ளாக்கப்பட்டது.

புதுமைப்பித்தன் ஆக்கங்களில் உள்ள “நம்பிக்கை வறட்சி” எனும் கருத்துநிலையை சோசலிச எதார்த்தவாதக் கண்ணோட்டத்தில் தி.க.சி. அணுகினார். இவ்வகையில் 1950களில் நிகழ்ந்த இடதுசாரி கருத்துநிலை சார்ந்த அனைத்துப் பணிகளிலும் கம்யூனிஸ்ட்கட்சி சார்ந்து செயல்பட்டவராகத் தி.க.சி.யைக் கூறமுடியும். விரிவான விவரங்களுடன் இத்தன்மை குறித்து விவாதிக்கும் தேவை இருப்பதாகக் கருகிறேன்.

கலை இலக்கியம் தொடர்பான இயக்கப் பணிகள் மற்றும் அச்சு ஊடகம் சார்ந்த செயல்பாடுகள் குறித்து மட்டும் நம்மால் ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது. 1945-1964 காலத்தில் வங்கி ஊழியராகச் செயல்பட்ட போது நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளமுடியாத, தொழிற்சங்கவாதியாக தி.க.சி. செயல்பட்டார். அவரது 1948ஆம் ஆண்டு நாட்குறிப்பேட்டில் இச்செயல்பாடுகள் குறித்த சில பதிவுகள் உள்ளன. இது தொடர்பான தி.க.சி. பின்வரும் பதிவைச் செய்துள்ளார். “19 ஆண்டுகளாக, 1945 1964 வரை வங்கி ஊழியராகவும் தொழிற்சங்கவாதியாகவும் தமிழகத்திலும் கேரளத்திலும் நான் பெற்ற அனுபவங்களை ஒரு நாவலாகச் சித்திரிக்க வேண்டும் என்கிற எனது பேராசை, பல்வேறு காரணங்களால் இன்று வரையில் நிறைவேறவே இல்லை”. (தி.க.சி. நாட்குறிப்பு 16:2014) தி.க.சியின் இந்தப் பக்கம் குறித்து அறியாமல் போனது பெரும் இழப்பு. தொழிற்சங்க ஈடுபட்டால் பல்வேறு ஊர்களுக்கும் அவர் இடமாற்றம் செய்யப்பட்டதும் இறுதியாக அந்த வாழ்க்கையின் கொடுமையிலிருந்து 1964இல் வெளியேறவும் செய்தார். தொழிற்சங்க தி.க.சியைத் திறனாய்வாளர் தி.க.சி.க்குள் காண இயலாமல் போனதைப் புரிந்துகொள்ள வேண்டும். அன்றைய தொழிற்சங்க வரலாறு என்பது இடதுசாரி இயக்க வரலாறுகளோடு இணைந்தது. இதில் தி.க.சி.யின் பல்வேறு பயணங்களை அறிந்துகொள்ள முடிகிறது.

தி.க.சி எனும் ஆளுமையைப் புரிந்துகொள்ள, இளமைக்கால இயக்கச் செயல்பாடுகளில் ஈடுபடத் தொடங்கிய காலம் தொடங்கி, வங்கிப் பணியைத் துறந்து சென்னையில் சோவியத் செய்தித்துறை அலுவலராகப் பணியேற்பதோடு (1941-1963) ஒரு தொகுப்பாகக் கொள்ளலாம். சென்னை வாழ்க்கையில், சோவியத் நாடு அலுவலகம், மற்றும் ‘தாமரை’ இதழ்ப்பணி (1965-1972) ஆகிய காலத்தை, இன்னொரு தொகுப்பாகக் கொள்ளலாம். இதில் சோவியத் செய்தித்துறைக் குறித்த தி.க.சி.யின் பதிவு வருமாறு.

***“சோவியத் செய்தித்துறையில் தோழர் ஏ.எஸ். மூர்த்தியின் (சம்பந்த மூர்த்தி) இடையறாத ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் ‘சரஸ்வதி, விஜய பாஸ்கரன், தொ.மு.சி. ரகுநாதன், மாஜினி, கவிஞர்***

*கே.சி.எஸ். அருணாசலம் மற்றும் பல நண்பர்களுடன் இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணியாற்றியதை ஓர் ஆவணமாகப் பதிவு செய்யலாம். அதுவும் என்னால் இயலவில்லை. மிக வருந்துகிறேன்.'' (தி.க.சி. நாட்குறிப்பு. 18:2014).*

தி.க.சி.யின் தொழிற்சங்க வாழ்க்கை குறித்து அறிய இயலாமல் போனது போலவே அவரது சோவியத் செய்தித்துறை சார்ந்த வாழ்க்கையும் நமக்குக் கிடைக்கவில்லை. தன்னைச் சமூகத்திற்கு ஒப்படைத்த மனிதர்களின் வாழ்க்கை குறித்தத் தரவுகள் இவ்வாறு அறிய முடியாமல் போகிறது. தி.க.சி.யின் 'தாமரை'இதழ்ப் பங்களிப்பு அனைத்துத் தரப்பிலும் விதந்து பேசப்படுகிறது. அவரது 'தாமரை' இதழ் சார்ந்த பணிகளின் மூலம், அறியலாகும் ஆளுமைக் கூறுகளை பின்கண்டவாறு தொகுக்கலாம்.

• 1950களில் பல்வேறு இடதுசாரி கலை இலக்கிய அமைப்புகளின் செயல்பாட்டில் தன்னை இணைத்துக் கொண்டவர் தி.க.சி. இந்த மரபின் தொடர்ச்சியாக, தாமரை இதழ் மூலம் அவர் பதிவு செய்திருக்கும் பல்வேறு கலை இலக்கிய அமைப்புகள் தொடர்பான விவரணங்கள்.

• பாரதி மீது அவருக்கிருந்த ஈடுபாடு காரணமாக 'தாமரை' இதழ் வழி கட்டமைந்த 'பாரதி இயல்' குறித்த ஆக்கங்கள்.

• சோவியத் செய்தித்துறையில் பணியாற்றிக் கொண்டிருப்பதை வாய்ப்பாகப் பயன்படுத்தி, சோவியத் அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகிய பிற குறித்தப் பதிவுகளை 'தாமரை' இதழில் இடம் பெறச் செய்தமை.

• கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்பட்ட பல்வேறு தலைவர்களின் அரிய ஆக்கங்களைத் 'தாமரை'யில் வெளிவரச் செய்த அரிய பதிவுகள்.

• தமிழ் இலக்கியம் படித்துக் கொண்டிருந்த மற்றும் பயிற்றுவித்த தமிழாசிரியர்களின் ஆக்கங்களை வெளியிட்டுள்ள பாங்கு.

• 'கதைக்கு கரு' என்னும் தொடர் மூலம் பல்வேறு படைப்பாளிகளின் படைப்புச் சூழல் குறித்துப் பதிவாகியுள்ள படைப்பு வரலாறு.

• ஈழத்துப் படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு முதன்மை கொடுத்து வெளியிட்ட சிறப்பு.

• அட்டைப்படங்களில் படைப்பாளிகளின் நிழற்படங்களை வெளியிட்டு அங்கீகரித்த தன்மை.

• 'எழுத்து' இதழ் (1959) வழி உருவான புதுக்கவிதை மரபின் இன்னொரு பிரிவினரை, முதன்மைப்படுத்திக் கவிதைகளை

வெளியிட்டதன் மூலம், புதுக்கவிதை மரபில் புதிய மரபுகளை இனம் காட்டியமை.

- 'மலரும் அரும்புகள்' எனும் தலைப்பில் முகமறியாத புதிய சிறுகதைப் படைப்பாளிகளை இனம் கண்டு அவர்களது ஆக்கங்களை வெளியிட்ட மிக அரிய நிகழ்வு.

தி.க.சி.பொறுப்பில் (1965-1972) எட்டு ஆண்டு 'தாமரை' இதழ் வெளிவந்திருப்பதைக் காண முடிகிறது. மேலே தரப்பட்டுள்ள பல்வேறு கூறுகளையும் உரையாடலுக்குப்படுத்த தி.க.சி. பொறுப்பாசிரியராக இருந்த 'தாமரை' இதழ் தரவாக அமைகிறது. தமிழக இடதுசாரிக் கண்ணோட்டம் சார்ந்த ஆக்கங்கள் குறித்த வரலாற்றில், இவை பெறுமிடம் குறித்த உரையாடலை மேற்கொள்ளும் தேவையுண்டு.

பொது வெளியில் செயல்படத் தொடங்கிய காலம் முதல் இயக்கம் சார்ந்து செயல்படுவதில் நம்பிக்கையுடையவராக தி.க.சி. இருந்தார். 1947-1964 இடைப்பட்ட காலத்தில் அவரது செயல்பாடுகள் மூலம் இதனைப் புரிந்துகொள்ள பல்வேறு நிகழ்வுகளை முன்பகுதியில் விவாதித்தோம். அவர் 'தாமரை'யில் பணியாற்றிய காலத்தில், இத்தன்மையை மேலும் வளர்த்தெடுத்துள்ளார்.

தமிழ்நாடு வாசகர் பேரவை (தாமரை: மார்ச்.1968), பூம்பொழில் இலக்கிய வட்டம் (நவம்.1968) ஸ்ரீவில்லிப்புத்தூர் இலக்கிய வட்டம் (அக்.1970), பொள்ளாச்சி மக்கள் எழுத்தாளர் மன்றம். (அக் 1970), திருச்சி மக்கள் இலக்கியக் குழு (அக். 1970), இராசபாளையம் இலக்கிய வாசகர் குழு (மே 1970), பரமக்குடி மக்கள் இலக்கிய மன்றம் (மே 1970), தமிழ் இலக்கியப் பேரவை (ஜூன் 1970) சென்னை மக்கள் எழுத்தாளர் சங்கம் (ஜூலை 1971), ஆகிய அமைப்புகள், கலை இலக்கியம் தொடர்பாகச் செயல்பட்ட பதிவுகள் 'தாமரை' இதழ்களில் பதிவாகியுள்ளன. இவ்வமைப்புகளில் 'தாமரை' இதழ்கள் குறித்த விமர்சனக் கூட்டங்கள் நடைபெற்றதை அறிகிறோம். சமகாலத்தில் வெளிவந்த நாவல்கள் குறித்த திறனாய்வுக் கூட்டங்கள் நடைபெற்றதை அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக, திருச்சி மக்கள் இலக்கியக்குழு, ஈழத்து எழுத்தாளர் செ. கணேசலிங்கம் அவர்களோடு நடத்திய உரையாடல் பதிவாகியுள்ளது. மதுரை வாசகர் வட்டத்தில் 'தீபம்' இதழில் தொடராக வெளிவந்த அசோகமித்திரனின் 'கரைந்த நிழல்கள்' குறித்த விமர்சனக் கூட்டம் நடைபெற்றதை அறிகிறோம். இதைப்போல் தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' நாவலை அந்த ஆண்டின் சிறந்த நாவலாக இக்குழு பரிந்துரை செய்த செய்தியும் இடம்பெற்றுள்ளது. கோவையில் இயங்கிய பூம்பொழில் வட்டம், புதுக்கவிதைகள் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கம்

நடத்தியிருப்பதை அறிகிறோம். இதனை முல்லை ஆதவன் முன்னின்று நடத்தியுள்ளார்.

மேலே குறித்துள்ள சிறுசிறு அமைப்புகளின் செயல்பாடுகளை தி.க.சி. பதிவு செய்துள்ளார். இவ்வமைப்புகளில் செயல்பட்டவர்கள் பின்னர் இடதுசாரிக் கண்ணோட்டமுடையவர்களாகச் செயல்படத் தொடங்கி யிருப்பதைக் காண்கிறோம். கலை இலக்கியச் செயல்பாடுகளை மிக விரிந்த தளத்தில், இடதுசாரிப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டவர்களைத் 'தாமரை' இதழின் மூலம் பதிவு செய்த செயல், மிக முக்கியமானது. இவ்வகையான அமைப்புகள், தமிழில் இடதுசாரி மரபு சார்ந்த ஆக்கங்கள் வளருவதற்குத் தளம் அமைத்ததை, நுணுக்கமான விவரங்கள் மற்றும் கள ஆய்வுகள் வழி உறதிப்படுத்தமுடியும். தி.க.சி. என்ற ஆளுமையின் தொலைநோக்காக இதனைக் கருதமுடியும். "தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு" (1975) என்று சி.எஸ்.சுப்பிரமணியன் (1910 -2011) எழுதியுள்ள சிங்காரவேலர் வாழ்க்கை வரலாற்று நூலில், 1927-1930 ஆம் ஆண்டுகளில் சுயமரியாதை இயக்கத்தின் மூலம் நூற்றுக்கணக்கான படிப்பகங்கள், தலைவர்களின் பெயர்களில் தமிழகத்தில் உருவாக்கப்பட்டது குறித்துப் பதிவு செய்துள்ளார். தமிழ்ச் சூழலில் அன்று உருவாகிய சுயமரியாதை இயக்க எழுச்சியையும் 1960களில் உருவான இடதுசாரிக் கண்ணோட்ட ஆக்க இலக்கிய உருவாக்கத்தையும் இணைத்துக் காண வேண்டும். இதன் மூலம் தமிழ்ச் சமூகத்தின் நுண் அலகுகளில் உருவான மாற்றங்களைப் புரிந்து சொல்ல முடியும். அவை மேலும் மேலும் தொடர்ந்தனவா? என்பது வேறு விவாதம். ஆனால் இவ்வகையான கலை இலக்கிய அமைப்புகள் குறித்த பதிவைத் 'தாமரை' இதழ் செய்திருப்பதும் அதற்கு மூலமாக தி.க.சி. இருந்ததும் இன்றைய சூழலில் விதந்து பேச வேண்டிய ஒன்றாகக் கருதவேண்டும்.

பாரதி மீது தி.க.சி. கொண்டிருந்த ஆழமான ஈடுபாட்டின் மூலம், ஜீவா வளர்த்தெடுத்த பாரதி இயலை அதன் அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்றுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத் 'தாமரை' இதழ் பாரதி தொடர்பான இதழாகவே வெளிவந்திருப்பதைக் காண்கிறோம். 1950களில் 'சரஸ்வதி' இதழ் மூலம் பாரதி ஆய்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தொ.மு.சி, 'தாமரை' இதழ்களில் பாரதி ஆய்வுகளை மிக விரிவாக மேற்கொண்டிருக்கிறார். பாரதி இயலில் தொ.மு.சியின் தனித்த இடத்தை அவரது **"பாரதி: காலமும் கருத்தும்"** நூல்வழி அறியமுடியும். அதில் இடம்பெற்றுள்ள பல கட்டுரைகள் 'தாமரை' இதழ்களில், தி.க.சி. பொறுப்பாக இருந்தபோது வெளிவந்தவை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்; செப்.1966 பாரதி மலரில் பாரதி குறித்துக் கட்டுரை

எழுதியவர்கள், ரகுநாதன், எஸ்.இராமநாதன், இளம்பாரதி, ஆர். சூடாமணி, நா. பார்த்தசாரதி, பெ.நா. அப்புசாமி உள்ளிட்ட 12 பேர். இது ஓர் எடுத்துக்காட்டு மட்டுமே. இவ்வகையில் ஜீவாவுக்குப் பிறகு பாரதி குறித்த ஆய்வில் மிகப்பெரும் வீச்சை உருவாக்கியது 'தாமரை' என்று சொல்லமுடியும். இதற்கும் மூலமாக தி.க.சி இருந்திருக்கிறார்.

1967 செப். தாமரை பாரதிதாசன் மலராக வெளிவந்தது. இடதுசாரிக் கண்ணோட்டத்தை முதன்மைப்படுத்திப் பேசியவர்கள், பாரதிதாசனை மிகவும் காலம் கழித்தே அங்கீகரித்தார்கள். ஆனால் தி.க.சி. தனது குருநாதர் வல்லிக்கண்ணன் மரபில் பாரதிதாசனைத் தொடர்ந்து கொண்டாடினார். இதன் வெளிப்பாடே பாரதிதாசன் மலர். பாரதிதாசன் குறித்து இம்மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் விதந்து பேசத்தக்கவை. பாரதிதாசனும் இடதுசாரி இயக்கமும் என்று நாம் அடையாளப்படுத்துவோமானால் அதில் முதல் நபராக தி.க.சி.செயல்பட்டிருப்பது வரலாற்றுப் போக்கில் தனித்துப் பேசத்தக்கது.

1967 அக். தாமரை இதழ் 'சோவியத்' யூனியன் பொன்விழா மலராக வெளிவந்தது. சோவியத் படைப்பாளிகள் பலரது ஆக்கங்களை வெளியிட்டதோடு, சோவியத் இலக்கியங்கள் தொடர்பான விமர்சனக் கட்டுரைகள் 'தாமரை' இதழில் இந்தக் காலத்தில் தொடர்ந்து வெளிவந்தன. சோசலிச எதார்த்தவாதம், சோசலிச எதார்த்த விமரிசனவாதம் ஆகிய பல கோட்பாடுகள் குறித்து பல கட்டுரைகள் வெளிவந்தன. தமிழ் இலக்கியம் மற்றும் கலை குறித்து ஆய்வு செய்த சோவியத் ஆய்வாளர்கள் 'தாமரை'யில் அறிமுகப்படுத்தப்பட்டனர். கார்க்கியின் கதைகள் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட்டன. சோவியத் செய்தித் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்ததன் மூலம் பெற்ற வாய்ப்புக்களை தி.க.சி. 'தாமரை'யில் பதிவு செய்திருக்கிறார். 1950களில் தமிழ்ச் சூழலில் பரவலாக அறியப்பட்டிருந்த சோவியத் கலை இலக்கியம் தொடர்பான கூறுகள் 1960களில் 'தாமரை' மூலமாக நிலைபேறு கொள்வதில் தி.க.சி.யின் இடம் தனித்தது. இத்தன்மை மிக முக்கியமானது.

கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேரத் தொண்டர்களாகவும் தலைவர்களாகவும் பணியாற்றிய பலரின் ஆக்கங்களை 'தாமரை' வெளிக்கொண்டு வந்துள்ளது. பேரா.நா. வானமாமலை, தோழர் சிந்துபூந்துறை சண்முகம், தோழர்கள் ப. மாணிக்கம், மணலி.கந்தசாமி கே. பாலதண்டாயுதம், ஆர். நல்லகண்ணு, கே.பி.கே. தங்கமணி, கே.இராமநாதன் மற்றும் தோழர்கள் தா.பாண்டியன், பொன்னீலன் ஆகியோர் இக்காலத்தில்

தாமரையில் தொடர்ந்து எழுதியிருப்பதைக் காண்கிறோம். கட்சியில் நேரடியாகச் செயல்படும் தோழர்கள் கலை இலக்கிய மரபு குறித்துக் கொண்டிருந்த கருத்துநிலைகள் பதிவாகியுள்ளது. தோழர் கே.பாலதண்டாயுதம் அவர்களின் தத்துவார்த்த உரையாடல்கள் சார்ந்த கட்டுரைகள் தரம் மிக்கவை. தாமரையில் அக்காலத்தில் அவர் எழுதியவை பின்னர் நூல்வடிவில் வெளிவந்தன. மனிதநேயம் என்பதைத் தத்துவ நிலைப்பாட்டிலிருந்து உரையாடலுக்கு உட்படுத்தியது அவரது எழுத்து.

தமிழ் மாணவர்களாகவும் தமிழாசிரியர்களாகவும் இருந்த பலர் ‘தாமரை’ இதழில் எழுதினர். எழில் முதல்வன், அழகப்பன், முல்லை ஆதவன், தா.வே. வீரசாமி, க.ப. அறவாணன், கி.நாச்சிமுத்து ப.மருதநாயகம், அ.அ.மணவாளன் ஆகிய பிறர் இக்காலங்களில் பல்வேறு கட்டுரைகளைத் ‘தாமரை’யில் எழுதினர். நாட்டார் வழக்காற்றியல், கவிதை, பிற துறைக் கட்டுரைகள் அவைகளாகும். 1959இல் ‘தாமரை’ தொடங்கியபோதே, தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்களைத் தோழர்.ஜீவா தாமரையில் எழுதச் செய்திருப்பதைக் காண்கிறோம். அந்த மரபைத் தி.க.சியும் தொடர்ந்து செயல்படுத்தி வந்திருப்பதைக் காண்கிறோம்.

நவீனப் படைப்பாளிகள் கதை எழுதும் சூழல், மனநிலை ஆகிய பிறவற்றைப் பதிவு செய்யும் **‘கதைக்கரு’** எனும் தொடரை எழுத்தாளர்களை எழுதச் செய்து வெளியிட்டார். கி.ராஜநாரயணன் தொடங்கி பல எழுத்தாளர்கள் இப்பகுதியில் எழுதியுள்ளனர். இப்பகுதியை தொகுத்து தனியாகக் கொண்டு வரும் தேவை இருக்கிறது. ஈழத்துப் படைப்பாளர்கள் பலரும் தாமரையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். செ.கணேசலிங்கன், கே.டேனியல், ஆழியான், பெணடிக் பாலன், செ.யோகநாதன், மல்லிகை டொமினிக் ஜீவா, நீர்வை. பொன்னையன் ஆகியோருடைய சிறுகதைகள் தாமரையில் வெளிவந்துள்ளன. ‘மலரும் அரும்பு’ எனும் பகுதியிலும் சிறுகதை மலரிலும் (1967ஜூலை) இவர்களுடைய கதைகள் இடம்பெற்றுள்ளன. ஈழத்தில் இடதுசாரிக் கண்ணோட்டம் சார்ந்த ஆக்கங்களை வெளிக்கொண்டு வருவதற்கான சூழல் குறைவாக இருந்தபோது, ‘தாமரை’ அந்த இடத்தை நிறைவு செய்தது. செ. கணேசலிங்கம், கே.டேனியல் போன்றோர் ஆக்கங்கள் தமிழக இதழ்களில் மிகுதியாக வெளிவந்தன. இதில் ‘தாமரை’யின் இடம் தனித்தது. இவ்விதமான நிகழ்வுக்குப் பின்புலமாகத் தி.க.சி. என்ற மனிதர் இருந்தார் என்பதை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது அதன் முக்கியத்துவத்தை இன்று நாம் உணரமுடிகிறது.

இக்காலத்தில் ‘தாமரை’ அட்டைப்படங்களில் பெரும்பாலான

படைப்பாளிகளின் படங்கள் இடம்பெறத் தொடங்கியது. பல்வேறு சோவியத் படைப்பாளர்கள், பாரதி, பாரதிதாசன் படங்களை வெளியிட்டதை நாம் தனித்த ஒன்றாகக் கருதமுடியாது. ஆனால், கே.சி.எஸ். அருணாச்சலம், கு.அழகிரிசாமி, ஆர். சண்முகசுந்தரம், நா.வானமாமலை, டொமினிக் ஜீவா, வில்லிசைக் கலைஞர் கார்க்கி மற்றும் சிந்துபூந்துறை அண்ணாச்சி ஆகியோரின் படங்கள் இடம்பெற்ற நிகழ்வைத் தனித்துப் பார்க்கும் தேவை இருப்பதாகக் கருகிறேன். சமகாலத்தில் செயல்படுவோரை இவ்வகையில் அங்கீகாரம் செய்யும் மரபு, இடதுசாரி இயக்கங்களில் குறைவாகவே இருந்துள்ளது. சமகாலத்தில் செயல்படுவோரைக் கொண்டாடுவதன் மூலம், இயக்கச் செயல்பாடுகள் வீரியமாக வளர வாய்ப்பு உண்டு. இந்தப் பணியை தி.க.சி. செய்தார். ஆளுமைகளின் ஐம்பது ஆண்டு அகவைக் கொண்டாடும் அட்டைப்பட மரபு விதந்து பேசவேண்டியதாகக் கருதலாம்.

1959இல் வெளிவரத் தொடங்கிய 'எழுத்து' இதழ் புதுக்கவிதை மரபில் தனக்கென தனி இடத்தைக் கொண்டு செயல்பட்டது. இந்த மரபின் தொடர்ச்சியாகவும் அதே வேளையில் மாற்றாகவும் செயல்பட்ட பாங்கு தி.க.சி. பொறுப்பாசிரியராக இருந்த 'தாமரை'க்கு உண்டு. நா. காமராசன், மீரா. புவியரசு, சிற்பி, பரிணாமன், கே. முருகையன், கோவேந்தன் ஆகிய பலரின் கவிதைகளை வெளியிட்டதோடு, நா. காமராசன் கவிதைகள் குறித்த விரிவான விமர்சனங்களும் 'தாமரை'யில் வெளிவந்தன. இடதுசாரி கண்ணோட்டமுடைய அறிஞர்களான நா. வானமாலை போன்றோர் புதுக்கவிதை பற்றிக் கொண்டிருந்த விமரிசனங்களை உள்வாங்கியதோடு, அந்த மரபு அடுத்த நிலைக்கு வளருவதற்குத் 'தாமரை' கால்கோள் செய்தது. இக்கவிஞர்கள் குறித்த தி.க.சி.யின் பதிவுகள் சிறப்பாகவே இருந்ததைக் காணமுடிகிறது. நா.காமராசன் ஆக்கங்கள் குறித்துத் தி.க.சி. செய்துள்ள பதிவு வருமாறு:

> *"பகுத்தறிவு, சோசலிசம் என்கிற அடிப்படை இலட்சியங்கள் எனக்குண்டு. அவற்றைக் கலாபோதையோடு நான் பாடுவேன்" என்று கருப்பு மலர்கள் முன்னுரையில் காமராசன் கூறுகிறார். இதை நான் உளமார வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அந்தக் 'கலாபோதை' அவரை மாயாவாதம் (Mysticism), அப்பாலைத் தத்துவம் (Meta Physics) என்ற சரிவுப் பாதைகளில் சில வேளை தள்ளி விடுகிறது என்பதையும், இந்தத் தத்துவங்கள் சோசலிசத்திற்கும் பகுத்தறிவுக்கும் முரணானவை என்பதையும் தோழமை உணர்வோடு நான் அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்." (தாமரை: ஜூலை.1971).*

தி.க.சி. நா.காமராசன் ஆக்கங்களில் நம்பிக்கை வாதமும் நம்பிக்கையின்மை வாதமும் மாறிமாறி வருவதையும் சுட்டிக்

காட்டியுள்ளார். இவ்வகையில் உருவான நா.காமராசன், மீரா, புவியரசு போன்றவர்கள் பின்னர் உருவான வானம்பாடிக் கவி மரபில் மிகத் தாக்கம் செலுத்தினார்கள்: 'எழுத்து' இதழ்க் கவி மரபுக்கு மாற்றான 'வானம்பாடி'க் கவிமரபு உருவானது. இதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்ததில் இக்கால 'தாமரை'யின் பங்கு மிக முக்கியமானது. நவீன தமிழ்க் கவிதை வரலாற்றில், 'எழுத்து' மரபிற்கு மாற்றான 'வானம்பாடி' உருவாக்க மரபு என்ற வரலாற்றை 'தாமரை' சாத்தியப்படுத்தியிருப்பதை நாம் இதுவரை பதிவு செய்யாமல் விட்டுவிட்டோம். இந்த வரலாற்றுக்கு மூலமாக தி.க.சி செயல்பட்டிருப்பதை பதிவு செய்யும் கடமை நமக்குண்டு.

கே.டேனியல், வல்லிக்கண்ணன், வீர.வேலுச்சாமி, சார்வாகன், நீல.பத்மநாதன், கி.ராஜநாராயணன், கர்ணன், வை.ரங்கநாதன், செ.கணேசலிங்கம், பெணடிக், அசோகமித்திரன், ஆர்.சூடாமணி, ம.இராஜராம், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, உ.ரா.வரதராசன், பா.செயப்பிரகாசம், வண்ண நிலவன், ஆழியான், தஞ்சை பிரகாஷ், பொன்னீலன், ம.ந. ராமசாமி, செ.யோகநாதன், சே.இராமசாமி, ஆ.பழனியப்பன், பூமணி, சி.ஆர்.இரவீந்திரன், டி. செல்வராஜ், முத்தானந்தம், அகஸ்தியர், நீர்வை. பொன்னையா, நாகை.ப.ஜீவா எனப் பலரின் சிறுகதைகள் தாமரையில் இக்காலகட்டத்தில் வெளிவந்துள்ளன. இப்பட்டியல் முழுமையானது அன்று. விடுபாடுகள் உள்ளன. தனது முதல் ஆக்கத்தை வெளி யிடுபவர்களை 'மலரும் அரும்பு' என்னும் தலைப்பில் அவர்களது கதைகள் வெளியிடப்பட்டன. இப்பகுதியில், இப்பட்டியலில் உள்ள வீர வேலுச்சாமி, உ.ரா.வரதராசன், வண்ண நிலவன், பூமணி, வேந்தன், ப. ஜீவா, வள்ளி, ம.ந.ராமசாமி, ஆகிய பலர் உள்ளனர். இதுவும் முழுமையன்று. முன்னரே கதை எழுதியவர்களோடு முதன் முதலாகக் கதை எழுதியவர்களை 'மலரும் அரும்பு' என்னும் அடைமொழியோடு வெளியிட்ட தாமரையின் செயல்பாடு, தமிழ்ப் படைப்பு வரலாற்றில் மிகவும் விதந்து பேச வேண்டிய ஒன்று. இதற்குப் பின்புலமாக தி.க.சி. இருந்தார். இப்படைப்பாளிகள் யார்? என்ற உரையாடல் முக்கியமானது.

1930கள் தொடங்கி தமிழில் உருவாகி வந்த ஆக்க இலக்கிய வாணர்கள் என்போர், ஆங்கில மொழி வழி வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள். அதனையே பழக்கமாகவும் கொண்டிருந்தனர். தமிழ்ப்புனைவுலகம் உருப்பெற்ற சூழலில், அத்தன்மையின் தாக்கம் தவிர்க்க முடியாத ஒன்று. இயல்பான நடைமுறையும்கூட. இந்தத் தொடர்ச்சியில்தான் இந்தியாவில் உள்ள பிறமொழி இலக்கியங்கள், ஆங்கிலமொழி இலக்கியங்கள், சோவியத், சீனம் போன்ற நாடுகளிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்ட

இலக்கியங்கள் தமிழ்ச்சூழலில் வாசிக்கப்பட்டன. தமிழில் உருவான புதிய புனைகதையாளர்களும் இந்தப் பின்புலத்தோடுதான் உருவானார்கள். ‘தாமரை’ அறிமுகப்படுத்திய படைப்பாளிகள் மேற்குறித்த நிலையில் முற்றிலும் வேறானவர்கள். ஆங்கிலமொழி வாசிப்பதற்கான வாய்ப்போ, பயிற்சியோ இவர்களுக்குக் கிடைக்கவில்லை. புதுமைப்பித்தன், கு. அழகிரிசாமி, கி.ராஜநாராயணன் மரபுசார்ந்த கதைகளை வாசித்தவர்கள் இவர்கள். முதல் தலைமுறை எழுத்துப்பயிற்சி பெற்றவர்கள். குக்கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய ஆக்கங்கள், புதுமைப்பித்தன் மரபின் தொடர்ச்சியாக உருப்பெற்றவை. இதில் ‘தாமரை’ முன்னத்தி ஏர்ப்பிடித்தது. இதற்கு மூலமாக இருந்தவர் தி.க.சி.. தி.க.சி.யின் இந்தப் பங்களிப்பைத் தமிழ்ச்சமூகம் அங்கீகரித்துள்ளதா? என்ற கேள்வியை எழுப்ப முடியும். தமிழ்ப் படைப்புலக வரலாற்றில் தி.க.சி.க்குத் தனித்த இடமிருக்கிறது. தமிழ்ப்புனைவு மரபை மடைமாற்றம் செய்த மரபு இதுவாகும். இந்த மரபே பின்னர் பெரும் மரபாக வடிவம் பெற்றுள்ளது. இந்தப் பின்புலத்தில் தி.க.சி என்னும் ஆளுமை தமிழ்ப் புனைவு உலகை ஆல்போல் தழைக்கச் செய்தாலும் ஆலமரத்தின் கீழுள்ள விதையாக அவர் மறைந்து, ஒதுங்கி, தன்னை முன்னிலைப்படுத்தாத, அவரது அற மரபை, தமிழ்ச்சமூகம் கொண்டாட வேண்டும். இத்தன்மை குறித்து தி.க.சி. அவர்களின் பதிவு பின்வருமாறு.

> ***“நான் சோவியத் செய்தித்துறை ஆசிரியர் குழுவில் ஒருவனாகப் பணியேற்றேன். இங்கு பணியாற்றிய காலத்திலேயே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கலை இலக்கிய இதழான ஜீவாவின் ‘தாமரை’யில் 1965-1972 வரையில் பொதுப்பதிப்பாசிரியனாக கடமையாற்றும் பேறும் எனக்குக் கிடைத்தது. இந்த மகத்தான பொறுப்பை எனக்களித்த கட்சித் தலைமைக்கு என்னுடைய நன்றி என்றும் உரியது. ‘தாமரையுகம்’ என்ற பெயரில், தாமரையின் சாதனைகள் பற்றியும் முற்போக்கு கலை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு பற்றியும் ஒரு தனி நூலே எழுதலாம். அந்தப் பொறுப்பை இலக்கிய வளர்ச்சியைப் பதிவுசெய்யும் ஆய்வாளர்கள் வசம் விட்டுவிடுகிறேன்.” (தி.க.சி.டைரி குறிப்புகள். 18:2014).***

தி.க.சி.யின் இந்த வேண்டுகோளை நிறைவேற்றும் பொறுப்பு நமக்குண்டு. அன்றைய சூழலில் எழுத்து (சி.சு.செல்லப்பா) ‘தீபம்’ (1965 நா.பார்த்தசாரதி) இலக்கியவட்டம் (1964. க.நா.சு) ‘கணையாழி’ (1965) கண்ணதாசன் (1968) ஆகிய பல இதழ்கள் வெளிவந்தன. இதே காலத்தில் தி.க.சி.யின் ‘தாமரை’யும் வெளிவந்தது. மேற்குறித்த இதழ்களிலிருந்து ‘தாமரை’ எங்கே வேறுபட்டு எங்கே ஒன்றிணைந்து தமிழ்ச் சூழலில் செயல்பட்டது.

அத்தன்மை எவ்வகையில் இடதுசாரிக் கருத்துநிலை மரபை உருவாக்கியது என்ற உரையாடலை நிகழ்த்துவது அவசியம். அதில் தி.க.சி என்னும் மனிதன் எவ்வாறு செயல்பட்டு இருக்கிறார் என்ற புரிதல் அவசியம். ‘தாமரை’யின் ஒன்பதாம் ஆண்டு நிறைவில் அதில் எழுதப்பட்ட தலையங்கம் பின்வருமாறு அமைகிறது.

> ***“புதிய சிந்தனைகள், புதிய வடிவங்கள், புதிய முயற்சிகள் அத்தனைக்கும் தாமரை இடம் கொடுத்துள்ளது. இலக்கியத் தரம் மிக்க கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஆராய்ச்சிகள் முதலிய பல்சுவைப் படைப்புகளையும் தாமரை வாசகர்களுக்கு ஈந்துள்ளது. தரமுள்ள எழுத்துக்கும் தமிழ் இலக்கிய உலகில் இடம் உண்டு என்ற நம்பிக்கையை படைப்பாளிகளிடையில் தோற்றுவித்ததுதான் தனது பெரும் கடமையாக தாமரை எண்ணுகிறது.”***

ஜூலை 1968இல் இந்தப் பதிவை தி.க.சி. செய்திருக்கலாம். இந்தத் தன்மை முழுமையாகத் ‘தாமரை’யில் நடமுறைப்படுத்தப்பட்டதை தி.க.சி எனும் ஆளுமையின் அடையாளமாகக் கருத இயலும்.

‘தாமரை’யில் இக்காலத்தில் தி.க.சி எழுதியது குறைவு. எழுதச் செய்யும் பணியே அவரது நோக்கமாக இருந்தது. மேலே 1941 1964 காலத்தின் தி.க.சி மற்றும் 1965-1972 கால தி.க.சியை நாம் மேலே உரையாடலுக்கு உட்படுத்தினோம். 1972-2014 என்ற பிற்கால அவரது வாழ்க்கைக்குறித்து எழுதுவதற்காகத் தரவுகளைத் தேட வேண்டியுள்ளது. விரிவான தேடலில் அதனைப் பதிவு செய்யவேண்டும். தரவுகளின்றி எப்படிப் பதிவு செய்வது? ஆனால் இந்தக் காலம் குறித்து தி.க.சி கூறியுள்ள பதிவை இங்கு நினைவுப்படுத்திக்கொள்ளலாம். அப்பகுதி வருமாறு:

“இந்தக் கால் நூற்றாண்டில் வெளிவந்த ‘தீபம்’, ‘கணையாழி’, ‘கண்ணதாசன்’, சி.சு.செல்லப்பாவின் ‘எழுத்து’, க.நா.சு.வின் ‘இலக்கிய வட்டம்’, கோமலின் ‘சுபமங்களா’, ‘செம்மலர்’, கோவையிலிருந்து வெளிவந்த ‘வானம்பாடி’ முதலிய இதழ்களின் வளர்ச்சிக்கும் எனது பங்களிப்பை செலுத்தியதில் நான் மிகுந்த மனநிறைவடைகிறேன். அதேபோல் மதிப்பிற்குரிய தமிழ் இலக்கிய அன்பர்கள் ப.லட்சுமணன் மற்றும் பாரதி நடத்தி வந்த ‘இலக்கியச் சிந்தனை’ அமைப்பின் மாதாந்திர கூட்டங்களில் எழுத்தாளர் என்.ஆர்.தாசன் போன்ற நண்பர்களுடன் நான் பங்கேற்றதுண்டு. இந்த வருடங்களில் தான் எனது தேடல்களும் படைப்பாற்றல்களும் பகிர்தல்களும் சிகரத்தை நோக்கி சென்றன. தமிழ்ப்படைப்பாளிகள், பதிப்பாளர்கள், ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், வாசகர்கள் ஆகியோரின் பேரன்பையும் அங்கீகாரத்தையும் நான் பெற்றேன்”. (தி.க.சி.நாட்குறிப்புகள் 1810-2014).

இந்த பதிவு மூலம் ஓரளவு இந்த காலத்தின் தி.க.சியைப் புரிந்துகொள்ளலாம். தமிழ்த் தேசிய மரபிலிருந்து இந்திய தேசிய மரபை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் தமது இறுதிக் காலங்களில் அவர் பதிவு செய்துள்ளார். இது தொடர்பான தரவுகளைக் கொண்டு இக்கட்டுரையை வேறொரு சந்தர்ப்பத்தில் விரித்து எழுத வேண்டும். தி.க.சி.என்னும் ஆளுமை தமிழ்ச் சமூக வரலாற்றில் என்றும் பேசப்படும் ஆளுமை என்பதே அவருக்கான அடையாளமாகப் பதிவு செய்வோம். நூறு ஆண்டுகள் நிறைவுபெறும் தி.க.சி.நம்மோடு வாழ்கிறார்.

**இக்கட்டுரை எழுத உதவிய தரவுகள்:**

- தாமரை இதழ்கள். 1965-1972. ‘கல்மரம்’ நூலகச் சேகரிப்பு.
- முத்துக்குமார்.வே.(தொகுப்பு) தி.க.சியின் நாட்குறிப்புகள். சந்தியா பதிப்பகம். சென்னை.83.

**குறிப்பு** :

தி.க.சி. 25.03.2014 இல் மறைந்தபோது, பனுவல் புத்தக அரங்கில் நடந்த அஞ்சலி உரையின் திருத்தப்பட்ட வடிவம் இக்கட்டுரை. பத்தாண்டுகள் கழித்து தி.க.சி. நூற்றாண்டை நோக்கியப் பதிவாகச் செய்ய மூலமாக அமைந்த தோழர் **கணை.குறிஞ்சி** அவர்களுக்கும், தி.க.சி நூல்களை வெளியிட்ட **சந்தியா நடராசன்** அவர்களுக்கும், தி.க.சி. ஆக்கங்களைத் தொடர்ந்து பதிப்பித்துக் கொண்டுவரும் **வே. முத்துக்குமார்** அவர்களுக்கும், இரங்கல் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த **பனுவல் அமுதரசன்** மற்றும் **சிவ.செந்தில்நாதன்** ஆகியோருக்கும் நன்றி. தி.க.சி. நூற்றாண்டைக் கொண்டாட இப்பதிவு மூலமாக அமையட்டும். நன்றி.

❖❖❖

# மறுவாசிப்புக் கோரும் சிதம்பர ரகுநாதனின் இலக்கிய உரையாடல்கள்

**க. பஞ்சாங்கம்**

ஒவ்வொரு நூலும் அல்லது மனிதரும் முதன்முதலில் நமக்கு எப்படி அறிமுகமானார்கள் என்பதை நினைவுக்கூர்ந்து எழுதினாலே அவை ஓர் அழகான புனை எழுத்தாக மலரும் எனத் தோன்றுகிறது. நானிங்கே நமது காலத்தின் மாபெரும் ஆளுமையான தொ.மு.சி.ரகுநாதன் (1923-2001) என்னுள் எப்படி உட்புகுந்தார் என்பதை முதலில் சொல்லிவிட்டுப் பிறகு அவரது விமர்சன எழுத்துக் குறித்துப் பேசலாம் என்று கருதுகிறேன். தமிழ் மரபில் இது மற்றொன்று விரித்தலாகக் கருதப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றாலும் பின் நவீனத்துவ எழுத்து முறையில் பருமனை பொருளைவிட அதன் அருபமான நிழல் உருவத்திற்கு பெரிய இடம் உண்டு என்பதால் இவ்வாறு எழுதத் தொடங்குகிறேன்.

நான் மதுரை தியாகராசர் கல்லூரியில் இளங்கலை படிக்கிற காலத்திலேயே (1967-1970) ப.காளிமுத்து அண்ணன் பழக்கமானவர், பின்பு சென்னை மாநிலக் கல்லூரிக்கு நான் படிக்கப் போனபோது (1970-1972) அங்கே அவர் பயிற்றுநராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.அது எனக்கும் பல வழிகளிலும் பக்கத் துணையாக அமைந்தது. அவர் திராவிடத் தலைவர்கள், ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் என்று பலருடன் தொடர்பில் இருந்தார். எனவே அவர் எனக்கும் தூரத்துக் கிராமத் திலிருந்து நகரத்திற்குள் போன என் போன்ற நண்பர்களுக்கும் நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றினார். என் வகுப்புத் தோழி ஒருவர் அவரது சுவடியின் முதல் பக்கத்தில் இப்படிப் பொறித்து வைக்கப்பட்டிருந்தார் என்றால் பாருங்களேன்,

**மலர்களைப் போல் தங்கை உறங்குகிறாள்-அண்ணன்**
**வாழ வைப்பான் என்று அமைதி கொண்டாள்**

ஏதோ ஒரு சூழலுக்காகப் படைக்கப்பட்ட வரிகள், எப்படி எப்படியான சூழலுக்கெல்லாம் பயன்படுப்படியாகப் பரிணாமம் பெறுகின்றன என்பதே பெரிதும் ஆர்வம் தரத்தக்க ஒன்றுதான்.

இவ்வாறு பிரம்மாண்டமாக எனக்குள் உயர்ந்து நின்ற

அந்தக் காளிமுத்து அண்ணன்தான் ரகுநாதனை எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கூறிய அந்த வாசகம்கூட எனக்குள் இன்றைக்கும் அழியாமல் அப்படியே இருக்கின்றது.

“தம்பீ! ரகுநாதன் என்றொரு எழுத்தாளர், இலக்கியம் என்றால் என்ன என்று எவ்வளவு அற்புதமாகக் கூறியிருக்கிறார் பாரு! ரசனைச் சுவை மேலிட லேசாகச் சிரித்துக் கொண்டே அந்த மேற்கோளைக் கூறுகிறார். இலக்கியம் என்பது இந்திய பீனல் கோடு மட்டுமல்ல; மனுநீதிச் சாத்திரமும் அல்ல; அது வரம்புகளைக் கடந்து நின்று இதயநீதி கூறுவது என்ன அற்புதம் பாரு!” என்றார்.

இப்படி மேன்மையான ஓர் ஆளுமையை எனக்குள் பரவி யிருந்த ஒருவர் மூலம் அறிமுகமானதால் அவர் எழுத்துக்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் தேடிப்படிக்கும் பழக்கத்திற்கு உள்ளானேன். அவர் சிறுகதைகள் கவிதைகள் நாவல்கள், நாடகங்கள், ஒப்பீட்டு ஆய்வுகள் வாழ்க்கை வரலாற்று நூல், ஆராய்ச்சி நூல்கள்,மொழிபெயர்ப்பு நூல்கள், பதிப்பித்த நூல், திறனாய்வு நூல்கள் எனப் பல நூல்கள் தமிழுக்கு வழங்கியுள்ளார். (காண்க-விக்கிபிபீடியா) ஏறத்தாழ அவருடைய நூல்கள் அனைத்தையுமே வாசித்திருக்கிறேன். ஆனாலும் நேரில் பார்க்கிற வாய்ப்பு தொண்ணூறுகளின் இறுதியல்தான் எனக்குக் கிடைத்தது. அதுவும் ஓர் அரிய ஆர்வம்தரத்தக்க நிகழ்வு.

எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் காற்றில் கலந்த பேரோசை என்ற அருமையான கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்விற்கு (திருநெல்வேலியில் நிகழ்ந்தது) என்னையும் அழைத்திருந்தார்கள். சிறப்புரை சிதம்பர ரகுநாதன் என்றிருந்ததால் பெரிதும் ஆர்வத்தோடு கலந்து கொண்டேன். ஆனால் அவரைக் கூட்டத்தில் பார்த்து ஒரு வணக்கம் போடுவதோடு ஒதுங்கிக் கொண்டேன். பேசுவதற்குத் தயக்கமாக இருந்தது. பெரிதும் உடல்நலக்குறைவுக் காரணமாகத் தளர்ந்து காணப்பட்டார். நீண்டநாள் நண்பர் சு.ரா. என்பதால் தட்டாமல் கூட்டத்திற்கு ஒத்துக்கொண்டு வந்திருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டேன்.

அவரோடு பேசத் தயங்குவதற்குக் காரணம், அப்பொழுதுதான் என்னுடைய தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு என்ற நூல் வந்த புதிது. அதில் மார்சியத் திறனாய்வாளர்கள் என்ற வரிசையில் ரகுநாதனைக் குறித்துக் கொஞ்சம் கடுமையாகவே மதிப்பிட்டு எழுதியிருந்தேன். மேலும் கூடுதலாக, சாமர்த்தியமாய் விமர்சன ஈடுபாட்டைத் தொழில்முறையாக எழுத்துக்கு அடகு வைத்து ஜீவனோபாயம் செய்யப் போய்விட்டார். நமக்கு நஷ்டம் ஒரு விமர்சன சாம்ராஜ்யம்.

-என்ற தமிழவனின் கூற்றையும் மேற்கோள் காட்டியிருந்தேன்.

ஆனாலும் அந்தப் பகுதியை முடிக்கும் பொழுது "இலக்கியத்தைச் சார்பற்ற ஒரு தனிப் பொருளாக கொண்டாடிக் கொண்டிருந்த சூழலில் இலக்கியத்திற்கும் சமூக இருப்பிற்குமுள்ள பிணைப்பைத் தன்னுடைய அழுத்தமான நடையினாலும் கடுமையான உழைப்பினாலும் தெளிவுப்படுத்திக் காட்டியவர் என்ற அளவில் அவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்பதில் ஐயமில்லை."

-என்றுதான் முடித்திருந்தேன். அவ்வளவு பெரிய ஆளுமையை இலக்கிய விமர்சனம் என்ற அந்த நூல் அவருடைய 22 வயதில் எழுதப்பட்டு 24 வயதில் வெளிவந்த கட்டுரைகள் அடங்கியது. என்பதைக் கணக்கில் கொள்ளாமல் மார்க்சிய அழகியல் அறிவோடு கூடிய திட்டவட்டமான பார்வையோடு எழுதிச் செல்கிறாரா என்பது ஐயமே என்றும், ஒன்றுக்கொன்று முரணான பல பார்வைகளை அவைகளுக்கிடையே உள்ள ஆழமான எதிர்நிலைகளைப் பற்றிய நுட்பமான புரிதலின்றி எழுதிச் செல்கிறார் என்றும் நான் மதிப்பிட்டு எழுதியது சரிதானா அவர் மனம் புண்பட்டிருக்காதா? அப்படி எழுதியிருக்கக் கூடாதோ? என்றெல்லாம் எனக்குள் பலவாறு எண்ணங்கள் எழுந்து அலைக்கழித்ததால் அவரோடு உரையாடுவதைத் தவிர்த்துவிட்டேன். இப்பொழுது நினைத்துப் பார்க்கும் பொழுது நல்லதொரு வாய்ப்பை இழந்திருக்கிறோம் என்று எண்ணி வருந்த நேர்கிறது.

2

ரகுநாதன், இலக்கியப் படைப்புகள் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் முதல் பாரதியார் வரை நிறைய எழுதி இருக்கிறார். ஆனால் அவற்றில் இலக்கியத் திறனாய்வு என்று சொல்லத்தக்க ஒன்றாக 1948ல் வெளிவந்த **"இலக்கிய விமர்சனம்"** என்ற நூலைத்தான் சுட்ட முடியுமென்று கருதுகிறேன். மற்றவை எல்லாம் ஆராய்ச்சி என்ற தளத்திற்குப் போய்விடுகின்றன. எப்பொழுதுமே திறனாய்விற்கும் ஆராய்ச்சிக்கும் நடுவில் ஒரு மெல்லிய கோடுதான் இருக்கிறது. எந்த நேரத்திலும் திறனாய்வு ஆராய்ச்சியாக மாறி விடக்கூடிய விபத்து நடக்கலாம் என்ற சூழல்தான் நிலவுகிறது.

ஆராய்ச்சி ஓர் இலக்கிய பிரதிக்குள் நுழைவதற்கு முன்பே தனக்கென ஒரு கருதுகோளை நிர்ணயித்துக் கொண்டு, அதற்கேற்ப பிரதிக்குள் பயணிக்கிறது. அதற்குப் பிரதி பிரதானமல்ல; தன் கருதுகோள்தான் பிரதானம். ஆனால் திறனாய்வு எவ்விதமான நோக்கமோ கருதுகோளோ இல்லாமல் பிரதிக்குள் பாய்ந்து முழ்கிச் செல்கிறது. அங்கே பிரதிதான் பிரதானம். அதற்குள் புதைந்து கிடப்பவை ஏராளம்! ஏராளம்! மூழ்கிச் செல்லும் திறனாய்வாளன் தன் கைக்குக் கிடைத்ததை அள்ளித் வழங்குகிறான். அது அவனே எதிர்பார்க்காத ஒன்று இவ்வாறு எதிர்பாராதவைகளை

ஒவ்வொரு திறனாய்வாளனும் தனது ஆற்றலுக்கேற்ப அள்ளி வழங்குகிறான். இப்படிப் பலரும் வழங்க வழங்க பிரதி பலவாறு எட்டுத்திக்கும் பதினாறு கோணமும் விரிந்துக் கொண்டே போகிறது. ஆராய்ச்சிபோல ஒன்றை நோக்கி அடைவதல்ல திறனாய்வு; பிரதிக்குள் பயணித்துக் கொண்டே இருப்பதுதான் திறனாய்வு அதன் மூலம் பல வாசல்களைத் திறந்துவிடுவதுதான் திறனாய்வு.

க.நா.சு. போன்றவர்கள் பிரதியை மதிப்பிடுவதும் தீர்ப்புக் கூறுவதும் பட்டியலிடுவதும் என்று செயல்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், ரகுநாதனும் சில மதிப்பீடுகளைத் தீர்க்கமாக முன்வைக்கிறார் என்றாலும் மிகவும் ஆச்சரியப்படுத்தும் விதமாக ஆங்காங்கே பிரதிக்குள் பயணம் செய்யும் முறையையும் பார்க்கமுடிகிறது.

இலக்கிய விமர்சனம் என்ற அந்தச் சிறிய நூல் ஒன்பது தலைப்புகளில் பெரிய பெரிய விடயங்களையும் (அந்த காலம் பின்புலத்தில் வைத்துப் பார்க்கும் பொழுது) பேசுகிறது. முதல் பதிப்பு முன்னுரையில் (1948) இந்த நூலை வாசகர்கள் இலக்கிய விமர்சனமாகவே விமர்சன இலக்கியமாகவோ, எப்படி படுகிறதோ அப்படி ஏற்றுக்கொள்ளலாம் என்று பதிவு செய்கிறார். இதில் விமர்சனமும் ஓர் இலக்கியமே என்கிற அவர் புரிதல் மிகவும் எண்ணிப் பார்க்கத்தக்கது.

இந்த நூலின் இரண்டாவது பதிப்பு 32 ஆண்டுகள் கழித்து 1980 இல் வெளிவரும்போது துணிகரமான முயற்சி இலக்கிய விமர்சனத்துறையில் ஒரு பாலபாடமாகவும் மூலபாடமாகவும் மதிப்பிடப்பட்டது. என்று முன்னுரையில் எழுதுகிறார் 70 களில் இலக்கிய முதுகலைத் தமிழ்ப் பாடத்திட்டத்தில் இலக்கியத் திறனாய்வை நாங்கள் கற்றபோது சொல்வதைப் போல இந்த நூலைத்தான் பாலபாடமாகவும் மூலபாடமாகவும் கற்றோம.

3

இலக்கிய விமர்சனம் என்ற தலைப்பில் இப்படி எழுதுகிறார்

**காமம் செப்பாது பொழிவதுதான் விமர்சனம்**
**காமம் செப்புவது சுலபம்; கண்டது மொழிமோ**

என்றால் அதுதான் கஷ்டமான காரியம்

இதைவிட நன்றாக நறுக்கென்று அழகாகக் குறுந்தொகை வரியில் விமர்சனத்தை வரையறுத்துவிட முடியாதல்லவா! மேலும் மாத்யூ அர்னால்ட் இலக்கியம் என்பது வாழ்க்கையின் விமர்சனம் என்கிறார். அப்படியென்றால் அந்த விமர்சனத்தை விமர்சனம் செய்வது கஷ்டம்தானே என்று திறனாய்வு செயல்பாட்டின் அருமையையும் எடுத்துரைத்து விடுகிறார்.

ஓர் இலக்கியத்தை அதன் சமூக தேவை என்ன என்ற அடிப்படையில்தான் மதிப்பிட வேண்டும். விருப்பு வெறுப்புகளுக்கு இடமின்றி மதிப்பிட வேண்டும். எடுத்துக் கொண்ட கருத்தில் எந்த அளவிற்கு சாதித்துள்ளது என்று பார்த்து மதிப்பிட வேண்டும் என்றெல்லாம் எழுதி வரும்போதுதான் மேலே காளிமுத்து அண்ணன் சுட்டிக்காட்டிய இலக்கியமென்பது இந்திய பீனல் கோடும் அல்ல; மனுநீதிச் சாத்திரமும் அல்ல அது வரம்புகளைக் கடந்து நின்று இதயநீதி கூறுவது என்பதை எழுதிச் செல்லுகிறார்.

மேலும் இலக்கியயென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட, விரும்பப்பட்ட அபிப்பிராயம் என்பதையும் கடந்து நின்று, புதுப்புது விஷயங்களை, புரட்சிகரமான விஷயங்களைப் படைக்கக்கூடியது. அதை விமர்சகன் உணர்ந்து மதிப்பது, விமர்சகனின் கடமைஎன்றெல்லாம் எழுதுவதோடு, மேலை நாட்டினர் விமர்சனத்திற்கென்று தனிப் பத்திரிக்கைகள் கொண்டு வருவதுபோல தமிழிலும் கொண்டு வரவேண்டும் என்கிறார். அப்பொழுதுதான் தரம் தாழ்ந்து கிடக்கும் தமிழ் நூல் மதிப்புரைகளின் தரம் உயரும், தமிழ் நிலத்தில் ஆர்வத்தால் எழுந்து பயனற்று விளைந்துவிடும் காளான்களையும், கறைகளையும் விலக்க முடியும் என்று தமிழ்ச் சூழலையும் அக்கறையோடு கவனித்துப் பதிவு செய்துக் கொண்டு போகிறார்.

கலையும் கலை மரபும் என்ற தலைப்பில் கலை என்பது ஜனசமூகத்துக்கும் கலை உள்ளத்திற்கும் தொடர்பு ஏற்படுத்தும் ஒரு சாதனம் என்கிறார். இயற்கையின் அழகு கலை அல்ல மனிதர்களின் இதயம் அதை எப்படிப் பார்த்துப் பதிவு பண்ணுகிறது என்பதுதான். கலை தேனருவி கலை இல்லை ஆனால்

**தேனருவி திரை எழும்பி வானின் வழி ஒழுகும்**
**செங்கதிரோன்**
**பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**

என்று திரிகூட ராசப்பக் கவிராயர் பாடும்போது அது கலையாகிறது. இதையொட்டி ஓர் அழகான உரையாடலைப் பதிவு செய்கிறார். அவருடைய நண்பர் சொன்னதாக-

ரயிலில் ஆயிரம் தடவை போயிருக்கிறாயே
ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் உனக்கு எதை ஞாபகத்திற்குக்
கொண்டு வருகிறது?
நல்ல வாட்ட சாட்டமாக, சுண்டிவிட்ட பிரம்பு
மாதிரி துவளும் 16 வயசுப் பெண் மாதிரித்தான்
இருக்கிறது

இப்படிப் பல இடங்களில் நவீனத்துவவாதிகள் போல அழகை ஆராதனை செய்யும் எழுத்து முறையை ரகுநாதனிடம் கண்டு சுவைக்கலாம்

மேலும் கலை ஒரு மாயத் தோற்றம் உண்மையிலிருந்து இரண்டுமுறை விலகிவிட்ட ஒரு தோற்றம் என்றெல்லாம் பிளாட்டோ தன் குடி அரசு நூலில் விவாதிப்பதை அவர் பெயர் சொல்லாமலேயே எடுத்து வைத்து விவாதித்து அதை ஏற்க மறுக்கிறார் மேலும் கலை கலைக்காகவே, கலை மனித சமூகத்திற்காகவே, என்ற இருவேறுபட்ட போக்கினையும் சுட்டிக்காட்டுகிறார். கவின்கலைநுண்கலை பற்றியும் கலை மரபு நாட்டிற்கு நாடு மாறுபடுவது பற்றியும் பேசுகிறார். பிக்காசோவின் அரூபக் கலை பற்றியும் குறிப்பிடும் ரகுநாதன் அந்தக் கலையை அவர்கள்தான் விளக்க வேண்டும் என்று மொழியும் தெளிவும் என்ற தலைப்பில் அரியதொரு கருத்தை முன்வைக்கிறார். தமிழ் என்றால் ஒரு பாஷை ஒரு கலை, ஒரு கலாச்சாரம், ஒரு இசை, ஒரு சிற்பம், ஒரு மகத்தான சக்தி என்றெல்லாம் அவர் எழுதும்போது 22 வயது இளைஞருக்குள் இருந்த ஞான நெருப்பை அடையாளம் காணமுடிகிறது. மேலும் தெளிவடைய எளிமையான மொழி மட்டும் போதாது அது பேசும் பொருள் குறித்த அடிப்படை அறிவும் இருக்க வேண்டும். என்று எழுதிவிட்டு, அதை விளக்குவதற்குக் கம்பனையும் மில்டனையும் பயன்படுத்திக் கொள்கிறார். வழக்கம்போல் நவீனத்துவவாதிகளைப் போலவே வைதீகத் தமிழ்ப் பண்டிதர்களை ரகுநாதன் ஒரு சாடு சாடுகிறார்.

கவிஞன் ஒரு குடிக்காரன் என்ற தலைப்பில் பகல் முழுக்க உழைக்கும் ரிக்ஷாகாரனுக்கு உடல் வலியைக் குறைக்க கள் பயன்படுவதுபோல கவிஞர்களுக்கு கவலையை மறக்க கவிதை பயன்படுகிறது என்கிறார். மேலும் பாரதியாரை கஞ்சாக் கவிஞர் என்றே துணிந்து எழுதியுள்ளார். மேலும் இப்படி எழுதிகிறார்.

நம் நாட்டுக் கவிதைகள் பலவுமே இம்மாதிரியான கஞ்சாவாகவே இருந்து வந்திருக்கின்றன கடவுள் மீது பாடினாலும் காதலி மீது பாடினாலும் நம் கவிதைகள் பலவும் கஞ்சா கவிதைகள் நமது புலவர்களும் கவிதைகளைப் புகலிடமாகக் கொள்ளும் வழி யில்தான் சென்று விட்டனர். காரணம் நமது புலவர்களுக்கு ஈனக் கவலைகள் அதிகம்.

இந்த மாதிரி இடங்களில் ரகுநாதனின் இளமைத்துடிப்பையும் செயல்படும் விதத்தையும் உணரமுடிகிறது.

இலக்கியம் பிறந்த கதை என்ற தலைப்பில் அவர் கூறும் மொழிமையவாதம் வியப்பாக இருந்தது எனக்கு.

11 பாஷையின் அடிப்படையாக எழுந்த கனவுகளே இலக்கியம்

என்கிறார் இன்றைக்கு அமைப்பியல் வாதம் முன் வைக்கும் ஒரு கருத்தைப் போகிற போக்கில் அவர் சொல்லிச் செல்கிறார் மேலும் இலக்கியம் கடவுள் இரண்டும் அவ்வளவு விசாலமானவை

பரந்தவை அமைதியான தத்துவம்

-என்று எழுதும் போது நவீனத்துவம் அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் செயல்பட்டுள்ளதைப் பார்க்கமுடிகிறது.

இலக்கணத்தைச் செருப்போடு ஒப்பீட்டுப் பேசுகிறார் பாதம் வளர வளர அதுவும் வளர வேண்டும். அது வளராமல் காலைக் கடித்தது என்றால் அதைக் கழற்றி எறிந்து விடுவது மேல் என்கிறார். அதே நேரத்தில் காலுக்குத் தக்க செருப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அரங்கின்றி வட்டாடக்கூடாது என்றும் கருதுகிறார். இந்த அடிப்படையில்தான் புதுக்கவிதையைப் புறந்தள்ளுகிறார் தந்தி பாஷை என்று கேலி செய்கிறார். இந்தப் போக்குதான் இடதுசாரிகளிடம் புதுக்கவிதைக்கு எதிரான தமிழ்ப் பண்டிதர்களோடு இணைந்து பயணித்துப் பிறகு கவிஞர் சிற்பி, கவிஞர் மீரா முதலிய கலை இலக்கியப் பெருமன்றத்தைச் சேர்ந்தவர்கள் மரபுக் கவிதை யிலிருந்து புதுக்கவிதைக்கு மாறிய சூழலில், மீராவின் கனவுகள் கற்பனைகள்; காகிதங்கள் என்ற புதுக்கவிதை நூலுக்கு மதிப்புரை வெளிவந்த சூழலில், தமிழன்பனின் புதுக்கவிதைத் தொகுப்பு ஒன்றிற்கு மார்க்சிய அறிஞர் கைலாசபதி முன்னுரை தந்த சூழலில் இடதுசாரிகள் புதுக்கவிதையை ஏற்றுக் கொள்ளவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது என்பது வரலாறு.

கவிதை என்ற தலைப்பில் அமைந்துள்ள கட்டுரையில் பாரதியாரின் வசன கவிதை குறித்துக் கூடக் கடுமையான விமர்சனத்தைத்தான் முன்வைக்கிறார். அதுபோலவே பாவேந்தர் பாரதிதாசனின் முதல் கவிதை தொகுப்பிற்குப் பின்னால் வந்த தொகுப்புகளில் உள்ள கவிதைகள் வசனக் கட்டடமாகவே அமைந்துவிட்டன. என்ற பார்வையையும் முன் வைக்கிறார். இளமையின் துடிப்பை இத்தகைய இடங்களில் பார்க்கமுடிகிறது.

சிறுகதை, நாடகம், வசனம், கட்டுரை என்றும் தனித்தனி தலைப்புகளில் கருத்துரைத்துள்ளார். தமிழ்நாட்டில் தெருவில் நிர்வாணமாக வருவதற்கு கூச்சப்படுகிறார்கள் ஆனால் நான் ஒரு சிறுகதை எழுத்தாளன் என்று சொல்லிக்கொள்ள யாரும் கூச்சப்படுவதில்லை என்று சிறுகதையாளர்களின் ஈசல் போன்ற பெருக்கத்தையும் வாழ்வையும் சுட்டிக்காட்டுகிறார்.நாடகம் பற்றி எழுதும்போது இது ஒரு தனிமனித விஷயமல்ல பலர்கூடிப் படைக்க வேண்டிய ஒன்று என்பதால் அது சரியாக விருத்தியடையவில்லை கூத்து மரபுதான் இங்கே நாடகத்தின் இடத்தை ஓரளவு நிரப்பி வந்துள்ளது எனக் கருத்துரைக்கிறார். வசனம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுவது குறித்து அலசுகிறார் கட்டுரை எழுதுவதை ஏன் ஓர் இலக்கியமாக யாரும் கருதவில்லை என்ற முக்கியமான ஒரு கேள்வியை முன் வைக்கிறார்.

இவ்வாறு சிறுநூலில் பல சிந்தனைத் தொகுப்புகள் நிறைந்த மொழியாடலை தனது 22 வயதிலேயே நிகழ்த்திக் காட்டியவர் நூற்றாண்டுக் கண்ட சிதம்பர ரகுநாதன். பாரதியாரை ஷெல்லியோடும் தாகூரோடும் (கங்கையும் காவேரியும் 1966) ஒப்பிட்டு எழுதிய எழுத்துகளில் அவருடைய இலக்கிய நுண் ஆய்வினைக் காண முடியும். ஒப்பிலக்கணத்துறை என்ற ஒரு தனித் துறையே இங்கே அறிமுகமாவதற்கு முன்பே அத்துறை குறிப்பிடும் இணைவரை ஆய்வினை நடத்திக் காட்டியிருக்கிறார். அவருடைய இலக்கியம் குறித்த உரையாடல்களை எல்லாம் தனியாக முன்வைத்து ஒர் ஆழமான மறுவாசிப்பு நிகழ்த்துவதற்குப் பல்கலைக்கழக ஆய்வுத்துறையினர் முன் வரவேண்டும். என்று சொல்லி இக்கட்டுரையை இங்கே முடித்துக் கொள்கிறேன்.

................

**குறிப்பு**-கனடாவிலிருந்து வெளிவரும் இலக்கியவெளி இதழ் **“நூற்றாண்டு கண்ட ரகுநாதன்”** என்ற தலைப்பில் நடத்திய இணையவழிக் கருத்தரங்கில் பேசிய பேச்சின் கட்டுரை வடிவம் 04.05.2024

❖❖❖

# தமிழ்த் திரை உலகில் பாவேந்தர்

**நிழல் திருநாவுக்கரசு**

1938முதல் பாவேந்தர் மறையும் வரை ஏதோ ஒரு வகையில் தமிழ் திரை உலகோடு, இடையறாத உறவுடன் இருந்து வந்துள்ளார். மறைந்த பிறகும் கூட அவரது பாடல்களைத் தங்கள், தங்கள் படங்களில் பலரும் பயன்படுத்தி வந்தனர்.தமிழ் திரைப்பட உலகம் ,யதார்த்தத்திற்கு வராமல் புராணம் ,ராஜாராணி கதைகளிலே இன்பம் கண்டு வாழ்ந்ததை கண்டு வெம்பி ,நீண்ட கவிதையை விமர்சனமாக வைத்தார்.

**என் தமிழர் படம் எடுக்க ஆரம்பஞ் செய்தார்**
**எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்துநூறாக !**
**ஒன்றேனும் தமிழர்நடை யுடைபாவனைகள்**
**உள்ளதுவாய் அமைக்கவில்லை,உயிர் உள்ளதில்லை**
**ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதாயில்லை**
**ஒன்றேனும் உயர்நோக்கம் அமைந்ததுவாயில்லை**
**ஒன்றேனும் உயர் நடிகர் வாய்ந்ததுவாயில்லை**

**வடநாட்டார் போன்ற உடை,வடநாட்டார் மெட்டு!**
**மாத்தமிழர் நடுவினிலே தெலுங்கு கீர்த்தனங்கள்!**
**வடமொழி ஸ்லோகங்கள்! ஆங்கிலப் ப்ரசங்கம்**
**வாய்க்கு வரா இந்துஸ்தான்! ஆபாச நடனம்!**
**அடையும் இவை அத்தனையும் கழித்துப்பார்க்குங்கால்**
**அத்தின்பேர் அம்மாமி எனும் தமிழ்தான் மீதம்!**
**கடவுளர்கள்,அட்டைமுடி,காகிதப்பூஞ்சோலை!**
**கண்ணாடி முத்துவடம் கண்கொள்ளாக்காட்சி!**

**பரமசிவன் அருள்புரிய வந்து வந்து போவார்!**
**பதிவிரதை க் கின்னல் வரும் பழையபடி தீரும்!**
**சிரம்மோடு தாள மெண்ணிப் போட்டியிலே பாட்டுச்**
**சிலபாடி மிருதங்கம் ஆவர்த்தம் தந்து**

**வரும்காதல் !அவ்விதமே துன்பம் வரும்,போகும்!**
**மகரிஷிகள் கோயில் குளம் இவைகள் கதாசாரம்**
**இரக்கமற்ற படமுதலாளிக்கெல்லாம் இதனால்**
**ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சியது லாபம்!**

**படக்கதைதான் வாராதா எனநினைத்த நெஞ்சம்**
**பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்,**
**படக்கலையாம் சனியொழிந்தால் போதுமென எண்ணும்!**
**பயன் விளைக்கும் விதத்தினிலே பல செல்வர் கூடி**
**இடக்ககற்றி சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி**
**இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்துப்**
**படமெடுத்தால் செந்தமிழ் நாடென்னும் இளமயிலும்**
**படமெடுத்தாடும் தமிழர் பங்கமெலாம் போமே!**

சுயமரியாதை இயக்கத்தின் போர் வாளாக, அவரது கவிதைகள் இருந்தன.மாற்றுக்கருத்துள்ளவர்களும் நயந்து பாராட்டும்படி அவரது கவிதைகளுக்கு உரம் இருந்தது.தனது கொள்கைக்காக பல படங்களில் பணியாற்றாமல் இருந்து விட்டார். தமிழ்ப் பட உலகோடு கடைசிவரை தாமரை இலை தண்ணீராகவே இருந்து வந்ததை அவரது வாழ்க்கை தெரிவிக்கிறது. அரசியல் இலக்கியத்தில் இருந்த பாவேந்தரை திரைப்பட உலகில் அழைத்துவரப் பலர் இருந்தனர்; அவரிடம் உள்ள மரியாதை காரணமாகவும் பயத்தினாலும் அணுகவில்லை. தைரியமாக அவரைத் தொடர்புகொண்டு திரை உலகுக்கு அழைத்து வந்தவர், அக்ரகாரத்து அதிசயப்பிறவி' என அண்ணாவால் அழைக்கப்பட்ட ,மணிகொடி எழுத்தாளர் வ.ரா.அவர்கள்.மணிக்கொடி இதழோடு தொடர்பில் இருந்த சங்கு சுப்பிரமணியம்,என்.ராமரத்னம் ,கவிஞர் ந.பிச்சமூர்த்தி முதலியோர் இணைந்து 'ஸ்ரீ ராமானுஜர் '[1938]என்ற படத்தை எடுக்க இருப்பதாகவும்,அதற்கு பாரதிதாசன்தான் பாடல் எழுதவேண்டும் ;சன்மானமும் உண்டு என்ற வ.ராவின் கடிதத்தின் பேரில் ,ராமானுஜர் படத்துக்குப் பாடல்கள் எழுதினார்.அந்தப்படம் அழிந்து போய்விட்டது;இன்று நாம் பார்க்க முடியாது,ஆனால் இசைத்தட்டுக்கள் இருப்பதைக் கேட்கும்போது இனிக்கிறது. படம் வெளிந்த போது ,மணிக்கொடி குழுவினர் மேல் இருந்த காழ்ப்பைக் கல்கி விமர்சனம் என்ற பேரில் கொட்டித்தீர்த்தார்.

'காளமேகம்'[1940]படத்தை சினிமா உலகம் பண்டித செட்டியார் எடுத்தார்.இதில் நாகசுரசக்ரவர்த்தி திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை நடித்தார்.இந்தப் படத்தில் கலைவாணர், மதுரம் முதலியோர் நடித்தனர். இந்தப் படத்தில் வசனமும் பாட்டும் பாரதிதாசன்

எழுதினார். விளம்பரத்தில் வசனத்தையும் சேர்த்துச் செட்டியார் போட்டுக்கொண்டார். இதைப் பார்த்து வெகுண்ட பாவேந்தர்,"ஏ செட்டி, நான் புதுச்சேரிகாரன்; துப்பாக்கி வைத்திருக்கிறேன் "என்று சொன்ன பிற்பாடுதான், பாவேந்தர் பெயர் வந்தது.கோவில் மடப்பள்ளி பரிசாரகன், கோவில் தாசியைக் காதலிக்கும் காட்சியும் இடம் பெற்றிருந்தது. பாவேந்தர் ,ராஜரத்தினம் பிள்ளையிடம் சொன்னாராம், "ஒரே மாதிரியாகப் பாடல்கள் எழுதி, எழுதி, அலுத்து விட்டது; இந்தப்படத்தில் புதுவிதமாக எழுதுகிறேன் .நீங்களும் அப்படியே பாடுங்கள் என்றாராம். “முல்லைமலர் நானுனக்கு” என்ற பாடலும் "தாழ் சடையும் நீண் முடியும் "என்ற கரகரப்ரியா விருத்தமும் இன்றைக்குக் கேட்டாலும் அதன் சுவை குன்றாமல் இருக்கிறது.நாகசுரத்துக்கே உரிய பிர்க்காக்களும் ,விரலடியும் இந்தப்பாடல்களில் கேட்கலாம்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் டி .ஆர் .சுந்தரம் 'சுபத்ரா'என்ற படத்தை எடுக்கும் போது ,பாவேந்தரின் புகழைக் கேள்விப்பட்டு ,அவரைப் புதுச்சேரிக்கே போய் பார்த்து தனது படத்தில் பாடலும் வசனமும் எழுதவேண்டும் என்று வற்புறுத்தி கேட்டுக்கொண்டதால் அதில் இணைந்தார்.கதாநாயகன் யார் என்று கேட்டிருக்கிறார்.பி.யு .சின்னப்பா என்று சொன்னாராம்.ஒப்புக்கொண்டு சின்னப்பாவுக்கு ஏற்றபடி அடுக்குச் சொற்களும் சந்தமும் போட்டு எழுதி கொடுத்திருக்கிறார்.சுந்தரத்துக்கும் சின்னப்பாவுக்கும் மனஸ்தாபம் வரவே,கதாநாயகனாக நானே நடிக்கிறேன் என்று சுந்தரம் ,பாவேந்தரின் வசனங்களை பேசமுடியாமல் போனதை அவரது குழுவினரே பதிவு செய்திருக்கின்றனர்.

திரைக்கதை வசன கர்த்தாக்களான இளங்கோவன், அண்ணா, கலைஞர், போன்றவர்களுக்கு முன்னோடியாகப் பாவேந்தர் ,தமிழ்த் திரையுலகில் நல்ல தமிழைக் கொண்டுவந்தார். அந்தக்காலப்படங்களில் சகி ,பிராணநாதா ,ஜலம் போன்ற சமஸ்கிரத பிராமண மொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களான தோழி,அன்பே போன்ற சொற்களைப் பாவேந்தரே கொண்டுவந்தார்.

மாடர்ன் தியேட்டஸ், "ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி "[1949] திரைப்படத்தை எடுத்தது. இது மாயாஜாலக் கதை உள்ளடக்கத்தைக்கொண்டது.இந்தப் படத்துக்கான வசனத்தையும் பாடல்களையும் பாவேந்தரே எழுதினார்.ஆனால் படத்திலும் பாட்டுப்புத்தகத்திலும் இவர் பெயர் இருக்காது.தனது கொள்கைக்கு எதிரான கருத்து இருந்ததனால் என்று தெரிகிறது.பெயர் போட்டுக்கொள்ளாவிட்டாலும் அவரது வசனங்கள் யாருடையது என்று தெரிவித்துவிடுகின்றன. படத்தில் வரும் மந்திரவாதி

,அந்தநாட்டு இளவரசியைக் கையில் போட்டுக்கொண்டு ஆட்டிப் படைக்கிறான், அப்போது யாகத்தில் இருந்து வரும் பூதம் சொல்கிறது:"சன்யாசி நன்றாய் யோசி "

மாடர்ன் தியேட்டர்ஸின் அடுத்தபடமான 'பொன்முடி'[1949] பாவேந்தரின் 'எதிர்பாராத முத்தம் "படைப்பை தழுவியது.இந்தப்படத்துக்கு வசனமும் பாட்டும் பாவேந்தர். பொன்முடியை அமெரிக்கரான எல்லிஸ் ஆர்.டங்கன் இயக்கினார். காதலன்காதலியின் நெருக்கக்காட்சிகளில் நரசிம்மபாரதியும், மாதுரி தேவியும் நடித்தனர்.கவிஞரின் வசனங்களை நரசிம்மபாரதியும்,எம்.ஜி .சக்கரபாணியும் அற்புதமாகப்பேசி நடித்தனர். படத்தில் பல பாடல்கள்கள் இருந்தாலும் இன்றும் கேட்கக்கூடிய அளவில் இருப்பது "வான் மழை இன்றி வாடிடும் பயிர்போல் நானுனை பிரிந்தே வாடுறேன் "என்ற பாடல் நினைவில் நிற்கிறது.

பாவேந்தரின் பாடல்கள் தங்கள் படத்திலிருந்தால் பெரும் கௌரவம் எனக்கருதினர்.அந்தக்காலத்தில் வெளிவந்த பல படங்களின் தயாரிப்பாளர்கள் கவிஞரிடம் அனுமதி பெற்று தங்கள் படங்களில் இணைத்துக்கொண்டனர். அந்த வகையில் :என் தங்கை, பணம், பூங்கோதை, என் மகன், கோமதியின் காதலன், ரத்தக்கண்ணீர், கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி ,குலதெய்வம்,நானே ராஜா, முதலிய படங்களில் இடம் பெற்ற பாடல்கள் இலக்கியச் சுவை உடையன.

**துன்பம் நேர்கையில் யாழெடுத்து**
**இன்பம் சேர்க்க மாட்டாயா**

இந்தப் பாடலை ,தேஷ் ராகத்தில் எம்.எம்.தண்டபாணி தேசிகர் மெட்டுப் போட்டு வைத்திருந்ததை 'ஓர் இரவு 'படத்தில் சேர்த்துக்கொண்டனர்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான 'வளையாபதி'[1952] வெளிவந்தது. இதுவும் மாடர்ன் தியேட்டர்ஸ் எடுத்தது.இந்தப்படத்தில் நடித்த முத்துகிருஷ்ணன் என்ற நாடக நடிகர்,பிற் காலத்தில் 'வளையாபதி முத்துகிருஷ்ணன் 'என்ற புகழோடு வாழ்ந்தார்.இந்த படத்துக்குப் பாட்டும் வசனமும் பாவேந்தர். முதலில் பாடல்களை எழுதி கொடுத்திருக்கிறார்;இசையமைப்பாளர் எஸ்.தட்சிணாமூர்த்தி பாடலைப் படித்துப் பார்த்துவிட்டு ,'இசைக்கு இந்த வரிகள் சரிவராது ,வேற எழுதுங்கள்' என்றாராம் .பாவேந்தருக்கு இசை நன்றாகத் தெரியும். "உனக்குத் தமிழே தெரியாது ;நீ எனக்கு சொல்றியா"என்று ஸ்டுடியோவை விட்டு வெளியே வந்து விட்டாராம்.பின்னாலயே வந்த வேலுச்சாமி கவியிடம் பணத்தை வாங்கிக்கொண்டு, வசனப் பிரதியை தூக்கி எறிந்து விட்டு வந்து விட்டார்; இதற்குப்பின் மாடர்ன் தியேட்டர்ஸ் பக்கமே போகவில்லை.

திரை உலகம் பக்கம் போகாமல், கூட்டங்கள், குயில் இதழ் வேலைகளோடு இருந்த கவிஞரைப் பராசக்தி தயாரிப்பாளர் பெருமாள் முதலியார், தனது படத்துக்கு பாடல் எழுத வேண்டும் என்று அழைத்தார். தமிழ்ப் பேராசிரியர் மு.வ, அந்தக்காலத்தில் நிறைய நாவல்கள் எழுதிவந்தார்;அவை திராவிட இயக்கத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வந்தன. அதில் ஒன்றான "பெற்ற மனம்"திரைப்படமானது; அதில் பெரியாரும் ஒரு பாத்திரம்; அந்த பாத்திரத்தை சிவாஜி கணேசன் அற்புதமாக கொண்டுவந்தார்; இந்தப்படத்தில் கவிஞரின் ஆறு பாடல்கள் இடம் பெற்றன. பாவேந்தரின் 'பாண்டியன் பரிசு' இலக்கியத்தை திரைப்படமாக எடுக்க வேண்டும் என்பது கவிஞரின் விருப்பம்.நடிகர் திலகம் ,ஒப்புக்கொண்டு படத்தைத் தொடங்கி வைத்தார்;அதற்காக அண்ணா வழங்கிய தொகையில் வாங்கிய வீட்டை விற்றார். படவேலைகள் முடங்கின;கவிஞர் புதுச்சேரிக்கே போய்விட்டார்.

பாவேந்தரின் கடைசி ஆசை, 'பாரதியாரின் வாழ்க்கை'யை படமாக்க வேண்டும் என்பது அதுவும் நிராசையாக முடிந்தது.

**தமிழ் திரைப்படங்களில் இடம் பெற்ற முக்கியமான பாடல்கள்** :

(1). தலைவாரி பூச்சூட்டி உன்னை-பானுமதி-ரங்கோன்ராதா

(2). தமிழுக்கு அமுதென்று பேர்-சுசீலா-பஞ்சவர்ணக்கிளி

(3). புதியதோர் உலகம் செய்வோம்-சீர்காழி-கலங்கரைவிளக்கம்

(4). வாழ்க வாழ்கவே எமது வளமார்-திராவிடநாடு-பராசக்தி

(5). நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து-கோமதியின் காதலன்

(6). ஆடற்கழகு தேடப் பிறந்தவள்-நானேராஜா

(7). ஆலையின் சங்கே ஊதாயோ-ரத்தக்கண்ணீர்

(8). வெண்ணிலாவும் வானும் போலே-கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

(9). ஒரு பைசா தருவது பெரிசா-சூலமங்கலம்-பெற்றமனம்

(10).பாடி, பாடி,வானம்பாடி சந்திரபாபு-பெற்றமனம்

❖❖❖

# புரட்சிப் பாவலர் பாவேந்தரும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும்

**பொழிலன்**

**பாவேந்தர், பாவலரேறுவின் பாடல்கள் துமுக்கிகளாக.. வேட்டெஃகங்களாக.. தகரிகளாக.. தமிழர்களிடையே குவிந்து கிடக்கின்றன..**

தமிழ் மொழி இன நாட்டிற்குக் கிடைத்த இரட்டைக் குழல் வேட்டெஃகங்கள்.

ஒருவரைத் தொடர்ந்து மற்றொருவர் என அடுத்தூன்றிய நல் ஆளுமைகள்.

தம் 61 ஆம் அகவையில் ஏறத்தாழ நாற்பது நூல்கள் எழுதியும், இதழ்கள் பல நடத்தியும், ஆசிரியப்பணி செய்தும், அரசியலில் ஈடுபட்டும், திரைப்படங்களுக்கு உரையாடல் எழுதியும் தமிழ் இலக்கிய உலகில் பேரரசராய்த் திகழ்ந்த பாவேந்தரைப் பதின்ம இளைஞராகத் தம் 19 ஆம் அகவையில் பாவலரேறு அவரைச் சந்திக்கிறார்.. ஏறத்தாழ 42 அகவை இருவருக்கும் வேறுபாடு.

தம்முடைய 12, 13 ஆம் அகவை தொடங்கியே பாவேந்தரின் பாடல்களில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டிருக்கிறது.

தமிழைத் தன் உயிருக்கு நேரானதாகக் கருதி இயங்கிய பாவேந்தரைத் தம் வழிகாட்டியர்களுள் ஒருவராய் ஏற்றுக் கொண்ட பாவலரேறுவுக்குத் தமிழே உயிர் மலர்ச்சியாகத் தோன்றியது. தமிழையே தமக்கு இறைவன் என்றுகூட மதிப்பிட்டார்.

தமிழின் மீட்சிக்கென, தமிழர்களின் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகத் தம் வாழ்க்கையையே ஒப்புக்கொடுத்தார்.

தம் உற்றார் உறவினர் என்போரையெல்லாம்கூடத் தமிழ் பொருட்டே அவர் அமைத்துக் கொண்டார்.

பாவேந்தர் மீது அளவு கடந்த பற்றும் மதிப்பும் கொண்டிருந்தார் பாவலரேறு.. தமக்குக் கிடைத்த ஆசிரியர் திருப்புளிசாமி ஐயாவின்

கல்விச் சிறப்பால் ஆறாம் அகவையிலேயே பாடல்புனையும் ஆற்றல்பெற்ற பாவேந்தர் போலவே, பாவலரேறுவும் தம் ஒன்பதாம் பத்தாம் அகவையிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றிருக்கிறார். தம் 13.. 14 ஆம் அகவையில் எழுதப்பட்ட மல்லிகை என்னும் பாவியத்தை ஒழுங்கு செய்து கொண்டு 1952 இல் (அஃதாவது தம் 19 ஆம் அகவையில்) புதுச்சேரி சென்று பாவேந்தர் அவர்களிடம் காட்டியிருக்கிறார்..

அன்றைக்குப் பதின்ம அகவையில் இருந்த பாவலரேறுவின் பாடலில் கருத்துப் பிழை இருக்கிறது என்று கூறி மேலும் பார்க்க மறுத்திருக்கிறார் பாவேந்தர்..

மனம் உடைந்த நிலையில் புதுச்சேரி கடற்கரைக்குச் சென்று உட்கார்ந்தபடியே அவர் அந்த அவலச் சூழலை

**சீறுகின்ற நாகத்திடை மணியும், சேற்றில்**
**சிரிக்கின்ற தாமரையும், காட்டி னூடே**
**நாறுகின்ற அகில் மரமும், மண்ணுக்குள்ளே**
**நற்பொன்னும், சிப்பியிடை முத்தும், ஆற்றில்**
**ஊறுகின்ற நல்லூற்றும், தீயைக் கக்கும்**
**உயர்மலையில் இயற்பொருளும் இருக்க,**
**என்போல் தேறுகின்ற பா வலர்க்கிங்(கு) இலக்கியத்தில்**
**'திறமில்லை' என்கின்றார், என்னே செய்வேன்.**

என்பதாக முதல் பத்தியைக் கொண்ட பாடல் ஒன்றை எழுதியிருந்தார்..

1954 இல் அஞ்சலக எழுத்தராய்ப் பணி கிடைத்த சூழலில் புதுச்சேரியைத் தேர்வு செய்து கொண்டு பாவேந்தருக்காகத் தாம் செய்து கொண்டிருந்த அடவிப் பணியைத் துறந்துவிட்டு வந்து சேர்ந்தார் பாவலரேறு..

புதுச்சேரியில் வீடொன்று வாடகைக்கு எடுத்துத் தங்கிய பின், சில நாள்கள் கழித்துப் பாவேந்தரைச் சென்று, தம்மை அறிமுகப்படுத்திப் பாவாணர் அவர்கள் எழுதித் தந்திருந்த பாடலைக் கொடுத்தபோது நடந்த உரையாடலைப் பாவலரேறு நடையிலேயே அறிவோம்.

“எங்கிருந்து வருகின்றீர்கள் என்று கேட்டார். பொதுவாக, பாவேந்தர் நீங்க வாங்க என்று சொல்லுகின்ற அளவுக்குத் தகுதியிருந்தால்தான் அவர்களை அவ்வாறு அழைப்பார்; இல்லையென்றால் எல்லோரையும் வா போ என்றுதான் கூப்பிடுவார்.

புதுச்சேரி முதலமைச்சராய் அப்போது குபேர் என்பவர் இருந்தார். அவரைக்கூட அப்படித்தான் கூப்பிடுவார். “இந்தாப்பா குபேரு... இந்தப் பையன் படிச்சிட்டு வேலையில்லாம இருக்கிறான். அவனுக்கு

ஒரு வேலைகொடு  உடனே கொடு" என்றுதான் சொல்லுவார். யாராயிருந்தாலும் கட்டளைப் போடுவதுதான். பெரிய அரசரைப் போலவேதான் நடப்பார். நெருங்கியிருந்து பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும், அவருடைய ஆளுமை நிலை!

பழங்கழகக்காலப் புலவர்களிடம்  இருந்த அந்தப் பெருமிதத்தை மூன்று நான்கு புலவர்களிடத்தில்தான் நான் பார்த்திருக்கிறேன். ஒருவர் தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார். இரண்டாவது பாவேந்தர். மூன்றாவது பாவாணர். நான்காவது புலவர் பேராசிரியர் ந.இராமநாதன் அவர்கள். வளைந்து கொடுக்கமாட்டார்கள்.

பாவேந்தரிடம் பாவாணர் என்னைப் பற்றி எழுதின அந்தப் பாட்டினைக்  காட்டியவுடன் பாவேந்தருக்கு மிக மகிழ்ச்சி. பிறகு நான் சொன்னேன். "ஐயா  இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உங்களை வந்து பார்த்திருக்கிறேன்" என்றேன். அப்படியா எனக்கு நினைவில்லையே' என்றார்.

நான் அப்பொழுது வந்தபோது அவர் சொன்னதைச் சொல்லி வருத்தப்பட்டுத்  திரும்பினேன் என்றும், அப்பொழுது கடற்கரையில் நான் எழுதிய பாட்டையும் எடுத்துச் சொன்னேன். உடனே சொன்னார், 'அப்படியா.. நான் சொன்னேன்? எனக்கு நினைவில்லையே. அப்படிச் சொல்லியிருந்தால் அதை நீ மறந்துவிடு' என்றார்.

நான் எழுதியிருந்த பாடல்களை யெல்லாம் காட்டினேன். அவற்றைப் படித்துப் பார்த்துவிட்டு, என்ன நினைத்தாரோ தெரியவில்லை. தம் மகன் மன்னர்மன்னனைக் கூப்பிட்டு, "இந்தாப்பா, தம்பியை நாம் எங்கெங்கேயோ தேடிக்கொண்டிருந்தோமே.. இதோ இங்கே வந்து விட்டார். இப்படிப்பட்டவரைத்தானே நாம் எண்ணிக் கொண்டிருந்தோம்" என்று குறிப்பிட்டார்.

அவர் எப்படித் தேடினார்? யாரைத் தேடினார் என்று எனக்குத் தெரியவில்லை. உண்மைத் தமிழ் உணர்வுடைய ஒருவரை அவர் பார்க்க விரும்பியிருக்கலாம். அடுத்தபடி என்னைப்பற்றிக் கேட்டார். அஞ்சல் துறையில் பணியில் சேர்ந்திருப்பதை நான் குறிப்பிட்டேன்.

இதெல்லாம் நமக்கு ஒத்துவராது; அதிகாரம், பதவி இந்த வேலைகளை யெல்லாம் தூக்கிப் போட்டுடுங்க.. நீங்க அதிலெல்லாம் இல்லாமல் தமிழுக்காகவே இருங்கள்  ஈடுபடுங்கள்" என்று சொன்னார்.

அவர் வாழும் தெருவிலேயே வீடு பார்க்குமாறு மகனிடம் சொன்னார். 'இந்த ஊரு ஒரு 'மோச'மான ஊரு . யாரிடமும் பழக்கம் வைத்துக் கொள்ள வேண்டாம். உங்க 'ஆபீசு' முடிந்தவுடனேயே நேரா இங்கேதான் வரணும். இங்கேதான் இருக்கணும் என்றார். அன்றிலிருந்து ஓர் ஆறு ஆண்டுகள் அவரோடு நெருங்கிய தொடர்பு

அவரின் குடும்பத்தோடும் தொடர்பு எனக்கு இருந்தது.

இந்நெருங்கிய தொடர்பால், பாவேந்தருடையனவும், அவர் குடும்பத்திடையவுமான இன்ப, துன்ப நிகழ்ச்சிகள் அனைத்திலும் பாவலரேறு பங்கெடுத்தார். சிற்சில நேரம் பாவேந்தரின் மெல்லுணர்வுகளுக்கும், வல்லுணர்வுகளுக்கும் தாம் தாக்கமுற்றிருந்ததாக அவரே பதிவு செய்திருக்கிறார்.

..............

1955ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களின் மகன் மன்னர்மன்னன் சாவித்திரி திருமணம் புதுச்சேரியில் நடைபெற்றது.. அத்திருமணத்திற்குப் பாவாணர், தமிழ்மறவர் புலவர் வை. பொன்னம்பலனார் கோவை அய்யாமுத்து, டார்பிட்டோ சனார்த்தனம் உள்ளிட்ட பலரும் வந்திருந்தனர்.

புலவர் பொன்னம்பலனார் அவர்களும், பாவாணர் அவர்களும் பாவலரேறுவுக்கு முறையே இடைநிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும் ஆசிரியர்களாக இருந்தவர்கள்.

திருமணம் முடிந்து அனைவரும் ஒன்றாகத் திருமணப் பந்தலின் ஒரு மூலையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது பாவேந்தரும் வந்து அவர்களுடன் அமர்ந்து பேச்சில் கலந்து கொண்டார்.

பேச்சுக்கிடையில், புலவர் பொன்னம்பலனார் பாவேந்தரிடம் பாவலரேறுவைக் காட்டி இவர் (ஐயா பெருஞ்சித்திரனார்) பள்ளியில் என்னுடைய மாணவராக இருந்தவர் என்று பெருமையாகக் கூறினார். அதைக் கேட்ட பாவாணர், 'அப்படியா, ஆனால் கல்லூரியில் அவர் என்னுடைய மாணவர்' என்றார். இவற்றைக் கேட்ட பாவேந்தர் இன்னும் சற்று அழுத்தமாக வெடுக்கென்று 'அது' அப்போது.. இப்போது இவர் என் மாணவர் என்றார். அதைக் கேட்ட மூவருமே பெருமிதமாகச் சிரித்துக் கொண்டனர். அப்பொழுது அம்மூவரை விடவும் தமக்கு மிகவும் பெருமிதமாக இருந்தது என்று பாவலரேறு தென்மொழியில் பதிவு செய்து இருக்கிறார்.

பாவலரேறு அவர்களுக்குத் தூய தமிழ் உணர்வூட்டியவர் பொன்னம்பலனார், வை. சுப்பிரமணியனார் போன்ற பள்ளி ஆசிரியர்களும், நடேசனார், பாவாணர் போன்ற கல்லூரி ஆசிரியர்களுமே ஆன நிலை இருந்தாலும் இலக்கிய ஈடுபாட்டு உணர்ச்சிக்குப் பாவேந்தரையே முதன்மையராக அவர் அறிந்திருந்தார்.

பாரதிக்குத் தமிழ் ஈடுபாடு இருந்தாலும் அவர் தமிழை

வளர்ப்பதற்காகவோ பரப்புவதற்காகவோ மக்களிடையே இயக்கத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காகவோ செயல்பட்டவர் அல்லர் என்பது பாவலரேறுவின் தெளிந்த வெளிப்பாடு.

ஆனால் அதே போது தமிழைத் தம் உயிரென எண்ணி மதித்துப் பரப்பும் நோக்கில் தமிழியக்க உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டு இயங்கியவர் பாவேந்தரே. என்று பாவலரேறு மதிப்பிட்டிருக்கிறார்..

................

கண்ணதாசன் நடத்தி வந்த தென்றல் இதழில் இலக்கியப் போட்டி ஒன்று 1955 இல் அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்படும் பாவியத்திற்கு ஆயிரம் உருபா பரிசுத்தொகை என்பதாக அறி வித்திருந்தார்கள். தேர்வாளராகப் பாவேந்தர் அமர்த்தப்பட்டிருந்தார்.

பாவேந்தர் அவர்களின் வலியுறுத்தத்தால் பூக்காரி என்னும் தம் பாவியத்தைத் திருத்தத்துடன் கொய்யாக்கனி எனப் பெயர் மாற்றம் செய்து போட்டிக்கு அனுப்ப ஏற்பாடு செய்து கொண்டிருந்தார் பாவலரேறு.

போட்டிக்கான தேர்வாளராகப் பாவேந்தர் அவர்கள் அகற்றப்பட்ட நிலையில் போட்டிக்கு அப்பாவியத்தை அனுப்ப வேண்டாம் எனப் பாவேந்தர் அறிவுறுத்தியதோடு அதைத் தன்னுடைய பழநியம்மாள் அச்சகத்திலேயே அச்சிட்டுத் தந்துவிடும்படி தன் மகனார் மன்னர்மன்னன் அவர்களிடம் பாவேந்தர் கையளித்தார்..

கொய்யாக்கனி பழநியம்மாள் அச்சகத்திலேயே அச்சாகிக் கொண்டிருந்த இடை நாள் ஒன்றில் பாவேந்தர் அவர்கள் தாமாகவே கொய்யாக்கனிக்கு மதிப்புரை ஒன்றை எழுதித் தந்திருந்தார் என்பது மிகவும் சிறப்புடையது.

அதுகுறித்துப் பாவலரேறு வரிகளிலேயே அறிவது நல்லது..

பாவேந்தரின் கட்டளைப்படி, திரு. மன்னர்மன்னன் கொய்யாக்கனியை அச்சேற்றினார். அஃது அச்சாகி முடியுந் தறுவாயிலிருந்த பொழுது ஒருநாள் மாலை நான் பாவேந்தரின் 'பழநியம்மாள் அச்சக'த்திற்குச் சென்றேன். அங்கிருந்த மன்னர்மன்னன் என்னிடம், "நீங்கள் தலையிடம் (பாவேந்தரை நாங்கள் 'தலை'யென்று சுருக்கமாக அழைத்துக் கொள்வோம்) ஏதாவது, கொய்யாக்கனிக்கு மதிப்புரை கேட்டீர்களா?' என்றார். நான், 'இல்லையே, நான் ஏன் மதிப்புரை கேட்பேன்?" என்றேன்.

அவர் என்னைக் கேட்டதிலிருந்து, பாவேந்தர் அதற்கு நான் கேளாமலேயே மதிப்புரை ஒன்று தந்திருப்பார் என்று உயர்த்துணர்ந்து கொண்டு மன்னர்மன்னனிடம் அவ்வாறு பிலுக்கினேன். அதற்கு அவர், நீங்கள் கொடுத்து வைத்தவர்தாமையா ! (அவர் பயன் படுத்திய

சொல் 'அதிர்ஷ்டக்காரர்' என்பது.) அருமையான மதிப்புரை ஒன்று எழுதிக் கொடுத்திருக்கிறார். நான் அறிந்த வரையில் அவர் இப்படி யாருக்குமே எழுதிக் கொடுத்ததில்லை; அவனவன் மதிப்புரை வேண்டுமென்று கேட்டுத் தவங்கிடப்பான். இறுதியில் வேண்டா வெறுப்பாகக் கிண்டலாகவோ, ஏனோ தானோ வென்றோ எழுதிக் கொடுப்பார். இறுதியில் அதையும் வாங்கிக் கொண்டு போவார்கள். நீங்கள் கேளாமலேயே உங்களுக்கு மிகவும் சிறப்பாக எழுதிக் கொடுத்து விட்டாரே; வியப்புதான்! (அவர் பயன்படுத்திய சொல் ஆச்சரியந்தான்' என்பது.) என்று கூறி, மதிப்புரை எழுதியிருந்த தாளை என்னிடம் கொடுத்தார். அதைப்படித்துப் பார்த்தவுடன், பாவேந்தர் என் மேல் கொண்டிருந்த கள்ளமற்ற மெய்யன்பையும், மதிப்பையும் அறிந்து உள்ளம் உருகி நின்றேன். என் கடை விழிகளில் 'நன்றிக் கண்ணீர்' துளிர்த்தது.

பாவேந்தர் கொய்யாக்கனிக்குக் கொடுத்த மதிப்புரையைப் பற்றி இரண்டொரு சொற்கள் சொல்லியாகல் வேண்டும். நூலைப்பற்றிய செய்தி கொஞ்சந்தான் அதில் வருகிறது. மற்ற செய்தியெல்லாம் என்னைப் பற்றியதுதான். என்னை அவர் விளங்கிக்கொண்ட தன்மை அவ்வரிகளில் ஆழப் பதிந்திருந்தது. வெறும் சொற்களாக அவற்றைப் பாவேந்தர் பயன்படுத்திவிடவில்லை. அதில் அவர் பயன் படுத்திய ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு; உணர்வுண்டு! அதிலுள்ள அத்தனைச் சொற்களிலும் அவரின் தூய தமிழுள்ளம் கனிவு நிரம்பிய குழந்தையுள்ளம் பொறாமையற்ற சான்றாண்மையின் பெருந்தகையுள்ளம் பதிந்து, மெய்ம்மை சாற்றி நின்றது. அதில் அவரின் சிரிப்பு துள்ளியது; நகைச்சுவை பொதுளிநின்றது; உவகை ஊஞ்சலாடியது, அன்பு குமிழியிட்டது; அறிவுச் சுடர் வீசியது: என்பால் அவர் வைத்த நம்பிக்கையின் ஈரம் கசிந்து நின்றது; அதில் என் தமிழ் உள்ளத்தையும், அதில் கொப்பளிக்கும் உண்மை உணர்வையும், அதன் சூட்டையும், குளிர்ச்சியையும் வெளிப்படுத்தியிருந்தார். என் அறிவின் வலிந்த கொள்கையைச் சுட்டியிருந்தார். அவரொடு நான் பழகிய பண்பு வழுவாத தொடர்பை உறுதிப்படுத்தியிருந்தார்; எல்லாவற்றுக்கும் மேலாக என் எதிர்காலத்தையே வாழ்த்தி நிலைப்படுத்தியிருந்தார்! மொத்தத்தில், அவர் அம் மதிப்புரையில் பயன்படுத்திய சொற்களில் அவரின் பாடல் உள்ளம் கொழுமை கொண்டது. வண்ணமாலைகளின் சுடர்க் கற்றைகளை வீசி, ஒரு பாவலனின் உள்ளத்தை வேறு ஒரு பாவலன் அறியும் படைப்புக் கமுக்கத்தை உலகுக்குப் புலப் படுத்தியிருந்தார். இவ் வனைத்துச் சிறப்புகளையும் உள்ளடக்கிய அவ்வயிர வரிகள் என் உள்ளத்தில் ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சி உணர்வு மூட்டத்தில் மூழ்குவித்தன.

இன்று நினைத்தாலும், அன்றைய மாலைப் பொழுதின் தென்றல் வீச்சு என் உயிரைக் குளிர்விக்கின்றது.

அப்பாவேந்தர் பெருமகனார் கொய்யாக்கனிக்குத் தந்த மதிப்புரை இது தான்!

**கள்ளம் எப்படி அப்படிக்**
**கடுகளவும் இலாத நெஞ்சினார்; முக்**
**கனிகள் எப்படி அப்படிப்**
**போன்ற முத்தமிழின்மே லன்பர்;**

**குள்ளம் எப்படி: அப்படி**
**இலாப்பெருங் கொள்கை யுடையார்;**
**குரைகடல் எப்படி அப்படிக்**
**குணநிறை துரைமாணிக் கனார்!**

**வெள்ளம் எப்படி அப்படிச்**
**செந்தமிழ்ச் சொற்பெருக் கேற**
**மேன்மை எப்படி அப்படிப்**
**பட்டதோர் நடையிற்றம் நல்ல**

**உள்ளம் எப்படி அப்படிப்**
**தந்ததோர் உயர்தமிழ் நூல்தான்**
**உலகம் எப்படி. அப்படிப்**
**பட்டதோர் நிலைகொள்கொய் யாக்கனியே!**

....................

அதன்பின்னர், அக்கால இடைவெளியின் நடுவில், பாவேந்தர்க்கும் அவர் ஒரே மகன் மன்னர் மன்னனுக்கும்(அவரது இயற்பெயர் கோபதி) ஏற்பட்ட மனத்தாங்கல் பிரிவில், இருவரையும் இணக்கம் செய்த பலருடைய முயற்சிகளில் பாவலரேறுவின் (அவர்தம் 27,28 அகவையிலேயே) பங்கு மிகவும் அதிகம். இப்படி, அந்த ஐந்தாறாண்டு இடைவெளிப் போழ்தில், எத்தனையோ தொடர்புகள், ஈடுபாடுகள், விருப்பு வெறுப்புகள்! மொத்தத்தில் பாவேந்தருடைய அன்புக்கும், அரவணைப்புக்கும், நம்பிக்கைக்கும். நட்புக்கும், உள்முக வெளிமுகச் செயற்பாடுகளுக்கும் உரியவராகப் பாவலரேறு இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

பாவேந்தருடைய மறைவிற்குப் பின்னர், அவரின் குடும்பச்

சொத்துகளையும், கொடுக்கல் வாங்கல்களையும், பொறுப்புகளையும் ஆய்வு செய்து கணக்கிட்டு, அவருடைய குடும்பத்தார்க்குப் பகிர்ந்தளித்த வகையில், ஓர் ஐவர் ஆயத்தை (பஞ்சாயத்தை) அமைத்தும் அதற்குத் தலைவராகவும் பாவலரேறு செயற்பட்டார் என்பது முகாமையானது. அந்த அளவுக்கு அவரோடும் அவர் குடும்பத்தாரோடும் நெருக்கமாகியிருந்தார்.

தமிழின் விடுதலைக்காக, தாம் சிறைப்பட்டதோடு தம் அரசு அலுவலையும் இழந்திருந்த பாவலரேறு. மிகக் கடுமையான வறுமையில் உழன்றபடியே மொழி இன நாட்டு உரிமைகளுக்குப் போராடினார்.

தாம் வறுமையுற்ற நிலையிலும் தமிழ் அறிஞர்கள் பிறரின் துன்பங்களை அறிந்து அவர்களுக்காகத் தம் வறுமை சூழலிலும் துணை நின்றவர் பாவலரேறு.

பாவேந்தர் குடும்ப நலக் கொடை திட்டம் என்கிற பெயரில் ஒரு திட்டத்தை அறிவித்து ஏற்பாடு செய்து பாவேந்தர் அவர்களின் துணைவியார் பழனியம்மாள் அவர்களின் பெயருக்குத் தொகை அனுப்பிட வேண்டுமென அறிக்கை விடுத்தார் பாவலரேறு. அதன்படி தென்மொழியின் சார்பில் அக்கால் 1937 உருவா திரட்டி அளிக்கப்பட்டது.

..................

தொடக்கக் காலத்தில், பாவேந்தரின் தனித்தமிழ்ப் பற்று அவ்வளவாக வெளிப்படவில்லை. தம் பிள்ளைகளுக்குக்கூட சரசுவதி, கோபதி, வசந்தா, இரமணி போன்ற வடமொழிப் பெயர்களையே சூட்டியிருந்தார். தாம் எழுதிய தொடக்கக் கால நூல்களிலும் நாடகங்களிலும் பாவியங்களிலும் பெரும்பாலும் வடமொழிப் பெயர்களையும் வடமொழிச் சொற்களையும் அளவின்றிக் கலந்தே எழுதி வந்தார். இதற்குக் காரணம் முப்பது நாற்பதாண்டுகளுக்கு முன் தமிழர்க்கிருந்த வடமொழி மயக்கமும் தூயதமிழ் உணர்வுக் குறைவுமே ஆகும். ஆனால், பிற்காலத்தில் படிப்படியாக இந்நடை முறையைக் குறைத்துக்கொண்டு, மறைமலையடிகளாரைப் பின்பற்றித் தூயதமிழ் நடையை மேற்கொண்டார். அதன் பின்னர், தாம் எழுதிய பாவியங்களிலும் நாடகங் களிலும் வரும் உறுப்பினர்களுக்கெல்லாம் மாவரசு, நாவரசு, வேடப்பர், அழகர், புலத்திறல், வையத்திறல், நல்லமுத்து, நகைமுத்து, மலர்க்குழல், கரும்பு. மின்னொளி, முத்து நகை,பொன்னி, முள்ளி, அழகம்மை, பச்சைக்கிளி முதலிய அழகிய தூய தனித்தமிழ்ப் பெயர்களாகவே சூட்டியிருக்கிறார். அத்துடன் அவரெழுதிய பாடல்களிலும்

பலவிடங்களில் தமிழை வலியுறுத்தியிருக்கின்றார். அதற்காகவே தமிழியக்கம்' என்றொரு நூலும் எழுதி, அதில் தூயதமிழ்க் கொள்கையைப் பலதுறைகளிலும் வலியுறுத்திப் பேசியிருக்கின்றார். இவற்றோடு 'வந்தவர் மொழியா, செந்தமிழ்ச் செல்வமா? என்றோர் ஆய்வுத் தொடரையும் எழுதி, வடமொழியாளர் வடமொழிச் சொற்கள் என்று இட்டுக்கட்டிப் பேசி வரும் பல சொற்களைத் தூயதமிழ்ச் சொற்களே என்று நிலை நாட்டியுள்ளார். மொழியாய்வு நிலையிலும் சொல்லாய்வு நிலையிலும் அவர் காட்டிய ஆய்வு முடிவுகளில் ஒருசில பொருத்தமற்றனவாகவும், பிழைப்பட்டனவாகவும் இருப்பினும் அவர் கொள்கையும் முயற்சியும் மிகவும் பாராட்டவும் மதிக்கவும் தக்கனவாகும்.

என்று பாவலரேறு பாவேந்தரின் தூயதமிழ் ஈடுபாடுகள் குறித்து விளக்கப்படுத்தியிருக்கிறார்.

பாவேந்தரின் பெருஞ்சிறப்புகளும் படைப்புமுறைகளும், பாடுபொருளும், வெளிப்பாடுகளும், தமிழுணர்வும், குமுக நோக்கமும், பாவியங்களும், சொல்லாட்சியும் எனும் விரிவான ஆய்வுகள் பாவலரேறுவின் படைப்புகளோடு ஒப்புமைப்படுத்தி முனைவர் கடவூர் ப. மணிமாறன் உள்ளிட்ட சிலர் செய்திருப்பது விரிவான பார்வைக்குரியவை. அவை பல கோணங்களில் மேலும் அறியத்தக்கன.

அந்த ஆய்வுகளில் பாவலரேறு அளித்திருந்த செவ்வியும், பாவேந்தர் நூற்றாண்டுக் குழுவில் இருந்து தமிழ்நாட்டரசுக்குப் பாவலரேறு அளித்த ஏடலும், தென்மொழியில் எழுதப்பெற்ற கட்டுரைகளும் பாவேந்தர் குறித்த பாவலரேறுவின் பன்முக மதிப்பீட்டைக் காட்டுவனவாக அமைந்தவை.

..................

தம் வாழ்நாளில் வேறு எவருக்கும் எழுதிடாத வகையில் 14 பாடல்களைப் பாவேந்தருக்காகப் பாவலரேறு பல சூழல்களில் எழுதி இருக்கிறார். எண்ணற்ற கட்டுரைகளை, குறிப்புரைகளை வரைந்திருக்கிறார்.

திட்டங்கள் பல வரைவு செய்து அரசிடம் அளித்து வலியுறுத்தியிருக்கிறார்.

பாவலரேறு கலந்து கொண்ட 14 பாட்டரங்கங்களில் ஏழு பாட்டரங்குகள் பாவேந்தர் பற்றியவை..

பாவேந்தர் அவர்கள் மறைவின் பொழுது வெளிவந்த தென்மொழி

பாவேந்தர் அவர்களின் நினைவுச் சிறப்பிதழாகவே ஏராளமான செய்திகளோடு வெளிவந்தது.

அதோடு மட்டுமே அல்லாமல் அதன் பிறகு 1966 மே மாதம், 1967 மே மாதம், 1968 மே மாதம் ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து பாவேந்தருக்குத் தென்மொழி நினைவிதழைச் சிறப்பாகச் செய்திகளின் தொகுப்புகளாகக் கொண்டுவந்தார்..

அந்தச் சிறப்பு இதழ்களிலே பாவேந்தரைப் பற்றிப் பிறருக்கு அறியக் கிடைக்காத எண்ணற்ற குறிப்புச் செய்திகள் சுவைப்படவாக வெளியிடப்பெற்றன.

1967 இல் பாவேந்தர் மறைந்த மூன்றாம் ஆண்டு நினைவிதழில் பாவலரேறு எழுதிய பாடல் தமிழ் நெஞ்சங்களைத் தொடுவனவாக இருந்தது..

**"அன்புள்ள பாவேந்தே! வணக்கம். இங்கே**
**அனைவருமே நலமெனினும், ஐயா, நீங்கள்**
**தென்புதுவைத் திருமண்ணை தமிழகத்தைத்**
**தீந்தமிழர் தமைப் பிரிந்த நாளி னின்று**
**தென்பில்லை உளத்தினிலே! ஊக்க மில்லை;**
**திருவளர்ந்த தமிழகத்தில் செழிப்பு மில்லை;**
**அன்பில்லை தமிழர்க்குள்; ஆர்வ மில்லை;**
**அனைத்துலக வாழ்க்கையிலும் அமைதி இல்லை!.."**

.....................

இவ்விருபதாம் நூற்றாண்டு, தமிழ்மொழி யின் தமிழினத்தின் மறுமலர்ச்சிக் காலம் என்று சொன்னால் மிகையாகாது; தவறும் ஆகாது. இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில்தான் திராவிட இயக்கவுணர்வின் கீழ்வான விடியல் வெளிச்சம் கொஞ்சம் கொஞ் சமாசுப் புலர்வாங்கத் தொடங்கியது. அந்த விடியல் வெளிச்சத்தின் பல்வேறு வகையான ஒளிக்கற்றைகளில் ஒன்றுதான் பாவேந்தர் பாரதிதாசன் என்னும் தமிழ் ஒளிக்கற்றை! அவ்வொளிக்கற்றை பாய்ச்சிய இனவுணர்வுக் கனல்தான், தமிழ்த் தென்றலைப் புரட்சிப் புயலாக வேகமெடுத்து வீசச் செய்தது. ஆம், தென்பொதிகைத் தென்றல் போல் அமைந்து தவழ்ந்த தீந்தமிழ் இலக்கியம், பாவேந்தரின் பகுத்தறிவுப் புலமை தோய்ந்து. மொழியுணர்வுப் புயலாக வளர்ந்து, இன நலச் சூறாவளியாக மாறி வீசத் தொடங்கியது.

என்று பாவேந்தரைப் பறைசாற்றினார் பாவலரேறு..

பெரியாரையும் பாவேந்தரையும் பட்டிமன்றங்களுக்கும்

பாட்டரங்கங்களுக்கும் மட்டும்தாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமா? என்று பாவலரேறு கேள்வி எழுப்பினார்..

**மூவேந்தர் எல்லாரும் மீண்டும் பிறப்பெடுத்துப்**
**பூவேந்த ராய்ஆட்சி பூண்டாலும் பாவேந்தே!**
**உன்போல் புகழ்பெறவும் ஒல்லுமோ? ஒண்டமிழில்**
**மின்போல் கதிர்போல் மிளிர்ந்து !**

என்று பாவேந்தர் புகழ் பாடல்கள் எழுதி மெச்சினார்.

**இன்றைக்கே எழாமல்,நீ**
**என்றைக்குத் தான் எழுவாய்?**
**எண்ணிப் பார்ப்பாய்!**
**என்றைக்குக் காலமினி ஏற்றபடி**
**கனிந்துவரும், இந்நாள் போல ?**
**குன்றைத்தூள் செய்கின்ற வல்லுணர்வை**
**உன்நெஞ்சில் குவிக்கும் வண்ணம்**
**என்றைக்குப் பாவேந்தன் இனியொருகால்**
**எழுந்துவந்தே எழுதித் தீர்ப்பான்**

பாவேந்தர் வாழ்ந்த இந்தக் காலத்திலேயே எழுச்சியுறாத தமிழகம் இனி எப்பொழுது எழுச்சிபெறும் என்கிற உணர்வில் அவர் எழுப்பிய கேள்வியை உள்ளடக்கிய பாடலின் கருத்து தமிழர்கள் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டுவது.

இன்றைக்குப் பாவேந்தர் பாரதிதாசனாரும் நம்மிடையே இல்லை.. பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் நம்மிடையே இல்லை.

ஆனால் அவர்கள் அளித்த பாடல்கள் துமுக்கிகளாக.. வேட்டெஃகங்களாக..தகரிகளாக..

தமிழர்களிடையே குவிந்து கிடக்கின்றன..

தமிழர்கள் நாம்தாம் அமிழ்ந்து கிடக்கின்றோம்.. எழும் நாள் எந்நாளோ..?

❖❖❖

# புரட்சிக்கவி பாரதிதாசனார் ஒரு மீள்பார்வை

**இந்திரன்**

"பாரதியை இவ்வுலகம் அறிந்திலதேல் புவி மேல் குற்றம் " என்று பாடியவர் பாரதிதாசனார். 1908இல் தனது 17 வயதில் பாரதிதாசனார் பாரதியாரை முதல் முதல் சந்திக்கிறார். புதுச்சேரியில் பிறந்து பிரஞ்சு மொழி பயின்றது மட்டுமல்லாமல் 1908இல் தனது 17 வயதில் தமிழ் மொழியைப் பிழையரக்கற்று புலவர் வகுப்பில் முதல் மாணவராக வந்தவர்தான் கனகசுப்புரத்தினம் எனும் பாரதிதாசனார்.

இளம் வயதில் கனகசுப்புரத்தினம் நாட்டுப்பற்று மிகுந்த ஒரு தேசியவாதியாகப் புதுச்சேரி தெருக்களில் அலைந்தவர். கதர்த் துணியைத் தோளில் போட்டுக்கொண்டு தேசிய கவிதைகளை வீறு கொண்டு பாடிக்கொண்டு இருந்தவர்தான் பாரதிதாசனார். மகாகவி பாரதியாருடன் தொடர்பு வருவதற்கு முன்னால் ஒரு வீர சைவராக "சுப்பிரமணியர் துதியமுது " பாடிக்கொண்டிருந்தவர்.

இத்தகைய ஓர் இளைஞரான கனக சுப்புரத்தினம் தனது உடற்ப யிற்சி ஆசிரியர் வீட்டுத் திருமணத்துக்குப் போயிருந்த போது அங்கு உடற்பயிற்சி ஆசிரியர் வேணுகோபால் பாரதிதாசனரை ஒரு பாடல் பாடும்படி கேட்கிறார். கனகசுப்புரத்தினம் மகாகவி பாரதியாரின் பாடல் ஒன்றைப் பாடுகிறார். அதன் பிறகுதான் உடற் பயிற்சி ஆசிரியர் வேணுகோபால் " நீ பாடியே பாடல் யாருடையது தெரியுமா? "இதோ இங்கு வந்து நிற்கிறாரே பாரதியார் இவர்தான் இந்தப் பாடலை எழுதியவர் " என்று சொல்லிப் பாரதிதாசன் உடன் பாரதியாரை அறிமுகம் செய்து வைக்கிறார்.

இப்படித் தொடங்கிய பாரதி, பாரதிதாசன் உறவு நெருக்கம் கொண்ட ஒரு காலத்தில் கனகசுப்புரத்தினம் எழுதுவதை பார்த்தால் பாரதியார் எழுதுவது போல் இருக்கிறது என்று கிண்டல் அடித்தவர்களுக்கு பாரதியார் பதில் சொல்கிறார் : "சுப்புரத்தினம் கவிதை எழுதக்கூடியவர்." அப்போது கனகசுப்புரத்தினம்

**"எங்கெங்கு காணினும் சக்தியடா**
**ஏழு கடல் அவள் வண்ணமடா... "**

என்கிற கவிதையைப் பாடுகிறார் கனகசுப்புரத்தினம். அந்த கவிதையை உயர்வாகப் பாராட்டிய மகாகவி பாரதியார் அதனைத் தனது கைப்பட எழுதி அதன் கீழே " ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது " என்கிற குறிப்பைச் சேர்க்கிறார்.

இப்படிப் பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்தவர் என்று பாரதியாரால் குறிப்பிடப்பட்ட பாரதிதாசன் தன்னைப் பாரதியின் தாசன் என்று சொல்லிக் கொள்வதின் மூலமாக, தான் பாரதியாரின் அறிவு மரபைச் சேர்ந்தவர் என்று நமக்கு உணர்த்துகிறார்.

பாரதியாருக்கு அறிமுகம் ஆகிய கனகசுப்புரத்தினம்

தன்னை" பாரதிதாசன் " என்று சொல்லிக் கொண்டதினாலேயே

பாரதியைப் போலவே இன்னொரு ஒரு மகாகவி ஆகிய

பாரதிதாசனார் ஒரு மகாகவி அல்ல என்று புரிந்து கொள்ளும் ஒரு தவறைப் பலரும் செய்கிறார்கள்.

இந்த இடத்தில் கவிதைக்காகக் கவிதை எழுதுபவர்கள், சமுதாயத்தில் மாற்றத்தை விளைவிக்க கூடிய புரட்சிக்காகக் கவிதை எழுதுபவர்கள் என்று கவிஞர்களில் இரண்டு வகைகளைப் பிரித்துப் பார்க்கிறவர்கள் சுப்பிரமணிய பாரதியிடமும், பாரதிதாசனாரிடம் அந்தப் பிரிவினை செல்லுபடி ஆகாததைக் காண்கிறார்கள்.

இவர்கள் இருவரது கவிதைகளும் அழகியல் காரணங்களும், சமூகப் புரட்சி அறிவியல் காரணங்களும் பின்னிப் பிணைந்து தங்களை கவி பாடுமாறு நிர்ப்பந்தப் பட்டதினாலேயே பாடப்பட்டவை.

சுப்பிரமணிய துதி அமுது பாடிக்கொண்டிருந்த ஒருவரான பாரதிதாசன் புதுச்சேரியில் மகாகவி பாரதியை சந்தித்ததற்குப் பிறகு தனது கவி வெளிப்பாட்டில் மாபெரும் மாற்றங்களை எதிர்கொள்கிறார். இருவருமே உணர்ச்சிப் பிழம்புகளாக இருக்கிறவர்கள் தான். இரண்டு மகாகவிகளும் உள்ளத்தின் உண்மை ஒளியினை எவர் குறித்தும் அச்சமின்றி வெளியிடும் பழக்கமுள்ளவர்கள். ஆனாலும் மகாகவி பாரதியைச் சந்தித்த பிறகு தனது கவிதைப் பாதையில் ஏற்பட்ட மாற்றங்களை பாரதிதாசனார் அவரது சொற்களிலேயே பல இடங்களில் சொல்லையிருக்கிறார்.

இப்படி பாரதியின் அறிவு மரபில் தொடரும் பாரதிதாசனார் பெரியார் முன்னெடுத்த திராவிடச் சிந்தனையின் காரணமாக ஒரு மாபெரும் தோல் உரிப்புக்கு ஆளாகிறார்.

" சுப்பிரமணியர் துதியுமுது" பாடிக்கொண்டிருந்த ஒரு மகாகவி "தில்லை நடராசனையும் ஸ்ரீரங்க நாதனையும் பீரங்கி



கொண்டு பிளப்பதும் என்னாளோ " என்று பாடக்கூடியவராகத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறார். பாரதிதாசன் அவர் ஒரு தனிக் கவிஞர் என்ற நிலையைக் கடந்து ஒரு இயக்கமாக உருவெடுக்கிறார். 1946 ஜூலை 29 இல் அறிஞர் அண்ணா பாரதிதாசனாருக்கு " புரட்சிக்கவி " என்ற பட்டத்தையும் ரூ 25000 கொண்ட பண முடிப்பையும் கொடுத்துக் கவுரவிக்கிறார்.

இந்து மத ஆன்மீக சிந்தனையோடு பாரதிதாசனார் பாரதியின் மரபை ஒட்டி பாடிய போது அவரை உச்சி மேல் வைத்து பாராட்டியவர்கள் புரட்சிக்கவி என்ற பட்டத்துடன் சமூக அவலங்களைச் சாடும் ஒரு நாத்திகக் கவிஞராக அவர் உருவெடுத்த போது அவரை நிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

பாரதிதாசனின் கவிதைகள் நீர்த்துப் போய்விட்டன என்று பேசத் தொடங்கி விட்டார்கள். தமிழ்நாட்டின் எந்தக் கூட்டம் தமிழிசையைக் கர்நாடக இசையாக மாற்றியதோ, தமிழ்நாட்டின் எந்தக் கூட்டம் சதிராட்டம் என்பதனை பரதநாட்டியம் என்று மாற்றி அதனை " நாட்டிய சாஸ்திரம்" எழுதிய பரத முனிவரோடு தொடர்பு படுத்தியதோ அதே கூட்டம் புரட்சிக்கவி பாரதிதாசனாரின் கவிதைகள்" நீர்த்துப் போயின " என்று பேசத் தொடங்கி விட்டார்கள்.

திராவிடச் சிந்தனையை அரசியல் களத்தில் எதிர்கொள்ள முடியாதவர்கள் இசை,நாட்டியம், இலக்கியம் ஆகிய துறைகளில் அவற்றைத் தற்காலமயப்படுத்துகிறேன் என்ற பெயரில் எதிர்கொண்டார்கள். மரபுக் கவிதை என்பதையும் புதுக்கவிதை என்பதையும் எதிர் முரண்களாக வைத்து வெற்றி கண்டதின் மூலமாகப் பாரதிதாசனார் என்னும் ஒரு மகாகவியைத் தமிழர்களாகிய நாம் சரிவர அடையாளம் காணத் தவறிவிடும் ஆபத்தை எதிர்நோக்கி நிற்கிறோம்.

❖❖❖

# பாலர்களுக்குப் பாடிய பாவேந்தர்

**கமலாலயன்**

பாவேந்தர் பாரதிதாசனின் இளையோர் இலக்கியப் படைப்புகள் ஒரு பார்வை :

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் சிறப்பிதழ் ஒன்றைப் புதுமலர் இதழ் வெளிக் கொணர்ந்துள்ளது. ஏற்கெனவே கவிஞர் தமிழ் ஒளி, அருட்பிரகாச வள்ளல் பெருமான், ஜோகா சிங், ஹென்றி தீபேன் ஆகியோரின் பன்முக ஆளுமைகளை வெளிக்கொணரும் வகையில் செறிவான சிறப்பிதழ்கள் நான்கு புதுமலரால் வெளி யிடப்பட்டுள்ளன. இன்றைய தலைமுறைக்காரர்கள்,புதிய வாசகர்கள்,ஆய்வாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இந்தச் சிறப்பிதழ்களின் மூலம் அந்தந்த ஆளுமைகள் பற்றிய ஓரளவு விரிந்த அறிமுகங்களைப் பெறுதல் எளிது. இப்போது வந்துள்ள பாரதிதாசன் சிறப்பிதழ் அவை போன்றே பாவேந்தரின் பன்முகத் திறன்களை ஆராய்கிறது. இடம் போதாமையினால் அடுத்த இதழிலும் சில கட்டுரைகள் வெளியாக வேண்டியிருக்கிறது என ஆசிரியர் குறிப்பின் மூலம் அறிந்தேன். பாவேந்தரின் பாடல்கள்,கவிதைகளில் ஒரு கணிசமான பகுதி ‘இளையோர் இலக்கியம்’ என்ற வகைமையில் தொகுக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். அந்தப் பகுதி, குழந்தைகளுக்கென்றே பாரதிதாசன் இயற்றிய கவிதைக் கொத்து பற்றிய ஓர் அறிமுகக் கட்டுரை எழுதப்படுவது அவசியமென உணர்ந்தேன். அந்த எண்ணம்தான் இந்தக் கட்டுரைக்கு மூல வித்து.

குழந்தை என்றதுமே நம் கைகளில்,தோள்களில்,மடிகளில் சாய்ந்து கொண்டு மழலை மொழியில் மிழற்றும் சிசுவின் நினைவே நமக்கு வரும். அது இயல்பு. கவிஞர் ச.து.சு. யோகியார் பாடுவதைப்போல, “ பூப்போலக் கைகள்,பூப்போலக் கால்கள்,பூப்போலக் கன்னம்,புதுமின் போல் வளையும் உடல் “ என்று நாம் பரவசம் அடைவோம். பாவேந்தரின் பார்வையில், குழந்தையைப் பாருங்கள் :

**மெல்லென அதிர்ந்த மின்னல், அந்தச்**
**செல்வக் குழந்தையின் சிரிப்பு !**
**செம்பவழத்துச் சிமிழ் சாய்ந்த அமுதாய்ச்**
**சிரித்தது, பிள்ளை சிரிக்கையில்**
**சிரித்தது வையம் ! சிரித்தது வானமே !**

இந்த வரிகள் நம் மனதில் வரையும் ஒவியத்திற்குச் சொற்களால் விளக்கம் வேண்டுமா என்ன ? மனக்கண்களின் முன்னால் அந்தப் பிள்ளையின் சிரிப்பையும், வானத்தின்,வையத்தின் சிரிப்பையும் கொணர்ந்து பார்த்து அந்தப் பரவசத்தில் திளைப்பதே போதுமே !

பாவேந்தரின் பல கவிதைகளில் தமிழ் நாட்டு இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் எண்ணற்ற செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. அறிவை விரிவு செய்து, விசாலப்பார்வையால் மக்களை விழுங்கிக் களிக்கவும்,'மானிட சமுத்திரம் நானென்று கூவு'ம் படியும் அவர் அறிவித்திருக்கிறார். வாழ்வு என்றால் என்ன ? இளையோருக்கு, ஏன், நம் எல்லாருக்கும்தான் அவர் கொடுக்கும் வரையறை இது :

**அச்சம் தவிர்த்தது வாழ்வு நல்லன்பின் விளைவது வாழ்வு**
**நீ எனல் நான் எனல் ஒன்றே என்ற நெஞ்சில் விளைவது வாழ்வு!**

சிறார் விளையாடும் விளையாட்டுகளைக் கூர்ந்து கவனித்து மனதில் உள் வாங்கிக் கொண்டிருந்த பாரதிதாசன், அந்த விளையாட்டுகளின் மூலமே பல செய்திகளைக் குழந்தைகளுக்குக் கடத்தியிருக்கிறார். நாய்ப்பாட்டு,நாடு பிடிக்கும் விளையாட்டு போன்ற பல பாடல்களைக் காணலாம். ' ஓடிப்பிடிக்கும் புறா விளையாட்டு ' ஓர் எடுத்துக்காட்டு. தமிழ்ப் பேறு கவிதையில் தமிழ் மக்கள்தம் நிலை கண்டு இரங்கி,அது எப்போது,எப்படி மாறும் என்ற சித்திரத்தைத் தீட்டுகிறார் பாவேந்தர் :

**இன்னலிலே, தமிழ் நாட்டினிலேயுள்ள**
**என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்.**
**அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கியென்**
**ஆவியில் வந்து கலந்ததுவே !**
**இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்**
**என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்**
**துன்பங்கள் நீங்கும், சுகம் வரும்,நெஞ்சினில்**
**தூய்மையுண்டாகி விடும் ; வீரம் வரும் !"**

தமிழ் வளர வேண்டும் என்று மொழி வளர்ச்சி பற்றிய அக்கறை உள்ளோர் யாவரும் இடைவிடாமல் பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருக்கிறார்கள். ஆனால், இப்படிக் கூவிக் கொண்டிருந்தாலே போதும்,மொழி தானே வளர்ந்து விடும் என்று

நம்புகிறார்கள் போலும் ! பாவேந்தரின் கூரிய பார்வையில் இந்த வெற்றுப் பெருமிதங்கள் எள்ளி நகையாடப்படுகின்றன. என்னென்ன காரியங்க ளைச் செய்தால் தமிழ் மொழி தரணியில் சிறப்பெய்தி விளங்குமென்று அவர் நமக்குச் சில கட்டளைகளை விதிக்கிறார் :

**எளிய நடையில் தமிழ் நூல் எழதிடவும் வேண்டும்**
**இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.**
**வெளியுலகில்,சிந்தனையில் புதிது புதிதாக**
**விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு**
**தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து**
**செந்தமிழைச் செழந்தமிழ் ஆய்ச் செய்வதுவும் வேண்டும்.**
**எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையென்றால்**
**இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும் !**
**தமிழ் ஒளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்**
**இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும் !"**

வெளியுலகில்,மனிதச் சிந்தனையில் இன்று புதிது புதிதாக எத்தனையோ அறிவியல் விந்தைகள் கண்டறியப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றை உடனுக்குடன் நம் மொழிகளில் உரிய விளக்கப்படங்களுடன் தெளிந்த எளிய இனிய நடையில் மொழியாக்கம் செய்து பயன்படுத்தினால், இன்றைய சிறார் உலகம் பயன் பெறும். ஆனால், இன்று நம் நாட்டில் கல்வியில், பொதுப்புத்தியில், ஊடகங்களில், எல்லாவற்றிலும் முடை நாற்றமெடுக்கும் பழம் பஞ்சாங்கப் புராணப் புளுகுகள் மிகுந்த பெருமிதத்தொனியில் திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் புளுகு மூட்டைகளைத் தம் முதுகிலும்,மூளையி லும் சுமந்து நலியும் நம் இளம் பிள்ளைகளுக்குப் பாவேந்தரின் மேற்கண்ட பாடல் போய்ச் சேருவது எவ்வளவு முக்கியம் ?

**கண்களும் ஒளியும் போலக் கவின் மலர் வாசம் போலப்**
**பெண்களும் ஆண்கள் தாமும் பெருந்தமிழ்நாடு தன்னில்**
**தண்கடல் நிகர்த்த அன்பால் சமானத்தர்**
**ஆனார் என்ற பண் வந்து**
**காதிற் பாயப் பருகு நாள் எந்நாளோ? "**

என்ற ஏக்கம் மிக்க கவிக்குரலில் நம் சிந்தனையைக் கிளறுகிறார் பாவேந்தர். இந்தக் கவிதையின் தலைப்பு ' எந்நாளோ ?' என்றே அமைகிறது. " கைத்திறச் சித்திரங்கள், கணிதங்கள்,வான நூற்கள்,மெய்த்திற நூற்கள்,சிற்பம்,அறிவியல், காவியங்கள் வைத்துள்ளோம் நாம் தமிழ் மக்கள் ! இவையெல்லாம் வையத்தின் புதுமை என்னப் புத்தகசாலை எங்கும் புதுக்கும் நாள் எந்த நாளோ ?" என்றும் கேள்வி எழுப்புகிறது இந்தக் கவிதை.

பகுத்தறிவை, சுயமரியாதையை, அறிவியல் கண்ணோட்டத்தை, மொழி இன உணர்வை இடைவிடாமல் எல்லாக் கவிதைகளிலும் ஏதேனும் ஓர் இடத்தில் ஒரு சொல்லில் வலியுறுத்தும் பாங்கைப் பாவேந்தரிடத்துக் காண முடியும். ‘ புத்தர் புகன்றார் ’ என்ற கவிதை அதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

**பழைய நூற்கள் இப்படிப் பகர்ந்தன**
**என்பதால் எதையும் நம்பி விடாதே**
**உண்மை என்று நீ ஒப்பி விடாதே!**
**பெருநாளாகப் பின்பற்றப்படுவது**
**வழக்கமாக இருந்து வருவது**
**என்பதால் எதையும் நீ நம்பி விடாதே**
**உண்மை என்று நீ ஒப்பி விடாதே!**
**பெரும்பான்மையினர் பின்பற்றுகின்றனர்**
**இருப்பவர் பலரும் ஏற்றுக்கொண்டனர்**
**என்பதால் எதையும் நீ நம்பி விடாதே!**
**ஒருவர் சொன்னதை உடன் ஆராய்ந்து பார்**
**அதனை அறிவினாற் சீர் தூக்கிப்பார்!**
**அறிவினை உணர்வினால் ஆய்க! சரி எனில்**
**அதனால் உனக்கும் அனைவருக்கும்**
**நன்மை உண்டெனில் நம்ப வேண்டும்**
**இவ்வுண்மைகளை ஏற்று நீ நடந்தால்**
**மூடப் பழக்க வழக்கம் ஒழியும்**
**சமயப் பொய்கள் அறிவினாற் சாகும்! “**

பாரதியைப்போல் பாவேந்தரும் ஆத்திச்சூடி பாடியிருக்கிறார். இசைப்பாடல்களில் கல்வி, பெண் உரிமை,சமத்துவம்,பகுத்தறிவு சார்ந்த சிந்தனைகளை இசையுடன் குழைத்துத் தந்திருக்கிறார். பள்ளி செல்லும் குழந்தை ஏனோ அன்று தயங்குகிறது. அன்னை எவ்வளவு சொல்லியும் கேட்க மறுத்துக் கண்ணீர் சிந்திக் கொண்டு வாசலிலேயே நிற்கிறது. கவிஞர் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்தக் குழந்தையின் கண்ணீர் அவரைக் கலங்கச் செய்கிறது. பாடல் பிறக்கிறது :

**தலை வாரிப் பூச்சூடி உன்னைப்–பாட**
**சாலைக்குப் போ ‘ என்று சொன்னாள் உன் அன்னை.**
**சிலை போல ஏன் அங்கு நின்றாய் ? நீ**
**சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய் ?**
**விலை போட்டு வாங்கவா முடியும் ? கல்வி**
**வேளை தோறும் கற்பதால் படியும் !**

**மலை வாழை அல்லவோ கல்வி ? நீ**
**வாயார உண்ணுவாய் போ என் புதல்வீ !**
**கடிதாய் இருக்கும் இப்போது கல்வி**
**கற்றிடக் கற்றிடத் தெரியும் அப்போது !"**

‘ தமிழ் எங்கள் உயிருக்கு நேர் ‘ என்றெல்லாம் பாடும் ‘ தமிழுக்கும் அமுதென்று பேர்’ என்ற பாடல் உள்படப் பல இசைப்பாடல்களைப் பிள்ளைகளுக்கு உரிய பண்களுடன்,தாளங்கள் ராகங்களுடன் கற்றுத்தந்து பாடச் செய்தால் அவை அந்தப் பிள்ளைகளின் நெஞ் சங்களில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கவே பெருமிதம் சேர்க்கிறது !

ஆண்,பெண் குழந்தைகளுக்குத் தாலாட்டுப் பாடல்களின் மூலம் தான் சொல்ல விரும்பும் செய்திகளைக் கவித்துவமிக்க,அதே சமயம் எளிய சொற்களில் இசைக்கிறார் பாரதிதாசன் :

**மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற**
**காடு மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே,**
**வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்**
**தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி ;**
**புண்ணில் வேல் விடுக்கும் பொய் மதத்தின் கூட்டத்தைக்**
**கண்ணில் கனல் சிந்திக் கட்டழிக்க வந்தவளே!**
**சாணிக்குப் பொட்டிட்டுச் சாமியென்பார் செய்கைக்கு**
**நாணி உறங்கு நகைத்து நீ கண்ணுறங்கு ...**

இந்தத் தாலாட்டு வரிகளில் பாவேந்தர் விதைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைகளின் வீச்சுக்கு விரிவுரையோ பொழிப்புரையோ தேவைப்படாதுதானே ?

பிறக்கப்போகும் குழந்தை ஆணா,பெண்ணா எனத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன் பெரியவர் ஒருவரை அணுகி விசாரிக்கிறாள் ஓர் இளம் தாய். அந்தப் பெரியவர் அவளிடம் ஒரு கேள்வியை எழுப்புகிறார் : “ பெண்தான் பிறக்கப் போகிறாள் என்று வைத்துக் கொள்வோம். அவளை எங்கே போடுவீர்கள் ?’’

தாயாகப் போகும் பெண் சொல்கிறாள் : “ மண்ணில் பட்டால் மாசுபடும் என்று என் கண்ணில் வைத்துக் காப்பேன் ஐயா !’’

நமது வாழ்வில் அன்றாடம் நாம் காணும் காட்சிகள்,மனிதர்கள்,உணர்ச்சிகள் எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கவனிக்கும் பாவேந்தரின் கவிதை மனம் அந்த எல்லாவற்றையும் பற்றிப் பாடித் திளைக்கிறது. படிப்பவர் நெஞ் சில் பசு மரத்தாணியைப் போல் பதியும் பாடல்கள் அவை. நமது இளைய தலைமுறைக் குழந்தைகளுக்கு உரிய முறையில் அவற்றை நாம் அறிமுகம் செய்ய வேண்டும். அதற்கு, முதலில் நாம் இந்தக்

கவிதைகளைப் படித்து உள்வாங்கிப் பயன் கொள்ள வேண்டும். இங்கு நான் மேற்கோள் கட்டியிருப்பவை மிகச் சிலவே. இன்னும் ஏராளமான பாடல்களில் பாவேந்தர் நமது பிள்ளைகளுக்குப் பாடிச் சென்றிருக்கும் சிந்தனைகள் பாரதூரமான பாதிப்புகளைத் தரக்கூடியவை. நாம்தான் அவற்றைக் குழந்தைகளிடம் கொண்டு சேர்த்தாக வேண்டும் !

❖❖❖

# அம்பேத்கரைக் கட்டுடைத்தல்

**ஆனந்து டெல்டும்டே | தமிழில் கண. குறிஞ்சி**

ஒடுக்கப்பட்ட மக்களைத் தன் உயிரென நேசிக்கும் அம்பேத்கரின் உலகக் கண்ணோட்டம் நவீன தாராளவாதமோ, கண்டறியப்பட்ட சமூக டார்வினசமோ அல்ல.

சிலைகள், செய்திக்கோவைகள், படங்கள், சுவரொட்டிகள், இசைப்பாக்கள், கதைப்பாடல்கள், புத்தகங்கள், துண்டறிக்கைகள் போன்றவற்றின் எண்ணிக்கையோ அல்லது அவரது நினைவைப் போற்றும் கூட்டங்களின் அளவோ அவரது பெருமையை அளக்கும் அளவுகோலாக இருந்தால், வரலாற்று நாயகர்களில் பாபாசாகிப் அம்பேத்கரோடு யாரும் போட்டியிட முடியாது. ஒவ்வொர் ஆண்டும் எங்கெல்லாம் கூட்டங்கள் கூடுகின்றனவோ, அந்தப் புதுப்புது இடங்கள் எல்லாம் அவரது நினைவகப் பட்டியலில் சேர்ந்து கொண்டே உள்ளன. பூனைகளும் நாய்களும் குடிக்கக்கூடிய பொதுநீர்க் குழாயில் தண்ணீர் குடிப்பதற்குக் கூடப் போராடிய ஒரு நபர். ஒரு மாபெரும் நிகழ்வுப் போக்காக மாறி இப்பூமியில் நடை பயின்றார் என்பதைச் சிறிது காலத்திற்குப் பிறகு மக்கள் நம்புவது கூடக் கடினமாக இருக்கும். சொர்க்கத்தில் இருக்கும் கடவுள்கள்கூட அப்படி அவர்கள் இருக்க நேர்ந்தால் அவர்மீது பொறாமை கொள்வர். இத்தகைய அற்புதத்திற்குப் பின்னால் இருப்பதுதான் என்ன? தலித்துகளுக்கு அவர் ஒரு தேவ தூதனாக இருந்தார் என்பதில் ஐயம் ஏதுமில்லை. தொடக்கத்தில் ஒரு சில தலித் குழுவினருக்கும் இப்பொழுது பெரும்பான்மையினருக்கும் அவர் அவ்வாறு உள்ளார். தனியொருவராக ஒரே குறிக்கோளோடு தலித்துகளுக்காக அவர் ஆற்றிய பணிக்கு அவர்கள் நன்றிக்கடப்பாடுடையவர்களாக இருப்பது இயல்பானதேயாகும் இது உண்மையாக இருந்தாலும், தனித்துவமான ஒரேயொரு காரணம் இதுதான் என நம்புவது முழுவதும் எளிமைப்படுத்தப்பட்டதாகும். ஒரு வரலாற்று நாயகராகக் கட்டமைத்து அம்பேத்கரை வளர்தெடுத்ததில் ஆளும் வர்க்கத்தின் ஊக்கமான பங்களிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததோடு, இரு பக்கமும் வலிமையூட்டுவதாகவும் இருந்தது. அம்பேத்கர் மீது

உரிமை கொண்டாட முயலும் சங்பரிவாரத்தின் நேசமுயற்சிக்குக் கீழுள்ள இயக்கத்தைத் தலித்துகள் தெளிவாகப் புரிந்துக் கொள்ள முடியும்.

**வரலாற்று நாயகனை உருவாக்குதல்**

அரசியல் சார்ந்த இந்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காங்கிரஸ் அம்பேத்கரின் முக்கிய எதிரியாகும். 1932 ஆம் ஆண்டில் வட்டமேசை மாநாடு நடைபெற்ற பொழுது, தலித்துகளுக்குத் தனிவாக்குரிமை பெற முயற்சித்த அம்பேத்கருக்கு மிகக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்த காந்தியாரை நினைவுப்படுத்திப் பாருங்கள். இதன் இறுதியில் பூனா ஒப்பந்தத்தில் கையொப்பமிட அம்பேத்கரை அச்சுறுத்தி நெருக்கடி கொடுத்ததையும் அதன் விளைவாகத் தலித்துகளின் வளமான, சுதந்திரமான அரசியல் இரும்புத் துண்டிக்கப்பட்டதையும் கூட எண்ணிப் பாருங்கள். அதிகாரம் கைமாறியப்பின் அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கர் நுழைந்து விடாமல் மிகக் கவனமாகக் காங்கிரஸ் பார்த்துக்கொண்டது. ஆனால் வெகுவிரைவில் அது நேரெதிராகத் திரும்பியது. முற்றிலும் மாறான தன்மையில் நாட்டுப்புறக் கதைகளில் வருவதைப் போன்ற விளக்கங்கள் இருந்தாலும், அரசியல் நிர்ணய சபைக்குள் அம்பேத்கர் நுழைய வழியில்லாமல் இருந்தபொழுது, காந்தியாரின் போர்த்தந்திர மேதமை, அரசியல் நிர்ணய சபைக்கு அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்படக் காரணமானது. மேலும் அரசியலமைப்புச் சட்டங்களை உருவாக்கும் குழுவின் தலைவராகவும் அம்பேத்கரை அமர்த்த நேரிட்டது. அதற்குப் பரிமாற்றம் செய்யத்தக்க வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் தலித் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அம்பேத்கர் அரசியல் ஞானியைப் போலச் செயல்பட்டாலும் புதிதாக தொடங்கிய இந்த ஈடுபாடு நீண்டகாலம் நிலைக்கவில்லை. .இந்தச் சட்ட வரைவு மசோதாவை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட பின்னடைவுச் சிக்கலில் நேரு அமைச்சரவையிலிருந்து அம்பேத்கர் விலக நேரிட்டது. பின்னால் அம்பேத்கர் அரசியல் சட்டத்தையே ஏற்க மறுத்து இவ்விடயத்தில்தான் ஒரு வாடகை குதிரையாக பயன்படுத்தப்பட்டதாகவும் இந்திய அரசியலமைப்பச் சட்டம் யாருக்கும் பயனற்றது எனவும் கூறினார். அதைக் கொளுத்துவதாக இருந்தால் தானே அதில் முதல் ஆளாக இருப்பேன் எனவும் கூறினார். காங்கிரஸ் அதன் சொந்தப் பொறுப்பில்தான் அதற்குள் நுழைய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். ஆனால் எண்ணற்ற அம்பேத்கரிஸ்டுகள் அம்பேத்கரிசத்திற்குச் சேவை செய்வதற்காகக் காங்கிரசில் சேர்வதற்கு இது தடையாக இருக்கவில்லை.

நிலச்சீர்திருத்தம் மற்றும் பசுமைப்புரட்சி போன்ற கவர்ச்சிகரமான கொள்கைகளைக்காட்டி கிராமப்பகுதியிலுள்ள சூத்திரச் சாதியைச்

சேர்ந்த செல்வாக்குமிக்க பணக்கார விவசாயிகளில் ஒரு குழுவினரை தந்திரமாகக் காங்கிரஸ் தேர்ந்தெடுத்தது. இந்த வர்க்கத்தின் பெரும்பகுதியும் அதன் கூட்டாளியாக இருந்தபொழுது காங்கிரஸ் தனது சொந்த அரசியல் ஆசைகளை வளர்த்துக் கொண்டு, பகுதிசார் கட்சிகளை உருவாக்கி உள்ளூர் மற்றும் மாநில அளவிலான அதிகார மையங்களை மெதுவாக கைப்பற்றியது. சமூகநீதி மற்றும் மதச்சீர்திருத்தம் என்ற பெயரில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திறமையாகப் பாதுகாக்கப்படும் சாதிகள் மற்றும் சமயக்குழுக்கள் ஆகிய வடிவங்கள் வாக்கு வங்கிகளாக மேலெழுந்து தேர்தல் அரசியல் கடும்போட்டி மிக்கதாக ஆனது. இங்கிருந்துதான் விழிப்புணர்வுடைய ஆளும் கட்சியின் அமைப்பு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சித் தொடங்கியது. உண்மையிலேயே அது காங்கிரசிலிருந்துதான் முதலில் தொடங்கியது. அம்பேத்கரது மையமான அக்கறைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு அவர் ஒரு தேசியவாதி அரை காங்கிரஸ்காரர். ஓர் அரசியல் ஞானி மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர் எனத் திட்டமிட்ட முறையில் வழிப்பாட்டு உருவமாக மாற்றப்பட்டார். இத்தகைய பிரச்சாரம் ஒரே கல்லில் பல பறவைகளைக் கொன்றொழித்தது. அம்பேத்கரது வழித்தோன்றல்களை இது வென்றெடுத்தது. சந்தர்ப்பவாத தலித் தலைவர்கள் ஒட்டு மொத்தமாக காங்கிரசுக்குச் செல்வதை வேகப்படுத்தியது. தலித் இயக்கங்களைத் திசைத் திருப்பி அடையாள அரசியலைத் தழுவச் செய்தது. அம்பேத்கரது அடிப்படைக் கருத்துக்களைப் படிப்படியாகத் தகர்தெறிந்தது. மெல்ல மெல்ல மற்றக் கட்சிகளும் இத்தகைய போட்டியில் நுழைந்து அவரவருக்குச் சொந்தமான புனித அம்பேத்கர் பிம்பத்தை அவர் முன்நிறுத்தின. தமது கருத்தியலின் தாக்கத்தை விரிவாக்கிப் பரவச் செய்து முக்கியத்துவம் வாய்ந்த புதிதாக மேலெழும்பும் பிரச்சனைகளைக் கையாள்வதெனச் சங்பரிவாரம் இரண்டாம் தலைமுறை அமைப்புகளை உருவாக்கியது. தலித்துக்களைத் தமது பிடிக்குள் கொண்டுவர சமஜிக் சம்ர சாட்டா மன்ச் (சமூகக்கூடல் மேடை) உருவாக்கப்பட்டது. தலித் மற்றும் பொதுவுடமை இயக்கங்கள் உருவான அதே சமயத்தில் 1925 ஆம் ஆண்டில் உருவான ஆர்.எஸ்.எஸ். தொடக்கத்தில் கற்பனையான இந்துப் பெரும்பான்மையைத்தான் சார்ந்திருந்தது. ஆனால் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் எதிர்ப்பு அலையின் மீது சவாரி செய்து 94 இடங்களைப் பிடிக்கும் வரை அது சமூதாய அளவிலோ அல்லது அரசியல் ரீதியாகவோ தனது தடத்தைப் பதிப்பதில் தோல்வியே கண்டது.

**அம்பேத்கரைக் காவிமயமாக்கல்**

அம்பேத்கரின் இந்துயிச எதிர்ப்பு விமர்சனங்களால் ஆர்.எஸ். எஸ். அவரை மௌனமாக எதிர்த்து வந்தது. ஆனால் ஆர்.எஸ். எஸ். அம்பேத்கரது கருத்தியலைக் கொண்டிராத தலித்துகளைச் சார்ந்திருந்தது. பிற்காலத்தில் பால் தாக்ரேயும் இவ்வாறுதான் செய்தார். எப்படியோ அரசியல் அதிகார இறைச்சியின் சுவையை ருசித்துவிட்டதால், நாட்டுப்புற இந்தியத் தலித்துகளின் புனிதராக வளர்ந்துவிட்ட அம்பேத்கரைப் புறக்கணிக்க இயலாது என ஆர்.எஸ்.எஸ். உணர்ந்துக்கொண்டது. எனவே அவரின் அரிதான சில கருத்துகளை அதன் உள்ளடக்கத்திலிருந்து பிரித்தெடுத்து தனது கோயபெல்சுப் பொய்களை அதோடு கலந்து அவரை காவிமயமாக்கத் திட்டமிட்டது.

ஒப்பிட முடியாத ஹெட்கேவருடன் அம்பேத்கரை இணைத்து இருவரையும் இரண்டு டாக்டர்கள் என அழைத்ததுதான் அம்பேத்கர் மீதான காவிகளின் முதல் தாக்குதல். மெட்ரிக்குலேசன் படிப்பிற்குப் பிறகு அங்கிகரிக்கப்பட்ட மருத்துவருக்கான ஒரு மருத்துவப் பட்டயப் படிப்பை முடித்தவர் ஹெட்கேவார். ஆனால் உலகப் புகழ்மிக்க பல்கலைக்கழகங்களில் இரண்டு முனைவர் பட்டம் பெற்ற அம்பேத்கரோடு ஜெட்கேவாரை ஒப்பிட்டனர். இவர்கள் இருவருக்கிடையிலுள்ள உண்மையான ஒப்புமைதான் என்ன? அம்பேத்கரது நடைமுறைக் கோட்பாடு பல முரண்களை விட்டுச் சென்றாலும், அவரது வாழ்வின் மையமான கருத்தை யாரும் தவறவிட்டுவிட முடியாது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தி அதன் அடிப்படையிலான ஓர் இலட்சிய சமூகம்தான் தன்னுடையது எனத் தெளிவாக்கியுள்ளார் அவர். சாதி ஒழிப்பும், வர்க்க ஒழிப்பும் (சோசலிசம்) அதற்கு முன்நிபந்தனையாகவும், சனநாயகம் அதன் உட்கூறாகவும், பௌத்தம் அதன் தார்மீக சக்தியாகவும் அவர் கண்டார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உலகக் கண்ணோட்டம் இதன் ஒவ்வொரு அம்சத்திலும் நேரெதிரானதாகும். காவிமயமான அம்பேத்கர் ஒரு தேசியவாதி ஆனால் சாதி பற்றிய கவனம் இருப்பதால் இந்துக்கள் ஒரு தேசமாக இருக்கவே முடியாது என உண்மையான அம்பேத்கர் வாதிட்டார். அதிலும் இந்துதேசம் பேரழிவை உண்டாக்கக் கூடியது எனக் குறிப்பாக எச்சரித்தார். “ஓர் இந்துவாக ஒருக்காலும் சாகமாட்டேன்” எனச் சபதம் எடுத்திருந்தாலும் ஆர்.எஸ்.எஸ்ஸின் அம்பேத்கர் ஒரு பெரும் இந்து ஆவார். இந்துயிசத்தைப் புறக்கணித்து அம்பேத்கர் தழுவிய பௌத்த த்தை இந்துயிசத்தின் ஒரு பிரிவாக ஆர்.எஸ்.எஸ். முன் நிறுத்துகிறது. பௌத்தம், இந்துயிசத்தை எதிர்த்த புரட்சியை

அடையாளப்படுத்துகிறது எனும் முழு வரலாற்றையும், இந்து யிசத்தின் இழிவான எதிர்ப்புரட்சிதான் பிறந்த மண்ணிலிருந்தே பௌத்த த்தை முழுமையாகத் துடைத்தெறிந்துவிட்டது. என்பதையும் ஆர்.எஸ்.எஸ். புறந்தள்ளிவிட்டது.

தேசிய மொழியாகச் சமஸ்கிருதம் இருக்க வேண்டும் எனவும், காவிக்கொடியே தேசியக் கொடியாக இருக்க வேண்டும் எனவும் அம்பேத்கர் விரும்பினார் என ஆர்.எஸ்.எஸ். உரிமை கொண்டாடுகிறது. மேலும் அதனது சிறந்த வேலைக்காக ஆர்.எஸ். எஸ். அமைப்பை அவர் பாராட்டினார் எனவும் அவர் கர்வாப்சியை ஆதரித்தார் எனவும் கூறி விசுவ ஹிந்து பரிசத் குரங்குகளுக்கு இணையாக அம்பேத்கரைக் குறுக்குகிறது. இது குறித்து விமர்சிக்கத் கூடத் தகுதியற்றதாக அது இருக்கிறது. பாகிஸ்தான் குறித்த சிந்தனைகள் எனும் அம்பேத்கரின் நூலிலிருந்து அரிதான சில வாக்கியங்களை மேற்கோள் காட்டி, அம்பேத்கர் மூஸ்லீம்களுக்கு எதிரானவர் எனச் சங்பரிவார் அறிவாளிகள் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் வழக்குரைஞர் அங்கியை அணிந்துக் கொண்டு இந்துக்கள்முஸ்லீம்கள் ஆகிய இருவருக்காகவும் வாதிடக்கூடிய வகையில்தான் இந்தப் புத்தகம் எழுதப்பட்டது. இந்த நூலை மிகவும் கருத்தூன்றிப் படிக்காவிட்டால் இதிலுள்ள பல விவாதங்களை ஒருவர் எளிதில் தவறவிட்டுவிடக்கூடும் **அம்பேத்கர் பார்வையில் முஸ்லீம்கள் பிரமைகளும் உண்மைகளும்** எனும் எனது புத்தகத்தில் 2003 ஆம் ஆண்டில் இத்தகைய பொய்யை நான் வெளிப்படுத்தியிருக்கிறேன். மீண்டும் அவரது தாராளமான சொந்த மற்றும் எண்ணற்ற பிற குறிப்புகளில் இசுலாம்தான் மதமாற்றத்திற்குத் தனக்கு உகந்த தாகத் தோன்றுகிறது எனக்கூறும் அளவுக்கு அவர் முஸ்லீம் சமுதாயத்தைப் புகழ்ந்திருக்கிறார். அப்படியிருக்கும்பொழுது, அவரைக் குறுகிய மனப்பான்மை உடைய முசுலீம் எதிர்ப்பாளராகப் படம் பிடித்துக் காட்டமுடியாது. சில தலித் கூலிகளை மலினமாகத் தனது மேடையில் நிறுத்திக் கொள்ளலாமே தவிர, அம்பேத்கரை ஒரு வகுப்புவாதியாக ஒருக்காலும் காட்டமுடியாது. என்பதை ஆர்.எஸ்.எஸ். புரிந்துக் கொள்வது நல்லது.

**நவீன தாராளவாத நெருக்கடி**

இந்தியத் தேர்தல் சந்தையிலுள்ள பல்வேறு உற்பத்தியாளர்கள் முன்னிறுத்தும் அம்பேத்கரின் புனித பிம்பங்கள், உண்மையான அம்பேத்கரை முழுமையாக மறைத்து விட்டன. மேலும் தலித் விடுதலைக்கான திறன்மிக்க ஆயுத த்தையும் உருக்குலைத்துவிட்டன. இத்தகைய புனித உருவங்கள் வடிவங்களில் மாறுப்பட்டிருந்தாலும் இவை அனைத்தும் அம்பேத்கரை நவீன தாராளவாத எண்ணத்தில்

தீட்டிக் காட்டுகின்றன. 1947 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை வேலை செய்த அம்பேத்கரின் ஒரு புனித பிம்பம் அரசின் நல்லெண்ணத் தூதராக இருந்த காந்தியை அநேகமாக இடம் பெயரச் செய்துவிட்டது. ஆட்சி அமைப்பைச் சமாளித்தல், அதன் மக்கள் விரோத நோக்கத்தை மறைத்துக் கொண்டிருத்தல் ஆகியவற்றோடு அதன் கவர்ச்சிகரமான வெற்றுரை மற்றும் அதன் இந்து வளர்ச்சி விகிதம் ஆகியவற்றிற்கும் காந்தியார் இந்த ஆட்சிக்குப் பொருத்தமுடையவராக



இருக்கிறார். ஆனால் முதலாளித்துவ நெருக்கடி முற்றும் பொழுது, இந்த ஆட்சியின் பளபளப்பு மங்கத் தொடங்கிவிடுகிறது. நவீன தாராளவாதச் சீர்திருத்தங்களைப் பின்பற்றுமாறு இந்த ஆட்சியாளர்களை அது நிர்பந்திக்கிறது. தீவிரமான வளர்ச்சி, நவீனத்துவம், திறந்த வெளிப் போட்டி, கட்டற்ற சந்தை போன்ற வெற்றுரைகள், ஒரு புதிய மனிதரை முன்நிறுத்த வேண்டியதன் தேவையை உருவாக்கின. மக்களுக்கு, குறிப்பாக அது பாதிப்பை உண்டாக்கும் கீழ்மட்டப் பகுதியினருக்கு ஏழ்மையிலிருந்து செல்வத்திற்கு மாறும் சாத்தியத்தை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. அதற்குக் கட்டற்ற சந்தை எனும் அளவுகோலைக் கடைபிடிக்க வேண்டும். அம்பேத்கரைத் தவிர வேறொருவர் இந்த திட்டத்திற்குப் பொருந்தமாட்டார். புதிதாகப் பிறந்த நலிந்த இந்தியாவிற்குத் தேவையான ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டியதன் தேவையைக் காந்தியார் உணர்ந்தது. போன்ற அவசரத் தேவை இப்பொழுது உருவாகி உள்ளது. சமூக டார்வினிசத்தின் பொதுப் பண்பான நவீன தாராளவாதம், உயரதிகாரமிக்க ஆர்.எஸ்.எஸ். தத்துவத்தைக் குறிப்பாக எதிரொலிக்கின்ற காரணத்தால், பாஜகவை அது அரசியல் அதிகாரத்தின் மேலடுக்கிற்கு உந்தித் தள்ளியது.

தலித்துகளை நயந்து வேண்டுவதற்கு அம்பேத்கரின் புனித உருவை எல்லாக் கட்சிகளும் பயன்படுத்தும்பொழுது ஆர்.எஸ்.எஸ்.சும் காங்கிரசைவிட அதிகமான தனித்தொகுதிகளைப் பெற்றுள்ள பாரதிய சனதாக் கட்சியும் 1990 ஆம் ஆண்டிலிருந்தே அம்பேத்கரை முழு அளவு பயன்படுத்தி வந்துள்ளன. நவீன தாராளவாத ஆட்சி தலித்துகளுக்கிடையே இருந்து பாணர்களை மிக

மோசமாக வேண்டி நின்றதோடு, அப்படிப்பட்டவர்களை அதனால் பெறவும் முடிந்தது. நவீன தாராளவாதம் தலித்துகளுக்கு எவ்வளவு பயன்மிக்கதாக இருக்கும் எனத் தலித்துகளை நம்ப வைப்பதற்குப் பாரதிய சனதா கட்சியிலுள்ள சில குறிப்பிடத்தக்க தலித் மத்திய தர வர்க்கம் தொடக்கக்காலத்தில் மிகக்கடுமையாக உழைத்த து. மேலும் அம்பேத்கர் எவ்வாறு ஒரு நவீன தாராளவாதியாக இருந்தார் என்பதையும் இத்தகைய கொள்கைகளால் தலித்துகள் எவ்வாறு நம்பமுடியாத வளர்ச்சியைப் பெற்றார்கள் என்பதையும் ஒரு புரட்சியைக் கட்டவிழ்த்து விட்டதைப் போல் தலித் மத்தியதர வர்க்கம் எவ்வாறு முன்னேறிய்யது என்பதையும் மெய்பிக்க இவர்கள் கடினமாக முயன்றனர். இந்த மத்தியதர வர்க்கம் பாரதிய ஜனதாக் கட்சியோடு குறிப்பான இணக்கத்தைக் கொண்டிருப்பதால், அதிக தலித் தலைவர்கள் இன்று சனதாக் கட்சியின் பிடியில் உள்ளனர். (பாரதிய சனதாக் கட்சிக்கு அனுமாராகச் சேவை செய்யும் மூன்று தலித் இராமர்கள் EPW 12 ஏப்ரல் 2014 எனும் எனது கட்டுரையைக் காணவும்) மாணவராக இருந்தபொழுது அம்பேத்கர் ஒரு வீட்டில் தங்கினார். என்ற ஒரே காரணத்திற்காக, இலண்டனின் உள்ள அவ்வீட்டுக் கட்டடத்தை பாரதிய சனதாக் கட்சி இவ்வாண்டு 44 கோடி உருபாய்க்கு வாங்கியுள்ளது. மேலும் மும்பையிலுள்ள மாபெரும் அம்பேத்கர் நினைவகத்திற்காக இந்து மில் நில மானியத்திலுள்ள எஞ்சிய தடைகளை அது நீக்கியது. மேலும் டெல்லியில் அதைப்போலவே அம்பேத்கர் சர்வதேசிய மையத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

90% தலித்துகள் ஒப்பீட்டளவில் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தது போன்ற வாழ்நிலையிலோ அல்லது அதைவிட மோசமாகவோ இருக்கும் சூழலில் முன்பு நம்பிக்கையும் இப்பொழுது வெறுமையும் கொண்டுள்ள சூழலில், இத்தகைய அனைத்து நடவடிக்கைகளும் தலித்துகளை மயங்க வைக்கின்றன. அம்பேத்கரின் சமதா, சம்ராசடா அல்ல என்பதையோ அம்பேத்கரின் உலகக் கண்ணோட்டம் நவீன தாராளவாதம் அல்ல என்பதையோ சமூகடார்வினிசம் தலித்துகளைக் கொன்றுவிடும் என்பதையோ தலித்துகள் புரிந்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அதேபோல் ஒரே தலைமுறையில் அவர்களது பட்ஜெட் பங்கிலிருந்து ஐந்து இலட்சம் கோடி உருபாய்க்கும் மேல் திருடியதை அம்பேத்கருக்காக செலவிடப்படும் சில நூறு கோடிகளோடு ஒப்பிட்டால் அது மிகவும் அற்பமான தொகை என்பதைக்கூட அவர்கள் புரிந்துக் கொள்ளவில்லை.

............

**ஆனந்த் டெல்டும்டே** மேலாண்மைத்துறையில் பணியாற்றும் இவர் ஒரு எழுத்தாளர். மனித உரிமைச் செயல்பாட்டாளர் மற்றும் அரசியல் ஆய்வாளர். இவர் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். அவை பெரும்பாலான இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இடதுசாரிகள் குறித்தும், மக்கள் இயக்கங்கள் குறித்தும் இவரது நூல்கள் உரத்துப் பேசுகின்றன. சமகாலச் சிக்கல்கள் குறித்து மிக விரிவாக அவர் ஆங்கிலத்திலும் மராத்தியிலும் வெளிவரும் செய்தி ஏடுகளிலும் பத்திரிக்கைகளிலும் தொடர்ந்து எழுதி வருகிறார்.` Outlook India, Tehelkha, Mainstream, Seminar, Frontier, Economic and Political Weekly ஆகிய இதழ்களில் அவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளி வந்துக் கொண்டிருக்கின்றன.

நிலமற்ற உழைப்பாளியின் மகனாகப் பிறந்த இவர், பொறியியல் படிப்பிலும், மேலாண்மைப் படிப்பிலும் உயர் பட்டங்கள் பெற்றவர். கல்வி மற்றும் சமூகவியல் குறித்து விரிவான ஆய்வுரைகளைப் பல்வேறு பல்கலைக் கழகங்களில் நிகழ்த்தியுள்ளார். சனநாயக உரிமைகளைக் காப்பதற்கான குழு எனும் மனித உரிமை அமைப்பில் பல ஆண்டுகள் பணியாற்றி உள்ளார். தற்பொழுது கரக்பூர் இந்தியத் தொழில்நுட்பத்தில் மேலாண்மைப் பேராசிரியாராகப் பணியாற்றி வருகிறார்.

❖❖❖

# இன்னொரு வியட்நாம் : பாலஸ்தீன விடுதலைக்கான மாணவர் எழுச்சி.

யமுனா ராஜேந்திரன்

**“தலைமைப் பீடத்தைத் தகர்த்தெறியுங்கள். உங்கள் கலகம் நியாயமானது.”**

**கலாச்சாரப் புரட்சிக் காலத்தில் மாவோ - 1966**

**"தோழனே ஓடு, பழைய உலகம் உன் பின்னால் வருகிறது.”**

**பாரிஸ் மாணவர் போராட்டச் சுவரெழுத்து - 1968**

“பாலஸ்தீன மக்களின் மீதான இனக்கொலையில் ஈடுபட்டிருக்கும் இஸ்ரேலிய இராணுவத்திற்கு ஆயுத உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் பல்கலைக்கழகம் முதலீடு செய்வதையும், பல்கலைக் கழகத்தில் அத்தகைய நிறுவனங்கள் முதலீடு செய்வதையும் பல்கலைக்கழக நிர்வாகம் நிறுத்த வேண்டும்.”

நியூயார்க் கொலம்பியா பல்கலைக் கழக மாணவர்களின் பிரகடனம் - 2024

இஸ்ரேலியக் குண்டுவீச்சினால் காசாவில் 12 பல்கலைக் கழகங்கள், 92 பள்ளிகள் முற்றிலும் அழிக்கப்பட்டுத் தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளன. 90 ஆயிரம் பல்கலைக் கழக மாணவர்கள் கல்வி சார்ந்து நிர்க்கதியாக விடப்பட்டுள்ளனர்.

பாஸ்தீனத்திற்கு ஆதரவாக 140 அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும், இங்கிலாந்தில் 30 பல்கலைக் கழகங்களிலும், ஸ்பெயினில் 75 பல்கலைக் கழகங்களிலும் மாணவர்கள் கூடாரம் அடித்துப் போராடி வருகிறார்கள். அமெரிக்காவில மட்டும் 3,000 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான மாணவர்கள் பல்கலைக் கழகங்களிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர்.

ஜெர்மனி, நெதர்லாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் மாணவர்கள் போராட்டங்கள் அதன் ஆரம்ப நிலையிலேயே காவல்துறை கைதுகளால் தடுக்கப்படுகின்றன. மூன்று நாடுகளிலும் அமைதியாகக் கூடும் மாணவர்களின் மீது கடுமையான காவல்துறை வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

நெதர்லாந்தில் மாணவர்களின் கூடாரங்கள் புல்டோசர் கொண்டு தகர்க்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் போராடும் மாணவர்களை

முகமூடி அணிந்த இஸ்ரேலிய ஆதரவாளர்கள் தாக்குவதை காவல்துறை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. இஸ்ரேலுடன் முதலீட்டு உறவு கொண்டிருக்கும் பல்கலைக் கழக நிர்வாகங்கள் மாணவர்ளைத் தாக்கப் பல்கலைக்கழக வளாகத்திற்குள் காவல்துறையை அழைத்திருக்கிறது.

கொலம்பியப் பல்கலைக் கழகத்தில் தோன்றிய பொறி இன்று உலகெங்கும் பரவிக் கொண்டிருக்கிறது.

உலகெங்கிலும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக பல்கலைக் கழகத்திற்குள் கூடாரம் அமைத்துப் போராடிவரும் இந்த மாணவர்களின் கோரிக்கைகள் என்ன?

இஸ்ரேலுடன் தொடர்புபட்ட அனைத்து நிதித் தொடர்புகளையும், கல்வித்துறைசார் உறவுகளையும் தமது பலகலைக் கழகங்கள் கைவிடவேண்டும் (Divestment).

பல்கலைக் கழகங்களில் பாலஸ்தீனம் சார்ந்த வரலாற்றைக் கற்பிக்க வேண்டும். பாலஸ்தீனக் கல்வியாளர்களைக் கற்பிக்க அனுமதிக்க வேண்டும்.

சில பல்கலைக் கழகங்கள் அரசுடன் இணைந்து மாணவர்களை ஒடுக்கிக் கொண்டிருக்க, பல பல்கலைக் கழகங்கள் மாணவர்களின் ஒரு சில கோரிக்கைகளையோ அல்லது முழுமையையுமோ ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் போராட்டங்கள் இரண்டு முக்கியமான பிரச்சினைகளை உலகுக்கு அறிவித்திருக்கின்றன.

(1). ஆயுத உற்பத்தியில் பல்கலைக் கழகங்கள் முதலீடு செய்கின்றன. ஆயுத உற்பத்தியாளர்கள் பல்கலைக் கழகங்களில் முதலீடு செய்கிறார்கள். இதன்வழி போரழிவின் பகுதியாக பல்கலைக் கழகங்கள் ஆகியிருக்கின்றன.

(2). பல்கலைக் கழகங்கள் சமூகக் கருத்துருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவற்றைக் காலனிய மூளைகள் இன்றும் கட்டுப்படுத்துகின்றன. இதற்கு மாற்றான சிந்தனையமைப்புகளையும் தமது கற்றல் திட்டங்களுக்குள் பல்கலைக் கழகங்கங்கள் கொண்டுவரவேண்டும்.

அயர்லாந்தில் டப்ளின், ஸ்விட்சர்லாந்தில் ஜெனோவா, இங்கிலாந்தில் கோல்ட்ஸ்மித், ஸ்பெயினிலுள்ள 75 பல்கலைக் கழகங்கள் பாலஸ்தீன ஆதரவு மாணவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளன. அமெரிக்காவில் இல்லினாய்ஸில் உள்ள வடமேற்குப் பல்கலைக்கழகம், ஒலிம்பியாவில் உள்ள எவர்கிரீன் ஸ்டேட் காலேஜ், வாஷிங்டன், நியூ ஜெர்சியில் உள்ள நியூ பிரன்சுவிக்கில் உள்ள ரட்ஜர்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் மினியாபோலிஸில் உள்ள மினசோட்டா பல்கலைக்கழகம்

ஆகியவை மாணவர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளன. இவர்கள் போராட்ட முகாம்களைத் தொடர அனுமதித்துள்ளனர். இஸ்ரேலுடனான நிதித் தொடர்புகள் விலக்கிக் கொள்ளப்படும், கற்றலில் பாலஸ்தீனப் பிரச்சினை உள்வாங்கப்படும் என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன.

சின்னச் சின்ன நகர்வுகள்தான். இவை காட்டுத் தீயின் வலிமை கொண்ட பொறிகள்.

அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் உள்ள பெரிய பல்கலைக்கழகங்கள் பெரிய முதலீட்டு நிறுவனங்களுக்கு நிகரானவை. இவை சர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் தங்கள் பல்கலைக் கழகம் மனிதர்களுக்கும் புவிக்கும் தீங்கு விளைவிக்கும் நிறுவனங்களில் முதலீடு செய்வதை விரும்புவதில்லை. இந்தப் பதற்றம் காலப்போக்கில், மரபார்ந்த பல்கலைக்கழகச் சமூகம் குவிக்கக்கூடிய அதிகாரத்தைத் தக்கவைக்க மாணவர்களின் மீதான அடக்குமுறை, கல்விப்பாடங்ளில், கற்பித்தலில் அதிநவீன தணிக்கை முறைகளுக்கு வழிவகுத்தது.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் நாள் அமெரிக்காவின் கொலம்பியா பலகலைக்கழகத்தில் தொடங்கிய மாணவர்களின் கூடாரப் போராட்டம் இன்று உலகெங்கிலும் தீர்மானமான பாதிப்பை உருவாக்கியிருக்கிறது. பாலஸ்தீன இஸ்ரேல் பிரச்சினை குறித்து அதிக நூல்கள் எழுதிய இங்கிலாந்து பல்கலைக்கழகப் பேராசிரியர் இலன் பெப்பே சொல்கிறபடி :

அமெரிக்காவில் தொடங்கிய மாணவர்களின் எதிர்ப்பு இயக்கம் தற்போது மேற்கத்திய உலகம் முழுவதும் பரவி வருவதால் இஸ்ரேல் மீதான பல்கலைக் கழகங்களின் புறக்கணிப்பு அதிகரித்துள்ளது. மாணவர்கள் தங்கள் கோரிக்கைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்கும்படி பல்கலைக்கழகங்களை வற்புறுத்துவதில் ஏற்கனவே வெற்றி பெற்றுள்ள சூழலில், இஸ்ரேலிய பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களில் இருந்து தமது பல்கலைக்கழகங்கள் விலக வேண்டும் என்று கோரிய கல்வியாளர்களைத் தம்முடன் அவர்கள் இணைத்துக் கொண்டனர்.

இஸ்ரேலின் ஹீப்ரு பல்கலைக்கழகத்தின் மூத்த அரேபிய விரிவுரையாளர் நதேரா ஷல்ஹ_ப் கெவோர்கியன் தாம் பணியாற்றிய பல்கலைக் கழகத்தை இராணுவ உற்பத்தியில் அதன் தொடர்பை விமர்சித்த காரணங்களுக்காக இடைநீக்கம் செய்யப்பட்டார். அவரது சக ஊழியர்களின் உதவியுடன் போலீசார் அவரை நீண்ட விசாரணைக்கு அழைத்து வந்து கைகளையும் கால்களையும் கட்டி இரவு முழவதும் குளிர் அறையில் அடைத்தனர்.

இறுதியாக, காசாவில் அறுவைச்சிகிச்சை நிபுணராக இருந்த

ஸ்காட்லாந்து கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தின் இயக்குனரான கசான் அபுசித்தாவின் சாட்சியத்தினால், காசாவில் பாவிக்கப்பட்ட இஸ்ரேலிய இராணுவ ட்ரோன் தயாரிப்பாளரான எக்ஸ்டெண்டில் டெல் அவிவ் பல்கலைக்கழகத்தில் செய்த முதலீட்டைப் பத்திரிகையாளர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர். இஸ்ரேலிய ஆயுதத் தொழிலில் இதுவும், இதேபோன்ற கல்விச் சாலைகளிளினதும் உடந்தையானது இஸ்ரேலியக் கல்வியாளர்களையும் அவர்களின் அரசையும் உலகெங்கிலும் மேலும் தனிமைப்படுத்தியிருக்கிறது(1).

மாணவர்களின் இந்தப் போராட்டங்களை அமெரிக்க, மேற்கத்திய அரசுகள் யூத இன வெறுப்புப்(Anti Semitic) போராட்டங்கள் என நிரல்படுத்துகின்றன. யூத மாணவர்களை இவர்கள் அச்சுறுத்துகிறார்கள் எனப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

கனடிய நிறுவனமான ஸ்டார்பக்ஸின்(Starbucks) முதலாளி ஹோவர்ட் ஷல்ட்ஸ், கணினி நிறுவனமான டெல்(Dell) முதலாளி மைக்கேல் டெல், டொனால்ட் டிரம்பின் மருமகன் ஜாரெட் குஷ்னரின் சகோதரரும் நிதியாளருமான ஜோசுவா குஷ்னர் போன்ற பெரும் யூதச் செல்வந்தர்கள் மாணவர்களின் போராட்டத்தை முறியடிக்க நிதியளிப்புச் செய்வதற்காக ஒரு வாட்ஸ்ஏப் குழுவையே உருவாக்கியிருக்கிறார்கள்(2).

அரசுகளின் வன்முறை, வெள்ளை இனவெறி அடக்குமுறை இரண்டு முக்கிய இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, முதலில் எதிர்ப்புத் தெரிவிக்கும் மாணவர்களின் மனதை விரக்திக்கு ஆட்படுத்துவது, அவர்களின் எழுச்சியூட்டும் எழுச்சியை பயனற்றது என்று நிராகரிப்பது. இரண்டாவதாக இயக்கத்தின் பிரதான கோரிக்கைகளிலிருந்து அவர்களைத் திசைதிருப்புவது. ஆக்கத்திறனுடன் அச்சமற்றும் தன்னலமற்றும் செயல்படும் மாணவர்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் இஸ்ரேல் புறக்கணிப்பு, காசா போர்நிறுத்தம்(Ceasefire) எனும் கோரிக்கைகளை வீறுடன் தொடர்ந்து முன்வைத்து வருகிறார்கள்.

பாலஸ்தீனத்திற்கு ஆதரவான மாணவர்களின் இந்த எழுச்சி நமது நினைவுகளில் வரலாற்றின் பல நிகழ்வுகளை நம்மை மீள் நோக்கச் செய்கிறது. உலகை மாற்றிய நிகழ்வுகளில் பிரதானமானது அக்டோபர் புரட்சி. அதனைத் தொடர்ந்து வருகிறது நாற்பதுகள் தொடக்கம் காலனிய ஆதிக்க எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டங்கள். பிரான்சில் படிக்கச்சென்ற சீன மாணவர்கள் சீனா திரும்பியபோது மார்க்சியச் சிந்தனையையும் உடன் ஏந்திச் சென்றனர். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் பலரும் அம்பேத்கரும் இவ்வாறு தமது அயலக வாழ்வில் விடுதலைச் சிந்தனையை அகலித்துக் கொண்டார்கள். அரபுலகின் ஒரே சோசலிச நாடாக ஒருபோது

இருந்த தெற்கு யேமானின் தலைவர்கள் 60-70களில் லெபனான் அமெரிக்கன் பல்கலைக்கழகத்தில் படித்து நாடு திரும்பியவர்கள். ஜார்ஜ் ஹபாஸ், காசன் கனாபாணி போன்றவர்கள் செயலாற்றிய பாலஸ்தீன மக்கள் விடுதலை இயக்கம் இங்கு படித்து நாடு திரும்பியவர்களால்தான் உருவாக்கப்பட்டது.

மேற்குலகில் இதற்கு இணையான ஒன்று 1968 பாரிஸ் மாணவர் தொழிலாளர் எழுச்சி.

அறுபதுகளில் மாணவர்கள், உதிரிப்பாட்டாளிகள், வேலையற்றவர்கள், கலைஞர்கள், பிற சமூக இயக்கங்கள் சார்ந்தவர்களைப் புரட்சிகர சக்திகளாக மதிப்பிட்ட ஒரு கருத்தியல் போக்கை புதிய இடதுசாரிகள் முன்வைத்தனர். **ஹெர்பர்ட் மார்க்யூஸ்** இந்தப் போக்கை முன்வைத்தவர்களில் முக்கியமான கோட்பாட்டாளர். மூன்றாம் உலகின் விடுதலைப் போராட்டங்களை இவர்கள் தீவிரமாக ஆதரித்தனர். மாவோ, ஹோசிமின், சேகுவேரா இவர்களது ஆதர்சம். சீனத்தின் கலாச்சாரப் புரட்சியில் மாணவர்கள் முன்னோடிகளாகச் செயல்பட்டனர். பிரெஞ்சு மாணவர் எழுச்சியை பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி போலவே லூயி அல்தூசர் ஆரம்பத்தில் ஆதரிக்கவில்லை. அவர் பிற்பாடு தனது நிலைபாட்டை மாற்றிக் கொண்டார். ழான் பவல் சார்த்தர் முழுமையாக ஆதரித்தார்.

‘மாணவர்கள் திட்டவட்டமான இலக்குகள் அற்றவர்கள். அவர்களது போராட்டங்கள் வெற்றிபெறவில்லை. அவர்கள் வன்முறையாளர்கள்’ எனப் பலவாறான விமர்சனங்கள் இன்றும் உள்ளன.

பாரிஸ் மாணவர் எழுச்சி இன்று வரை பேசப்பட என்ன காரணம்? பெண்ணிலை நோக்கு பெரும் சமூகத்தில் பரவ அது ஒரு காரணம். தேசிய விடுதலைப் போராட்டங்களின் அறநிலைபாட்டை அவர்கள் உலகெங்கும் எடுத்துச் சென்றார்கள். தொழிலாளர்கள் கூலி உயர்வு, வேலை நிலைமை தொடர்பாக அவர்கள் குரல்கொடுத்தார்கள். புதியதொரு உலகை அவர்கள் கனவு கண்டார்கள்.

மாவோ மாணவர்கள் பற்றிக் கூறியது இங்கு பொருத்தமானது :

ஒரு இளைஞன் ஒரு புரட்சியாளர் என்பதை நாம் எவ்வாறு தீர்மானிக்க வேண்டும்? நாம் எப்படி இதனை வரையறுக்க முடியும்? ஒரே ஒரு அளவுகோல் மட்டுமே இருக்க முடியும். பரந்த அளவிலான தொழிலாளர்கள் விவசாயிகளுடன் அவர் தன்னை ஒருங்கிணைக்க விரும்புகிறாரா இல்லையா என்பதோடு நடைமுறையில் அவர் அவ்வாறு செய்கிறாரா எனப் பார்க்கவேண்டும். அவர் அவ்வாறு செய்யத் தயாராக இருந்து, உண்மையில் அவ்வாறு செய்தால், அவர் ஒரு புரட்சியாளர். இல்லையெனில் அவர் ஒரு புரட்சியாளர்

அல்லாதவர் அல்லது எதிர்ப்புரட்சியாளர். இன்று அவர் திரளான தொழிலாளர்கள் விவசாயிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டால் இன்று அவர் ஒரு புரட்சியாளர். நாளை அவர் அதைச் செய்வதை நிறுத்தினாலோ அல்லது சாதாரண மக்களை ஒடுக்குவதாலோ அவர் ஒரு புரட்சியாளர் அலலாதவராக, எதிர் புரட்சியாளராக மாறுகிறார்(3).

இன்று பாலஸ்தீன ஆதரவு மாணவர்களின் எழுச்சியை மதிப்பிடுபவர்கள், இந்தப் போராட்டம் காலனியாதிக்கத்திற்கு எதிரான(anti colonial), நிற ஒதுக்கலுக்கு எதிரான(against aparthied), குடியேற்றக் காலனியத்திற்கு(settlers colonialism) எதிரான போராட்டம் என வரையறுக்கிறார்கள். இது இன்று சூழலியலுக்கான, பூமியைப் பாதுகாப்பதற்கான, எட்வர்ட் சைத் வாதித்த கலாச்சார ஏகாதிபத்தியத்கெதிரான(against cultural imperialism) போராட்டமாக இருக்கிறது. அந்த வகையிலேயே வியட்நாமிய ஆதரவுப் போராட்டத்துடன் இதனை ஒப்பிடுகிறார்கள்.

இந்தியாவில் நக்சலைட் எழுச்சியிலும் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலும் மாணவர்கள் மகத்தான பங்காற்றினர். நம் காலத்தில் அதற்கான சாட்சி ஜேஎன்யூ மாணவர்கள். ஆஸாதி என்பதை காஷ்மீரி மக்களே முதலில் முழங்கினர். அது செக்யூலர் முழக்கம். அதனை ஜேஎன்யூ மாணவர்கள் தேசிய முழக்கமாக ஆக்கினர். இன்குலாப் எனும் முழக்கம் பகத்சிங்குடன் வைத்துக் காணப்படுவது. இந்திய சுதந்திரத்திற்கான இன்னொரு பாதை என அதற்குப் பொருள். இந்தியா கேட்டில் மாணவர்களின் போராட்டத்தில் ஆஸாதி, இன்குலாப் ஜிந்தாபாத் என இந்த இரு முழக்கங்களே எழுப்பப்பட்டன.

பாலஸ்தீன மாணவர்களின் மீதான அமெரிக்க,மேற்கத்திய அரசுகளின் வன்முறையை 1968 பாரிஸ் மாணவர்களின் அனுபவத்துடன், 2020 இல் ஜேஎன்யூ மாணவர்கள் தாக்கப்பட்ட அனுபவத்துடன் நாம் இணைத்துப் பார்க்க முடியும். பாரிஸ் காவல்துறை வன்முறையில் 800 மாணவர்கள் காயப்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டார்கள்.

ஜேஎன்யூ வன்முறையில் போராடிய மாணவர்களின் உடல், உடைமை, பொருட்கள் சார்ந்து வன்முறையைத் திட்டமிட்டவர்கள், முன்னெடுத்தவர்கள், பங்கு கொண்டவர்கள் 20 ஏபிவிபி மாணவர்கள் மற்றும் அவர்களால் திரட்டப்பட்ட 20 வெளியாட்கள். இது தாக்குதலில் பங்குபற்றியவர்களின் நேரடி சாட்சியங்களால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

தாக்குதலுக்குக் காவல்துறை தூண்டுதலாக இருந்திருக்கிறது. பல்கலைக் கழகத் துணைவேந்தர் நடைபெற்ற போராட்டத்தைப்

புறந்தள்ளி, மாணவர்கள் முன்வைத்த விடுதிக் கட்டணம், கல்விக்கட்டண உயர்வு போன்றவற்றைப் பற்றி உரையாட மாணவர்களைச் சந்திக்காமல், அவர்களைப் புறந்தள்ளி பல்கலைக கழக நிர்வாகம் கணினி வழியில் இது பற்றி அறிக்கைகள் மட்டும் விட்டு வந்ததால், இடதுசாரி அமைப்பு மாணவர்கள் கணினி சர்வரை மூடியிருக்கிறார்கள். இடதுசாரி மாணவர்கள் இதனைச் செய்யக் காரணம் துணைவேந்தரின் அலட்சியம் அல்லது புறக்கணிப்பு. இடதுசாரி மாணவர்கள் எந்த வன்முறையிலும் ஈடுபடவில்லை. பல்கலைக் கழகத்தில் முகமூடி அணிந்து, இரும்பு, கட்டைகள், கற்கள் கொண்டு தாக்கியவர்கள் ஏபிவிபி அமைப்பினர் மற்றும் அவர்களது கையாட்களான வெளியாட்கள்.

தமிழகத்தின் சென்னை ஐஐடியில் மாணவர்கள் மாணவிகள் நிர்வாகத்தின் பாரபட்சமான நடவடிக்கைகளால் பலர் தற்கொலை செய்து கொண்டனர். காரணங்களாக அங்கு பணியாற்றும் பார்ப்பனப் பேராசிரியர்களின் சாதி, மத உளவியல் சித்திரவதைகள் சொல்லப்பட்டன. ஐஐடி மாணவர்கள் ஐஐடியின் கட்டமைப்புசார் பிரச்சினைகளில் குறைகண்டு மாணவர் மனநலம் குறித்து வெளியிலுள்ள துறைசார் நிபுணர்களின் தலையீடு தேவை என்று கேட்கும்போது, ஐஐடி நிர்வாகம் தனது கட்டமைப்புசார் ஓர்மை பற்றிப் பேசி அந்த அறவொழுக்கத்தைச் சமூக ஊடகங்கள் கொச்சைப்படுத்திக் கொண்டிருப்பதாகச் சொன்னது. இந்தியாவெங்கிலும் இன்றும் கல்லூரிகளில சாதிய, மத ஒதுக்கல்களால் தற்கொலைகள் நிகழ்ந்துவருகின்றன. உஸ்மானியப் பல்கலைக் கழகத்தில் சாதிய ஒதுக்கலால் நிகழ்ந்த ஆய்வு மாணவர் ரோகித் வெமுலாவின் தற்கொலை இந்திய மனசாட்சியை உலுக்கியது. இவ்வாறு உலகெங்கும் போராடும் மாணவர்களின் மீது ஒடுக்குமுறை அரசுகள் ஒரே விதமான வன்முறையைச் செலுத்தி வருகின்றன. எனினும், நீதிக்கான போராட்டங்கள் என்றும் ஓய்வதில்லை.

மாணவர்களின் போராட்டங்கள் தேசிய எழுச்சியை, ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் எழுச்சியைத் தட்டி எழுப்புகின்றன. அவை சர்வதேசிய உணர்வாகவும் வெளிப்பட்ட தருணங்கள உண்டு. அப்படியான முதல் அலை வியட்நாம் ஆதரவுப் போராட்டங்களாக வடிவம் எடுத்தன. பாரிஸ், பெர்லின், பிராக், நியூயார்க் என அது பரவியது. அன்றும் மாணவர்கள் அரச வன்முறைக்கு ஆளாகினர். அதன் இரண்டாம் அலை பாலஸ்தீன விடுதலைக்கு ஆதரவாக எழுந்திருக்கிறது. காசா போர்நிறுத்தத்தைக் கோருவதோடு ஆயுத உற்பத்தியில் இருந்து பல்கலைக கழங்கங்கள் வெளியேறவும் அவர்கள் கோருகிறார்கள். கருத்துரிமையோடு புவியைப்

பாதுகாப்பதாகவும் அவர்களது கோரிக்கைகள் இருக்கின்றன.

மாணவர்களின் போராட்டங்கள் வரலாற்றில் சாதித்தது என்ன என்பதற்கான சாட்சியமாக பாரிஸ், பெர்லின், நியூயார்க் போரட்டங்களை நேரில் கண்ணுற்ற எட்வர்ட் மார்க்யூசின் வார்த்தைகள் பின்வருமாறு:

இந்த நேரத்தில், இந்த நிகழ்வு இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நான் ஏன் கருதுகிறேன் என்பதை நான் உங்களுக்குப் பரிந்துரைக்க விரும்புகிறேன். முதலாவதாக அறிவுஜீவிகளின் தாழ்வு மனப்பான்மையால் இன்னும் பாதிக்கப்படுபவர்களை ஒருமுறை குணப்படுத்த வேண்டும். இந்த விஷயத்தில் மாணவர்கள் என்ன செய்ய முடியும் என்பதைத் தொழிலாளர்களுக்குக் காட்டினர். தொழிலாளர்கள் அந்த முழக்கத்தையும் மாணவர்களின் முன்மாதிரியையும் பின்பற்றினர் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. மாணவர்கள் உண்மையில் புதிய அலையினர். அவ்வவுதான். ஏனெனில் நடந்தது ஒரு புரட்சி அல்ல, ஆனால் ஒரு செயலின் புதிய அலை. உண்மையில் அது தன்னிச்சையாக மக்கள் திரள் செயல்பாடாக மாறியது. என் பார்வையில் அதுதான் அந்தப் போராட்டத்தின் தீர்க்கமான புள்ளி.

அவர்கள் பல்கலைக்கழகத்தை அரசியல்மயமாக்க வேண்டும் என்றனர். முழுமையான பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் வேண்டும் என்றனர். மாணவர் தலைவரான கோன பெண்டிட் பல சந்தர்ப்பங்களில், அமெரிக்கக் கொள்கையின் ஆதரவாளர்கள், வியட்நாமில் போரை ஆதரிப்பவர்களைப் பொறுத்துக்கொள்வது பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை அவமானப்படுத்துவதாகும் என்று அறிவித்தார். இந்த சமூகத்தில் இன்னும் எஞ்சி இருக்கும் சுதந்திரத்தின் கடைசி எச்சங்களை வீழ்த்தி, அவர்களின் கொள்கையாலும் பிரச்சாரத்தாலும் சகித்துக்கொள்ளச் செய்வதாக பேச்சுச் சுதந்திரத்துக்கான உரிமை விளங்கக் கூடாது. இவர்கள் உலகின் பெரும் பகுதியை ஒரு புதிய காலனித்துவ களத்தில் புரட்டிப் போடுபவர்கள் என்பது மாணவர்களால் மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டது(4).

பாலஸ்தீன ஆதரவு மாணவர் எழுச்சி தொடங்கிய அதே கொலம்பியா பல்கலைக் கழகத்தில் நவீன அரபு அரசியல் மற்றும் அரபு அறிவுமரபு வரலாறு பற்றிக் கற்பிக்கும் பேராசிரியர் சோசப் மஸ்சாத் இவ்வாறு சொல்கிறார்:

இன்று நாம் மீண்டும் இந்த யுத்தத்தின் பிடியில் சிக்கியுள்ளோம். , பாலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலின் இனக்கொலையை எதிர்ப்பது என்பது யூதர்களின் மீதான பாலஸ்தீனிய இனப்படுகொலை ஆதரவு என தற்போதைய ஆர்வெல்லியன்

மொழியில் மொழிபெயர்க்கப்படுகிறது. இஸ்ரேலிய யூத இன மேலாதிக்கத்தையும் காலனித்துவ நிறவெறியையையும் எதிர்ப்பது என்பது யூத வெறுப்பின் வடிவமாக மொழிபெயர்க்கப்படுகிறது. பல்கலைக்கழக வளாகங்களில் கல்விச் சுதந்திரத்தையும் பாதுகாக்கப்பட்ட பேச்சையும் நசுக்குவது என்பது அவற்றை வலியுறுத்தும் ஒரு வடிவமாகிறது.

பல்கலைக்கழகங்களில் உள்ள நவதாராளவாத உயர்மட்டத் தலைவர்கள், அவர்களது தனியார் மற்றும் பொது நிதி வழங்குபவர்கள, அரசாங்கத்தில் உள்ள அவர்களது கூட்டாளிகள் இனப்படுகொலைக்கான எதிர்ப்பைக் கிடைக்கும் ஒவ்வொரு சக்தியாலும் ஒடுக்க முடியும் என்ற மாயையில் உழைக்கிறார்கள், இது அமெரிக்காவிற்குள் இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு ஆதரவான எதிர்ப்பை உறையச்செய்து, அமெரிக்க மேற்கத்திய உயரடுக்கு வட்டங்களின் இஸ்ரேலிய ஆதரவைப் பாதுகாக்கும் என நம்புகிறார்கள். கடந்த ஏழு மாதங்களில் மாணவர்களும் ஆசிரியர்களும் நிரூபித்தது என்னவென்றால், கருத்தியல் மேலாதிக்கத்தை மீண்டும் இவர்கள் நிலைநிறுத்துவது என்றென்றும் முடிவுக்கு வந்துவிட்டது. அரசும் பல்கலைக்கழக நிர்வாகங்களும் எவ்வளவு நிர்ப்பந்தத்தைப் பயன்படுத்துகிறார்களோ அந்த அளவுக்கு அவர்களது மேலாதிக்கம் அழிக்கப்பட்டு வருகிறது(5).

2023-2024 காசாப் போர் என்பது அமெரிக்க,மேற்கத்திய, காலனிய, வெள்ளையின மேலாதிக்க ‘உலக ஒழுங்கின்’ முடிவு. இதனை பாலஸ்தீன ஆதரவு மாணவர்கள் தமது எழுச்சியின் வழியில் உலகுக்குத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள்.

**ஆதாரங்கள்:**

*1. Should academic institutions boycott Israel? by Ilan Pappé / The Guardian / 01 June 2024.*

*2. Pro-Israel billionaires urged New York crackdown on Gaza protests: Report / Alzajeera / 16 May 2024.*

*3. Mao/ The Orientation of the Youth Movement / 4 May 1939.*

*4. Herbert Marcuse and the Student Revolts of 1968: An Unpublished Lecture / Jacobin 31 March 2021.*

*5. Student protests upend hegemony on Israel and Palestine forever/ Joseph Massad/ Middle East Eye/ 09 May 2024.*

❖❖❖

# தொல்கபிலர்-ஒரு தமிழர்

**கணியன் பாலன்**

பொருள்முதல்வாத மெய்யியலை அடிப்படையாகக் கொண்ட ஒரு தத்துவார்த்த அறிவியல் கோட்பாடுதான் சாங்கியம் எனப்படும் எண்ணியம். இதனைத் தோற்றுவித்தவர்தான் தொல்கபிலர். தமிழின் சங்க இலக்கியமான புறநானூறு தனது 166 ஆம் பாடலில் தொல்கபிலரை **முதுமுதல்வன்** என்கிறது. அவர் எழுதிய நூலை 24 கூறுகளை விளக்கும் மிகத் தொன்மையான நூல் எனக் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத் தொகுப்புகள் அவரைத் தொல்கபிலர் என்கின்றன. சித்தர் பத்ரகிரியார் அவரை **ஆதிகபிலர்** என்கிறார். வடமொழி நூல்கள் அவரை கபிலர், கபிலமுனி எனக் குறிப்பிடுகின்றன. சில வடமொழி நூல்கள் அவரை ‘அசுரர்’ என்கின்றன. பாகவத புராணம் அவரைக் கடவுளின் அவதாரம் எனக் கூறுகிறது. ஆதிசங்கரர் அவரை மகாமேதை எனக் குறிப்பிடுகிறார் (1).

தொல்கபிலர் குறித்து விவேகானந்தர், “இந்தியாவில் தோன்றிய ஒவ்வொரு மெய்யியலும், ஒவ்வொரு சமயநிறுவனமும் கபிலர் என்ற மாமனிதருக்கு உளவியல் அடிப்படையிலும், மெய்யியல் அடிப்படையிலும் கடமைப்பட்டுள்ளது. அவர் மறைந்த, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட, அந்தப் புகழ்மிக்க வியப்புக்குரிய ஒளிநிறைந்த கபிலர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்” எனக்கூறுகிறார் (2).

இந்திய மெய்யியல் வளர்ச்சியடைவதற்குக் கணாதரும், கபிலரும் முன்னோடிகளாயினர். இருள் சூழ்ந்திருந்த இந்திய வானில் ஒளிவீசும் விண்மீன்களாக இந்த இரண்டு மாமனிதர்களும் தோன்றினார்கள் (3). பழங்கால இந்தியாவின் அறிவுலகப் படைப்புத்திறனை தனது பக்கம் ஈர்த்ததோடு, இந்தியச் சிந்தனையோட்டத்தை 1500 ஆண்டுகளாகத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒரு தத்துவமே கபிலரின் எண்ணியத் (சாங்கியத்) தத்துவம் எனவும் மக்கள் கபிலரை மாபெரும் சிந்தனையாளர், மனித வாழ்வை ஈடேற்றம் செய்வதற்குப் பிறந்தவர் எனப் போற்றிப் புகழ்ந்தனர் எனவும் கூறுகிறார் பிரேம்நாத் பசாசு (4).

தொல்கபிலரின் சாங்கியம் எனப்படும் எண்ணியம் மிகத் தொன்மையானது எனவும், ஆதி காலத்தில் எண்ணிய தத்துவத்துக்கு இருந்த செல்வாக்கை மகாபாரதம் முதல் புராணங்கள் வரை அனைத்தும் ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கின்றன எனவும், கீதை முதல் மனுவின் சட்ட நூல் வரை உபநிடதங்கள் (மறைமங்கள்) உட்பட அனைத்து நூல்களும் கபிலரின் கருத்துக்களால் நிறைந்துள்ளன எனவும் கார்பே கூறுகிறார் (5).

**மூல எண்ணியத்தின் பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் இந்தியத்தத்துவ வரலாற்றில் ஈடிணையற்ற சிறப்பைத்தந்தது**. இதன் காரணமாகத்தான் நமது தத்துவப் பாரம்பரியத்திற்கு ஆக்கபூர்வமான அறிவியலுக்கான அடிப்படைக் கருத்துக்களை எண்ணியத்தால் வழங்க முடிந்தது. இவற்றில் மிக முக்கியமானவை பொருள் பற்றிய கோட்பாடு, காரணகாரியக் கொள்கை, அறிவுக்கொள்கை, பரிணாமக்கொள்கை ஆகியன எனவும், உலகத்தத்துவ வரலாற்றில் ஆதிப்பழமையானதும் நன்கு திட்டமிட்டு வகுக்கப்பட்டதுமான நாத்திகத்தின் பிரதிநிதியாக மட்டும் எண்ணியம் விளங்கிடவில்லை, அதன் நாத்திகம் மிகத் தெளிவான அறிவியல் கண்ணோட்டத்தின் முன் மாதிரியால் அமையப்பெற்றது எனவும் கூறுகிறார் சட்டோபாத்தியாயா (6).

**மேற்கு நாடுகளில் தொல்கபிலரின் எண்ணியம்:**

கிரேக்க அணுவியலின் தந்தை எனப்படும் டெமாக்கிரட்டசு (Democretus) இந்தியா வந்து ஓகப்பயிற்சி பெற்றுச் சமணராக (அமணராக) கடுந்துறவு மேற்கொண்டிருந்த இந்திய (தமிழ்) அறிவர்களைக் கண்டு மெய்யியல், அணுவியல்களைக் கற்றுச் சென்றார் என கார்ல் மார்க்சு, Difference between Democriterean and Epicurean philosophy of Nature என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அலெக்சாந்திரியாவின் கிலேமான், கிரேக்கர்கள் தங்களது தத்துவ சாத்திரத்தை இந்தியாவிலிருந்து திருடி வந்தவர்கள் என்கிறார். இந்தியச் சாங்கியத்துக்கும் பித்தகொரசின் தத்துவத்துக்கும் நிறைய ஒற்றுமை இருப்பதாக 18ஆம் நூற்றாண்டு வில்லியம் சோன்சு கூறுகிறார். சுக்ரோடர் (Schroder) என்ற செருமானிய அறிஞர், ‘பித்தகோரசும் இந்தியாவும்’ (Phythagoras and die Inder, Leipzig, 1884) என்ற நூலில் பித்தகோரசுடையது எனச் சொல்லப்படும் எல்லாத் தத்துவ, கணிதத் தொடக்கக் கோட்பாடுகளும் அவர் காலத்தில், இந்தியாவில் மிகவும் வளர்ச்சிபெற்ற நிலையில் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். இவை போக சாங்கியத்தின் அடிப்படைகள் அனாக்சிமேந்தரசு (Anaximandre), கெராக்கிலிசு (Heraclite), எம்பிடாக்கில்சு (Empedocle), அனெக்சாகோரசு (Anaxagore), டெமாக்கிரிட்டசு (Democrite), எபிக்கூரசு (Epicure)

போன்றவர்களிடமும் காணப்படுவதாக அலெய்ன் டானியலு (Alain Danielou) என்ற பிரெஞ்சு பாதிரியார் தனது இந்திய வரலாறு (Histoire de l'Inde) என்ற நூலில் கூறுகிறார் (7).

உரோம வரலாற்றாசிரியரும், புவியியலாளருமான சுடிராபோ (Strabo கி.மு.63கி.பி.24) ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த பித்தகோரசு இந்தியாவிற்கு வந்து இந்தியர்களிடமிருந்து ஏழிசையைக் கற்றுச்சென்றார் எனக் கூறியுள்ளார். டெமாக்கிரட்டசு, எம்ஃபிடாக்கிள்சு, பித்தகோரசு முதலான கிரேக்க அறிஞர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து சென்றே தம் கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டார்கள் என்பதுதான் வரலாறு எனக் கூறுகிறார் க. நெடுஞ் செழியன். மேற்கத்திய அறிஞர் பித்தகோரசு தமிழரிடமிருந்து எண்ணிய மெய்யியலையும் ஏழிசையையும், எண் கணக்கையும் கற்றுச்சென்றார் என்கிறார் அறிஞர் குணா. பழங்காலத்தில் இந்தியா என்பது பழந்தமிழ் நாட்டையே குறிக்கும் (8).

எண்ணியம் (சாங்கியம்) என்ற முதுபெரும் தமிழ் மெய்யியல் நூலின் பெரும்பகுதி அழிந்துவிட்டது எனவும், அதன் ஒரு சிறுபகுதி மட்டுமே சமயம் சார்ந்த பரபக்கவாதமாக நமக்கு தற்பொழுது கிடைத்துள்ளது எனவும், எண்கணிதம், வடிவியல், இயற்கணிதம், வானவியல், அணுவியலும்அண்டவியலும், இசைக்கணிதம், கணியம் போன்ற பலவற்றைக் கொண்டதாக எண்ணியம் இருந்தது எனவும் ஆனால் அவை அனைத்தும் இன்று இல்லாது போயின எனவும் அறிஞர் குணா கூறுகிறார் (9). ஆகவே தொல்கபிலரின் எண்ணியம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே ஓர் உலகப் புகழ்பெற்ற பொருள்முதல்வாத மெய்யியலாக இருந்தது எனலாம்.

**தொல்கபிலரின் காலம்:**

பௌத்தமதக் கோட்பாடுகள் எண்ணியத்திலிருந்து தோன்றியவை என அசுவகோசர் கூறியுள்ளார். புத்தரின் ஆசிரியர்களான ஆதாரகலமா, உத்தகா ஆகியோர் எண்ணியக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்கள். இவைகள் எண்ணியத்தத்துவம் புத்தருக்கு மிக முந்தையது என்பதை நிரூபிக்கின்றன (10). எண்ணியம் என்கிற சாங்கியம் மிகப் பழங்காலத்தைச் சேர்ந்தது எனவும் மகாபாரதத்திலேயே சாங்கியம் மிகப்பழமையானது எனக் கூறப்பட்டுள்ளது எனவும், உபநிடதங்கள் கூட சாங்கியம் அவற்றுக்கு முந்தையது எனக் காட்டுகின்றன எனவும் சாங்கியம் புத்தருக்கு முந்தையது எனக் கார்பேயும், கெச்.பி. சாத்திரியும் கருதுகின்றனர் எனவும் சட்டோபாத்தியாய கூறுகிறார். மெய்யியல் அறிஞர்கள் பலர் சாங்கியம் வேதத்துக்கு முந்தைய ஆரியமில்லாத சிந்தனைப்போக்கு எனக் கருதுகின்றனர். உபநிடதங்களின் தொன்மை என்பது கி.மு. 7ஆம் நூற்றாண்டு என 'இந்தியாவில்

மெய்யியல்' என்கிற நூல் கூறுகிறது (11). சாங்கியத் தத்துவம் வேதத்திற்கு முன்பே தோன்றியதாகக் கேகன் பால் (Kegan Paul) தனது ஓகத்தின் வரலாறு (A History of Yoga-1982) என்ற நூலில் கூறுகிறார். (12).

ஆகவே மகாபாரதத்திலேயே மிகப்பழங்காலத்தைச் சேர்ந்தது எனக் கூறப்பட்டதும், உபநிடதங்களுக்கும் முந்தையதுமான எண்ணியத்தைத் தோற்றுவித்த, தொல்கபிலர் கி.மு. 7ஆம் நூற்றாண்டுக்கும் முந்தையவர் என்பதால் அவரது காலத்தை கி.மு. 800 எனக்கொண்டு, அவர் தோற்றுவித்த எண்ணிய மெய்யியலின் காலம் கி.மு. 750 எனக் கணிக்கப்பட்டது.

**தொல்கபிலர் ஒரு தமிழர்-க. நெடுஞ்செழியன்:**

கபிலர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் எனக் க. நெடுஞ்செழியன் பல்வேறு ஆய்வுகளின் மூலம் உறுதி செய்துள்ளார். கார்பே போன்ற மெய்யியல் அறிஞர்கள் பலர் எண்ணியம் வேதத்துக்கு முற்பட்டது எனவும் ஆரியர் அல்லாதவருக்கு உரியது எனவும் கருதுகின்றனர் என அவர் கூறுகிறார்.

“பார்ப்பனர்கள், பார்ப்பனத்தன்மை ஆகியவற்றின் செல்வாக்கும் பாதிப்பும் மிகக் குறைவாக இருந்த இந்தியப் பிரதேசங்களில்தான் முதல்முதலாக நம் வாழ்வு என்பது நமக்குப் புரியாத புதிராய் இருப்பதை பகுத்தறிவு கொண்டு விடைதேடும் முயற்சி செய்யப்பட்டது என்பதைப் புரிந்துகொண்டால்தான் எண்ணியத்தின் மூலத்தொடக்கத்தை விளங்கிக் கொள்ள முடியும். எண்ணியம் சாராம்சத்தில் நாத்திகமானது மட்டுமில்லை, வேதத்திற்கு விரோதமானது.... அதன் உள்ளடக்கம் வேதச் சார்புடையதன்று. பார்ப்பனர்களின் சம்பிரதாயத்திற்கும், மரபுக்கும், ஆட்படாமல் இருப்பது” எனக் கார்பே கூறுவதாக க. நெடுஞ்செழியன் குறிப்பிட்டுள்ளார்.

பார்ப்பனர்களின் செல்வாக்கிற்கும் பார்ப்பனத்தன்மைக்கும் இடம் கொடுக்காத மண் தமிழ்மண் என்பதை இங்கே தோன்றிய இலக்கியங்களின் அகப்புறச்சான்றுகள் உறுதி செய்கின்றன எனவும், சாங்கியம் எனப்படும் எண்ணியத்தின் தோற்றுநரான **தொல்கபிலரின் பாடல்கள் (6 பாடல்கள்) சங்க இலக்கியத்தில் உள்ளன** எனவும், அவரது தொன்மையையும் சிறப்பையும் பாராட்டும் வகையில் அவரைத் தொல்கபிலர் எனச் சங்க இலக்கியம் பாராட்டுகிறது எனவும், எண்ணியக் கோட்பாட்டின் மூலச்சுவடுகள் அனைத்தும் இந்தியாவிலேயே தமிழில் உள்ள தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும் மட்டுமே இடம் பெற்றிருக்கிறது எனவும் இவைகளின் காரணமாக, கார்பே அவர்கள் குறிப்பிடும் அந்த இந்தியப் பிரதேசம் தமிழ்நாடு தான் எனவும்

கூறுகிறார் முனைவர் க. நெடுஞ்செழியன் (13). மேலே தரப்பட்ட சான்றுகளின் மூலம் எண்ணியத்தின் மூலவரான தொல்கபிலர் தமிழர்தான் என உறுதி செய்கிறார் முனைவர் க. நெடுஞ்செழியன். தொல்கபிலர் தோன்றுவதற்கான பின்புலம் பழந்தமிழ் நாட்டில் தான் இருந்தது, அது வட இந்தியாவில் இருக்கவில்லை என்பதை எமது ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

**நகர அரசுகளும் பேரரசுகளும்:**

சுமேரிய நகர அரசுகளும், கிரேக்க நகர அரசுகளும் உலகப் புகழ்பெற்றவை. சுமேரிய நகர அரசுகள் கி.மு. 4000க்கு முன் மெசபடோமியா பகுதியில் உலகில் முதல்முதலாகத் தோன்றிய நகர அரசுகள். இந்த சுமேரிய நகர அரசுகளையும் அதன்பின் அங்கு உருவான அக்கேடியப்பேரரசு, பாபிலோனியப் பேரரசு, அசிரியப்பேரரசு, பாரசீகப்பேரரசு, பார்த்தியப்பேரரசு போன்றவற்றை விரிவாக ஆய்வு செய்த தொல்லியலாளர் கார்டன் சைல்டு (V.Gordon Childe), சுமேரிய நகர அரசுகளில் ஏற்பட்ட சுயமான சுதந்திரமான சிந்தனைகளும், தத்துவார்த்த, அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியும், புதிய கண்டுபிடிப்புகளும் அதன்பின் அங்கு உருவான பேரரசுகளில் ஏற்படவில்லை என்கிறார். மேலும் இந்தப் பேரரசுகள், சுமேரிய நகர அரசுகளின் கொள்கைகளை கோட்பாடுகளை, சிந்தனைகளை, அவற்றின் தத்துவார்த்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை, அதன் கண்டுபிடிப்புகளை அப்படியே பயன்படுத்திக் கொண்டன எனவும், அவை புதிதாக எதனையும் கண்டுபிடிக்கவோ உருவாக்கவோ இல்லை எனவும் அவர் கூறுகிறார்.

கிரேக்க நகர அரசுகளையும், உரோமப் பேரரசையும் ஒப்பிடும்பொழுது அவரது கூற்று உண்மை என உறுதியாகிறது. கிரேக்க நகர அரசுகள், கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம், தொழில், வணிகம், கப்பல் கட்டுதல், கட்டடக்கலை, கல்வி, அறிவியல், மருத்துவம் போன்ற பலவற்றில் பெருவளர்ச்சி பெற்று. பெரும் சாதனைகளைச் செய்தன. இன்றைய மேற்கத்திய சிந்தனைகள் அனைத்திற்கும் கிரேக்கச் சிந்தனைகளே மூலமாக இருந்தன. ஆகவே உலகத்திற்குப் பேரளவான விடயங்களை கிரேக்கம் வழங்கியுள்ளது. அதன்பின் வந்த உரோமப் பேரரசு ஐரோப்பாவின் மிகப்பெரிய பேரரசு. மிக நீண்ட காலம் இருந்த பேரரசு. ஆனால் உரோம் பேரரசு கிரேக்க நகர அரசுகளிடமிருந்து அதன் சிந்தனைகள், கோட்பாடுகள், கொள்கைகள் ஆகிய அனைத்தையும் கடன் வாங்கிக் கொண்டது. அதன் கண்டுபிடிப்புகளையும் பயன்படுத்திக் கொண்டது. ஆனால் உரோமப் பேரரசு எதனையும் புதிதாக உருவாக்கவோ கண்டுபிடிக்கவோ இல்லை. ஆகவே கிரேக்கத்துடன் ஒப்பிடும் பொழுது உரோமப் பேரரசு உலகத்திற்கு

வழங்கியது மிகக் குறைவு.

மக்களைக் கட்டுப்படுத்தப் பேரரசுகள் மதம், சமயம் சார்ந்த சிந்தனைகளையும் மூடநம்பிக்கைகளையும் பிற்போக்குச் சிந்தனைகளையும் ஊக்குவிக்கின்றன, பரப்புகின்றன. அங்கு சுதந்திரமான சிந்தனைகளும், அறிவியல் கண்ணோட்டமும் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆகவே பேரரசுகளை விட நகர அரசுகள்தான் மக்களுக்கானவை, வளர்ச்சிக்கானவை.

கி.மு. 1000க்கு முன்பிருந்து 1000 வருடங்களுக்கு மேலாக இருந்து வருகிற பழந்தமிழ்நாட்டு நகர அரசுகளையும், கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு. முதல் நூற்றாண்டுவரை 500 வருடங்களுக்கு மேலாக இருந்து வருகிற மகதப் பேரரசையும் ஒப்பிடும்பொழுதும் இதே முடிவையே நாம் வந்தடைகிறோம். நகர அரசுகளைக் கொண்ட பழந்தமிழ்ச் சமூகம், கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம், தொழில், வணிகம், கப்பல் கட்டுதல், கல்வி, அறிவியல், மருத்துவம் போன்ற பலவற்றிலும் மகதப் பேரரசைவிட மிக முன்னேறிய சமூகமாகவும் உலகின் ஒரு முன்னணிச் சமூகமாகவும் இருந்துள்ளது என்பதை உறுதி செய்ய முடிகிறது (14). ஆகவே தொல்கபிலர் வட நாட்டில் தோன்றவில்லை எனவும் அவர் பழந்தமிழ் நாட்டில் தோன்றிய ஒரு தமிழர் எனவும் உறுதி செய்யலாம்.

**பழந்தமிழ்நாட்டின் பின்புலம்:**

பேரரசுகளைவிட நகர அரசுகளில்தான் பொருள்முதல்வாத மெய்யியலும், தத்துவார்த்த அறிவியல் தொழில் நுட்பமும் பேரளவான வளர்ச்சியைப் பெருகின்றன என்பதை வரலாறு பலவகையிலும் மெய்ப்பித்துள்ளது. அதனால்தான் வளர்ச்சி பெற்ற வணிக நகர அரசுகளைக் கொண்டிருந்த பழந்தமிழ்நாட்டின் பின்புலம்தான் எண்ணியத்தின் மூலவரான தொல்கபிலர் தோன்றக் காரணமாக இருந்தது எனலாம். ஆனால் வட இந்தியாவில் கி.மு. 800 வாக்கிலோ அல்லது அதன் பின்னரோ தொல்கபிலர் போன்ற மாமேதைகள் தோன்றுவதற்கான பின்புலம் அங்கு இருக்கவில்லை.

கி.மு. 800 வரை வட இந்தியா, அநாகரிக நிலையில்தான் இருந்து வந்தது. கி.மு. 800 வாக்கில்தான் ஆரியர்கள் கங்கைச் சமவெளியில் குடியேறத் தொடங்கி இரும்பைப் பயன்படுத்தத் தொடங்கினர். கி.மு. 600க்கு பின்னரே அங்கு நகர நாகரிகம் தோன்றத் தொடங்கியது. ஆனால் அது பேரரசுகளின் நகர நாகரிகமாக இருந்தது. ஆனால் பழந்தமிழ்நாட்டில் நகர அரசுகளின் நகர நாகரிகம் கி.மு. 1000க்கு முன்பிருந்து இருந்து வந்தது. மேலும் **பழந்தமிழ்நாட்டில் கி.மு. 3000 முதலே இரும்புக்கால நாகரிகம் இருந்துள்ளது என்பதைத் தற்போதைய சிவகளை அகழாய்வு உறுதி செய்துள்ளது.**

பழந்தமிழ்நாட்டில் கி.மு. 1500 முதல் ஆதிச்சநல்லூர் போன்ற சிறுகுறு நகர அரசுகளும், அதன்பின் சில நூற்றாண்டுகள் கழித்து மூவேந்தர்களின் நகர அரசுகளும் உருவாகின.

கி.மு. 750க்கு முன்பே அவை வளர்ச்சி பெற்ற வணிக நகர அரசுகளாக, உருவாகி இருந்தன. தமிழ்நாட்டில் இந்த நகர அரசுகள் 1000 வருடங்களுக்கு மேலாக இருந்து வந்தன. பழந்தமிழ்நாடு ‘குறியீடு’ எனப்பட்ட எழுத்து வடிவத்தை கி.மு. 1500 முதல் பயன்படுத்தி வந்தது. கி.மு. 8ஆம் நூற்றாண்டு முதல் ‘தமிழி’ எழுத்து இருந்து வந்தது. ஆனால் வட நாட்டில் கி.மு. 250 வரை எழுத்தோ, கல்வியோ இருக்கவில்லை. கி.மு. 600 அளவிலேயே பரவலான கல்வியறிவும் எழுத்தறிவும் பழந்தமிழ்நாட்டில் இருந்தன என கீழடி அகழாய்வு உறுதி செய்துள்ளது. செவ்வியல் இலக்கியங்கள் தமிழ்நாட்டில் உருவாகின. ஆனால் வட நாட்டில் அவை இல்லை.

நறுமணப் பொருள்கள், அவைகளின் திரவியங்கள், பலவகையான மணிக்கற்கள், முத்துக்கள் போன்றவைகளின் உலகத்தேவையும், அவைகளால் உருவான வணிகமும், தமிழர்களைப் பெரும் கடலோடிகளாக மாற்றியமைத்தது. இக்கடல் வணிகம் கி.மு. 1500க்கு முன்பிருந்து நடந்து வந்தது. மிகப்பழங்காலம் முதல், மிக நீண்டகாலமாக மிகப்பெரிய கடற்படையையும், உலகளாவிய வணிக மேலாண்மையையும் பழந்தமிழ் அரசுகள் கொண்டிருந்தன. இவற்றின் காரணமாகப் பழந்தமிழ்ச் சமூகம் பண்டைய காலத் திலிருந்து பொருள் உற்பத்தி, வேளாண்மை, தொழில், வணிகம், மெய்யியல், அறிவியல், தொழிநுட்பம், இயல், இசை, நாட்டியம், இலக்கியம் போன்றவற்றில் நன்கு வளர்ச்சியடைந்து ஒரு உயர்வளர்ச்சி பெற்ற சமூகமாக ஆகியிருந்தது.

பழந்தமிழ்நாட்டில் இருந்த ஆட்சியாளனின் அரச அதிகாரம் பொதுமக்கள் சபைகளால் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டு இருந்தது என கிரேக்கத் தூதுவரான மெகத்தனிசு குறிப்பிடுவதாக நேரு கூறுகிறார்(6). அங்கு ஊர், நகரம் போன்றவற்றுக்கான மக்கள் பிரதிநிதிகளையும், பல்வேறு துறைகளுக்கான வாரியப் பொறுப்பாளர்களையும் நியமிக்கத் தேர்தல்கள் நடைபெற்றன என்பதை கி.மு. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மருதன் இளநாகனார் அவர்களின் அகம் 77ஆம் பாடல் உறுதி செய்கிறது. பழந்தமிழ்நாட்டில் வேந்தர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், கிளை அரசர்கள், சிறுகுறு மன்னர்கள், வேளிர்கள் போன்ற பலதரப்பட்ட தனித்தனியான ஆட்சியாளனின் கீழ் மிக நீண்ட காலமாக இருந்து வந்த நகர அரசுகள் பேரளவான வளர்ச்சியைப் பெற்றன (15).

சுகாப் என்பவர் எழுதிய எரித்ரேயக்கடலில் பெரிப்ளசு என்ற நூல், மேற்கு நாடுகளில் இருந்து தமிழகத்திற்கு வந்த கப்பல்களைவிட பழந்தமிழ் நாட்டிலிருந்து சீனா போன்ற கிழக்கு நாடுகளுக்குச் சென்ற தமிழ்நாட்டுக் கப்பல்கள் மிகப்பெரியனவாகவும் அதிக எண்ணிக்கையிலும் இருந்தன எனக் கூறுகிறது. முசிறி அலெக்சாண்ட்ரியா என்ற கி.மு. 150ஆம் ஆண்டைய கிரேக்க மொழி ஒப்பந்தம் பழந்தமிழ்நாட்டில் நடந்த பேரளவான வணிகத்தை எடுத்துக்காட்டுகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே சேரர் துறைமுக நகரான முசிறி நகரானது, இன்றைய இலண்டன், நியூயார்க், சாங்காய் போன்ற பெருந்துறைமுக நகரங்களுக்கு இணையான ஒரு பெருநகராக இருந்தது என இலத்தீன் கிரேக்க இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளன, கலிங்கத்தின் பித்துண்டா நகரம் 1300 ஆண்டுகளாக இருந்து வரும் தமிழரசுகளின் ஐக்கியக் கூட்டணியின் கட்டுப்பாட்டில் இருந்தது என கி.மு. 165ஆம் ஆண்டைய அத்திக்கும்பா கல்வெட்டு கூறுகிறது. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டின் மீது படையெடுத்த மௌரியப் பெரும்படையை தமிழரசுகளின் ஐக்கியக் கூட்டணி தோற்கடித்தது. கி.மு. 4ஆம் 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாமூலனார் தனது அகம் 31ஆம் பாடலில் மூவேந்தர்கள் மொழிபெயர்தேயம் எனப்படும் மராட்டியம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் பாதுகாத்து வந்தனர் என்கிறார் (16). இத்தரவுகள் பல்வேறு துறைகளிலும் பேரளவான வளர்ச்சியைப் பெற்றிருந்த பழந்தமிழ்நாட்டின் பின்புலத்தை வெளிப்படுத்துகின்றன. இந்தப்பின்புலம் தான் தொல்கபிலர் போன்ற மாமேதைகள் தோன்றக் காரணமாகும்.

**எண்ணியத்தின் சில சிறப்புக் கருத்தியல்கள்:**

(1). இல்லாத ஒன்றிலிருந்து எதுவுமே உருவாகாது என்பதே எண்ணியத்தின் ஆதாரக்கொள்கை. இல்லாததை உள்ளதாக்க முடியாது, உள்ளதை முற்றிலும் இல்லாததாக்க முடியாது. ஊழி ஊழிக்காலமாய் இருந்துவரும் உலகத்தை உருவாக்குவதற்கு ஒருவரும் தேவைப்பட்டிருக்கவில்லை. அதற்கு முதலும் இல்லை முடிவும் இல்லை என்பதனால் இல்லாததிலிருந்து ஒன்று உருவாகும் சாத்தியமில்லை என்பது மெய்யாகிறது" என எண்ணியம் கூறுகிறது.

(2). இன்றைய உலகம் பொருளால் ஆனது என்பதால் இந்த உலகத்திற்கு காரணமான ஆதிமூலப்பொருளும் பொருளால்தான் ஆகியிருக்கவேண்டும். ஆகவே உலகத்திற்கான முதற்காரணம் என்பது பொருள்தான் என்பதே காரணகாரியக் கொள்கை மூலம் எண்ணியம் வந்தடைந்த முடிவு.

(3). ஆதிமூலமாகிய முதல்நிலைப்பொருளில் இருந்து தான் நாம்

காணும் அண்டமும் அதில் உள்ள பொருட்களும் தோன்றின எனவும் இறுதியில் இந்த ஆதிமூலமாகிய முதல்நிலைப்பொருளுக்குள் இந்த எல்லாப் பொருட்களும் கலந்து ஒன்றிணைந்து விடும் எனவும் இந்த ஆதிமூலப்பொருள் என்றென்றும் இருந்து கொண்டிருக்கும் எனவும் அதற்கு தொடக்கமோ முடிவோ இல்லை எனவும் எண்ணியம் கூறுகிறது.

(4). எண்ணியத்தத்துவத்தின் பெரும்பலமே பொருள் நிரந்தரமானது. அது இயக்கமற்ற நிலையை எப்போதும் அடைவதில்லை. ஒரு குறிப்பிட்ட வடிவத்திலிருந்து இன்னொன்றாக பரிணாமம் பெற்று வருகிறது என்பதுதான். பரிணாமக்கோட்பாடு (THEORY OF EVOLUTION) என்ற அடிப்படையிலேயே உலகத்தோற்றம் பற்றிய கபிலரின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

(5). வெளி, காலம், இயக்கம் ஆகியன பருப்பொருளின் கூறுகள், அவை பருப்பொருளிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை என்கிறது எண்ணியம்.

(6). ஒன்றிலிருந்து ஒன்று உருவாகும் திரிவாக்கத்திற்குக் காரணமாய் இருப்பது எதுவோ அதுவே இன்மையாகும். இதனை இயங்கியல் கோட்பாட்டின் உருவமும் உள்ளடக்கமாகவும் (FORM AND CONTENT) கொள்ளலாம்.

(7). ‘அறிவுக்குட்பட்ட காரண காரியத்துடனான விதிகளுக்குக் கட்டுப்பட்டு இயங்கும் காட்சியுலகு பற்றியே எண்ணியம் பேசுகிறது. காரண காரியத்தோடும் மேன்மையானதோர் அறிவுவளர்ச்சியோடும் கூடியதே உலக அமைப்பு என எண்ணியம் போதிக்கிறது. தனக்கென ஒதுக்கப்பட்ட வினைகளை ஆற்றுவது, தனக்கென ஒரு தகவு, தனக்கென ஒரு செயல்நோக்கம் என்றில்லாத உலகின் உறுப்புகளே இல்லை. இவ்வுறுப்புகள் தங்களுக்கென வரையறை செய்யப்பட்டவற்றை உருவாக்கம் செய்வதற்கான வழிமுறைகளைத் துல்லியமாகத் தேர்ந்துகொள்வது சாதாரண நடைமுறையாக இருக்கிறது. காலந்தவறிய ஒழுங்கற்ற செயல்பாடுகள் என்பதே இல்லை. அங்கு ஒழுங்கமைதி உள்ளது. வரையறை உள்ளது. என்ன வினையாற்றவேண்டும் என்ற குறிப்பு உள்ளது. தேர்ந்த அமைப்பாகச் செயல்படுகிறது. தானே உருவாகி பரிணாம முறையில் தானே வளர்ச்சியடைந்தது என்றுதான் உலகத்தைப் பார்க்கவேண்டும். உலகத் தோற்றத்திற்கும், அதன்வளர்ச்சிக்கும் எந்தவிதமான மேலுலக ஆற்றலும் காரணமல்ல. அது தொடர்ந்து இயங்கும் அமைப்பு. அது முதலும் முடிவுமற்ற, விரிந்து பரந்த நடைமுறை. நீடித்த தன்மையுள்ளதாகவும், அறிவிற்குகந்ததாகவும், என்றென்றைக்கும் பின்னோக்கிச் செல்லாதவாறும், பரிணாம முறையில் முன்னோக்கிச் செல்லும் வகையிலும், படைக்கப்படாத

ஒரு படைப்பினால் அனைத்தும் படைக்கப்பட்டிருக்கிறது' என்பதே உலகம் பற்றிய எண்ணியப்பார்வை (16).

கருத்துமுதல்வாத வேதியக் கருத்தியலையும், வேதச் சடங்குகளையும் கொண்டிருந்த வடஇந்திய சமூகத்தில் இவைபோன்ற பொருள்முதல்வாத மெய்யியலையும், காரணகாரியக் கொள்கையையும், தர்க்கவியலையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு தத்துவார்த்த அறிவியல் கோட்பாடான சாங்கியம் எனப்படும் எண்ணியம் உருவாகியிருக்க முடியாது என உறுதிபடக் கூறலாம். ஆதலால் வளர்ச்சி பெற்ற வணிக நகர அரசுகளையும், பொருள் உற்பத்தி, வேளாண்மை, தொழில், வணிகம், மெய்யியல், அறிவியல், தொழிநுட்பம், இயல், இசை, நாட்டியம், இலக்கியம் போன்றவற்றில் ஒரு உயர்வளர்ச்சி பெற்ற, உலகின் ஒரு முன்னணிச் சமூகமாக இருந்த பழந்தமிழ்நாட்டில்தான் எண்ணியம் தோன்றி யிருக்க முடியும் என்பதால் தொல்கபிலர் ஓர் தமிழர் ஆகிறார்.

**வடமரபும் தமிழ்மரபும்:**

(1). தமிழ் மரபுப்படி நீர், நிலம், தீ, காற்று, வெளி ஆகிய ஐம்பூதங்கள் உண்டு. ஆனால் வட இந்திய மரபில் வெளி போக நான்கு பூதங்கள் மட்டுமே உண்டு.

இப்பேரண்டத்தின் அடிப்படையாக இருக்கும் முதற்பொருள் என்பது வெளி, காலம் (Time & Space) ஆகியவற்றின் சேர்க்கை எனத் தமிழ் மரபு கூறியது. ஆனால் வெளி பற்றிய அடிப்படை அறிவோ, புரிதலோ வட இந்தியாவில் இருக்கவில்லை என்பதால் அங்கு வெளி இல்லாதுபோனது.

(2). தமிழ் மரபுப்படி ஏழு பொருள்கள் உண்டு. வடமரபுப்படி இன்மை போக ஆறு பொருள்கள் மட்டுமே உண்டு.

ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளாக மாறும் திரிவாக்கத்தையும் (பரிணாமம்), இயங்கியலையும் வெளிப்படுத்தும் ஒரு கோட்பாடாக 'இன்மை' என்பது தமிழ் மரபில் இருந்தது. ஆனால் இன்மை என்பது குறித்த அடிப்படை அறிவோ, புரிதலோ வடமரபில் இருக்கவில்லை. ஆகவே இன்மை என்பது வட மரபில் நீக்கப்பட்டது.

(3). தமிழ் மரபுப்படி எண்ணியம் 24 கூறுகளைக் கொண்டது. வட மரபுப்படி புருடனையும் சேர்த்து 25 கூறுகள் உண்டு.

அறிவியல் அடிப்படையற்ற புருடன் தமிழ் மரபில் இருக்கவில்லை. ஆனால் சாங்கியத் தத்துவத்தை வேதச்சார்பானதாக மாற்ற வடமரபில் 25ஆவது கூறாக புருடன் செயற்கையாகச் சேர்க்கப்பட்டது.

(4). தமிழ் மரபுப்படி மனித வாழ்வின் அடிப்படைகள் என்பன அறம், பொருள், இன்பம் ஆகியன. வடமரபுப்படி இந்த மூன்றுடன்

வீடு சேர்க்கப்பட்டது.

தமிழ் மரபில் மனிதவாழ்வின் அடிப்படை என்பது அறிவியல் அடிப்படையைக் கொண்டது. ஆனால் வடமரபு வேதச்சார்பான ஆன்மீகக் கண்ணோட்டத்தைக் கொண்டது என்பதால் அதில் வீடு சேர்க்கப்பட்டது.

(5). தமிழ் மரபுப்படி நூலுக்கான தந்திர உத்திகள் 32. வடமரபுப்படி பேச்சுக் கலைக்கான தந்திர உத்திகள் 36.

தமிழ் மரபின் நூலுக்கான உத்திகளை நகலெடுத்த வடமரபு அதனைப் பேச்சுக் கலைக்கானதாக மாற்றியமைத்துக்கொண்டது. புதிதாகச் சேர்க்கப்பட்ட 4 உத்திகளும் தமிழ் மரபின் 32 உத்திகளுக்குள் அடங்கியவைதான்.

தமிழ்ச்சிந்தனை மரபு என்பது அறிவியலை அடிப்படையாகக் கொண்ட பொருள்முதல்வாதச் சிந்தனையின் விளைவு. ஆனால் தமிழ்ச் சிந்தனை மரபின் அறிவியல் அடிப்படையை வடமரபு புரிந்து கொள்ளாமல், அவற்றை தன்வயப்படுத்த முயன்றதால் வெளி, இன்மை முதலியன நீக்கப்பட்டன. புருடன், வீடு முதலியன சேர்க்கப்பட்டன. தமிழின் பொருள்முதல்வாதச் சிந்தனை மரபிலிருந்துதான் வட மரபுகள் பல உருவாகின என்பதை இவ்விளக்கங்கள் உறுதி செய்கின்றன. ஆகவே மூல மரபான தமிழ்ச் சிந்தனை மரபின் அடிப்படையாக இருந்த எண்ணியத்தைத் தோற்றுவித்த தொல்கபிலர் ஒரு தமிழர்தான் என்பது உறுதியாகிறது.

**தொல்கபிலர் தமிழ் அறிவு மரபின் தந்தை:**

பழந்தமிழ் நாட்டில் தொல்கபிலரின் எண்ணிய மெய் யியல் உருவான பின் தான் பழந்தமிழ்நாடு தத்துவார்த்த அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் மிக வேகமாக வளர்ச்சி பெறத்தொடங்கியது. அதன்பின் தத்துவார்த்த அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் பல புதிய சிந்தனைகளும், பல புதிய நூல்களும் உருவாகின. இவற்றின் காரணமாகப் பல்வேறு துறைகளிலும் பேரளவான வளர்ச்சி ஏற்பட்டு, பழந்தமிழ்நாடு பொருள் உற்பத்தியிலும், தொழில் வளர்ச்சியிலும், உலகளாவிய கடல் வணிகத்திலும் புதிய உச்சத்தை அடைந்து, உலகின் ஒரு முன்னணிச் சமூகமாக ஆகியது. தமிழ்நாட்டு நகர அரசுகள் உலகளவில் பேரளவு வளர்ச்சிபெற்ற வணிக நகர அரசுகளாகப் பரிணமித்தன. பழந்தமிழ்நாட்டு நகர அரசுகளின் இவைபோன்ற பேரளவான வளர்ச்சிக்கு வித்திட்டது தொல்கபிலரின் எண்ணிய மெய்யியலே என்பதால், தொல்கபிலர் தமிழ் அறிவுமரபின் தந்தை ஆகிறார்.

**பார்வை:**


(1). தொல்கபிலர் தமிழ் அறிவு மரபின் தந்தை, கணியன் பாலன், தொல்கபிலர் பதிப்பகம், 2023, பக்: 17.

(2). மூலச் சிறப்புள்ள தமிழ்ச் சிந்தனை மரபு, கணியன்பாலன், தமிழினி, 2018. பக்: 115.

(3). " " " பக்: 88.

(4). தொல்கபிலர் தமிழ் அறிவு மரபின் தந்தை, கணியன் பாலன், தொல்கபிலர் பதிப்பகம், 2023, பக்: 18.

(5). " " " பக்: 17

(6). " " " பக்: 77, 84.

(7). " " " பக்: 88.

(8). " " " பக்: 90, 91.

(9). எண்ணியம், அறிஞர் குணா, தமிழ்நாட்டு ஆய்வரண், மீனம் தி.பி. 2044, மார்ச்ஏப்ரல் 2013. பக்: 1348..

(10). மூலச்சிறப்புள்ள தமிழ்ச் சிந்தனை மரபு, கணியன்பாலன், தமிழினி, 2018. பக்: 65.

(11). பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும், கணியன் பாலன், NCBH, சனவரி2023, புத்தகம் 1, பக்: 64.

(12). தொல்கபிலர் தமிழ் அறிவு மரபின் தந்தை, கணியன் பாலன், தொல்கபிலர் பதிப்பகம், 2023, பக்: 88.

(13). முனைவர் க. நெடுஞ்செழியன், தமிழர் இயங்கியல் தொல்காப்பியமும், சரக சம்கிதையும். பக்: 2022.

(14). பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும், கணியன் பாலன், NCBH, சனவரி-2023, புத்தகம் 2, பக்: 539-543.

(15). தொல்கபிலர் தமிழ் அறிவு மரபின் தந்தை, கணியன் பாலன், தொல்கபிலர் பதிப்பகம், 2023, பக்: 1820.

(16). பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும், கணியன் பாலன், NCBH, சனவரி-2023, புத்தகம் 1, பக்: 116-160, 427-456, 512-518.

(17). தொல்கபிலர் தமிழ் அறிவு மரபின் தந்தை, கணியன் பாலன், தொல்கபிலர் பதிப்பகம், சனவரி2023, பக்: 259-274.


❖❖❖

# குடி குடியைக் கெடுக்கும்

**கதிர் நம்பி**

குடி குடியைக் கெடுக்கும் என்பது போத்தல் மொழி. இந்த போத்தல் மொழி தெரியாத தமிழ்க்குடிமகன் தமிழ்நாட்டில் இருக்க முடியாது என்றே சொல்லலாம். இந்தக் குடி எந்தக் குடியை எப்படிக் கெடுக்கும் என இதுவரைக்கும் யாருக்கும் கேள்வி இல்லை. கேள்வி இருந்திருந்தால் இக்கட்டுரைக்கு அவசியம் இருந்திருக்காது. மது நாட்டுக்கு வீட்டுக்கு உயிருக்கு கேடு என்பதும் இன்னொரு போத்தல் மொழி. மதுவால் நாட்டுக்கு உயர்வு எனப் பொது உரையாடல் ஆங்காங்கே நடக்கிறது. உயிருக்குக் கேடு என்பது குறித்துப் பெரிதாக உரையாடல் நடப்பதில்லை. ஆகையால் இந்த போத்தல் மொழியிலும் சீர் திருத்தம்(!) தேவைப்படுகிறது. சரி, நீங்கள் கேட்கலாம். அதெப்படி ஒரு குமுகத்தில் குடிக்காமலேயே அத்தனை பேரும் இருந்திட முடியுமா? நூறு வீதம் குடியில்லாத குடிகளை கொண்ட குமுகம் ஒன்றை கண்டிட முடியுமா? இல்லாத ஊருக்கு வழி சொல்வது போலல்லவா இருக்கிறது.

உலகில் வாழும் எந்த ஒரு மக்கள் கூட்டமும் மதுவின்றி இயங்குவதில்லை. இயங்கியதுமில்லை. மது மக்கள் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று. குளிர் சூழலில் (வட துருவத்திற்கு அருகில்) வாழும் மக்களின் உடல் சூட்டிற்காக,க ளிப்பிற்காக,போரில் ஈடுபடுவதற்காக,சில வேளைகளில் மருந்தாகக் கூட மது எடுத்துக் கொள்வர். தமிழ்ச் சூழலில் களிப்பிற்காக, உடல் அலுப்பிற்காக, போர் புரிவதற்காக மது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மது என்ற சொல்லுக்கு இன்றைய பொருள் வேறாகத் திரிந்து விட்டது. சீமைச் சாராயத்தை மது என்று நாம் இன்றைக்கு புரிந்து வைத்திருக்கிறோம்.

“இக்கு,நனை,தேன்,முருகு,தோப்பி,நறவு,பிரசம்,தணியல்,சுரை ர,படு,வேரி,மட்டு,தேறல்,சாறு,பானம்,வடி,பிழி,மது,வழி,தொண்டி ,யானம்,அரிட்டமும்,சாதியும், கள் ஆகுமே அருகிக் கல்வையும், விளம்பியும், ஆகும்” என்று திவாகர நிகண்டு கள்ளின் பெயராக இத்தனை பெயர்களை அடுக்குகிறது. இப்பெயர்கள் அனைத்தும் பனை மரத்திலிருந்து இறக்கப்படும் கள்ளைக் குறிக்கவில்லை. அரிசியிலிருந்து, பழங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும்

ஊறல்களையும் தேறல்களையும் மேற்கண்ட பெயர்களில் அழைக்கலாம்.

சங்க இலக்கியம் ஏராளமான இடங்களில் கள் பற்றிய குறிப்புகளைப் பதிவு செய்திருக்கிறது. உழைக்கும் மக்களின் உடல் அலுப்பிற்குப் பனங்கள், தென்னங்கள் ஆகிய பானங்கள் சரியான தீர்வாக இருக்கும். வயலில் உழைப்புச் செலுத்திய உழவர்கள் கள்ளை அருந்திய செய்தியை சங்க இலக்கியம் பதிவு செய்திருக்கிறது.

கள்ளை உண்ட உழவர்கள் மகிழ்ந்திருந்த காட்சியை அகநானூற்றில் நக்கீரர் இவ்வாறு பதிவு செய்கிறார்.

**"கள் ஆர் உவகைக் கலி மகிழ் உழவர்"**

அதியமான் நெடுமானஞ்சியிடம் சிறிய அளவே கள் இருந்தாலும் அதை எமக்கு கொடுத்துச் சிறப்பிப்பார். நிறைய கள் இருந்தால் எமக்கு கொடுத்து மீதியை அவர் அருந்துவார் என்று ஔவையார் கள்ளினைத் தானும் மன்னன் அதியமானும் பகிர்ந்துண்டதை புறநானூற்றில் பாடுகிறார்.

**சிறிய கள் பெறினே எமக்கு ஈயும் மன்னே**
**பெரிய கள் பெறினே**
**யாம் பாட, தான் மகிழ்ந்து உண்ணும்; மன்னே"**

வள்ளுவரின் கள் உண்ணாமை அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள குறள்கள் அறிவோடு,மானத்தோடு தொடர்பு படுத்தி எழுதப்பட்டவை. சான்றோன், அரசன் ஆகிய மேல் தட்டு வர்க்கத்தினரை மையப்படுத்திச் சொல்லப்பட்டவை. உழைக்கும் வர்க்கத்தின் பார்வையில் இருந்து மதுவை வள்ளுவர் அணுகவில்லை என்பது வருத்தமே.

கள்வெறி (வெறி என்றால் போதை) கொண்டு ஆநிரை கவர்வதும் போருக்குச் செல்வதும் சங்க இலக்கியங்களில் மிகையாக காண முடிகிறது. அதியமானும் அவ்வையும் அமர்ந்து கள் அருந்திய செய்தியும் மேற்சொன்ன பாடலில் பதிவாகி உள்ளது. மதுவோ கள்ளோ அது ஓர் குமுகத்தின் உறுப்பாகும். வரலாறு நெடுக ஒவ்வொரு குமுகமும் தனக்குத் தேவையான மதுவை அரிசியில் பழங்களில், பனையின்/தென்னையின் சாறிலிருந்து இப்படி உற்பத்தி செய்து நுகர்ந்து வந்திருக்கிறது. இதில் எந்தப் பிழையும் இல்லை. திருநெல்வேலி,தூத்துக்குடி பகுதிகளில் கொடைத் திருவிழாவில் மதுவைக் கொடையாகத் தெய்வத்திற்கு படைத்துப் பின்னர் ஊரார் பகிர்ந்து கொள்வது 90கள் வரைக்கும் பரவலாக இருந்து வந்திருக்கிறது. குறுவைக் களஞ்சியம் எனும் ''மரபு நெல்'' அரிசியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் இம்மதுவானது அந்த வட்டார மக்களின் பண்பாட்டு அறிவாகும். இந்நெல்லில் மாவுச்

சத்து அதிகமாக இருப்பதால் மது உற்பத்திற்கென்றே இது பெயர் பெற்றது. ஒட்டு நெல் வகைகள் அறிமுகமான பின்னர் குறுவைக் களஞ்சியம் சாகுபடியில் காணாமல் போய் விட்டது. அதனால் மது உற்பத்தியையும் மக்கள் மறந்து தொலைத்து விட்டனர். பொருள் அழிகிறது. அதனோடு சேர்ந்து அறிவும் அழிகிறது. அதனோடு சேர்ந்து பண்பாடும் அழிகிறது. மதுக் கொடை குறித்து ஆ. சிவசுப்பிரமணியன் “மந்திரங்களும் சடங்குகளும்” நூலில் எழுதி இருக்கிறார்.

உழைப்புச் செலுத்தும் உழைக்கும் மக்களின் கிரியா ஊக்கியாக மது இருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அவர்கள் தொடர்ந்து உழைக்க, தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபட, அவர்களை நகர்த்துவதில் மதுவின் பங்கு கணிசமானது. எனினும் எந்த மாதிரியான மது வகை என்கின்ற கேள்வியே இங்கு முன் வைக்கப்படுகிறது. எந்த மதுவை நிராகரிக்க வேண்டும் என்பதில் தெளிவு வேண்டி இருக்கிறது. தற்சார்பாய்ப் பண்டைய அறிவுத் தொடர்ச்சியின் விளைவால் உற்பத்தி செய்து கொண்ட மது மக்களுக்குத் தீங்கு இல்லாததாக இருந்தது. சீமைச் சாராயத்தின் வரவு கள்ளச் சாராயத்திற்கு வழி வகுத்தது. பனை மரத்தில் இருந்து இறக்கப்படும் கள்ளினில் போதைத் தன்மை குறைவான வீதமே இருக்கிறது. அதே வேளையில் உடலுக்குத் தேவையான ஆற்றலையும் வலுவையும் வழங்குகிறது. மக்களின் உற்பத்திசார் அறிவில் இருந்து மது அகற்றப்பட்டது. மது நுகரும் பண்டமாக மக்களுக்கு அறிமுகமாகத் தொடங்கிய நாளிலிருந்து குமுக நோய் வீரியமாக பரவத் தொடங்கியது. கள்ளச் சாராயமும் கள்ளில் வேதிப் பொருட்களைக் கலந்து உற்பத்தி செய்யப்படும் முறையற்ற மதுவும் உடலுக்குத் தீங்கானவை. இவற்றை எதிர்ப்பதோடு மட்டுமின்றி இவ்வகை உற்பத்தியைத் தடை செய்ய வேண்டும். கள்ளச் சாராயத்தைத் கட்டுப்படுத்தும் நோக்கில் பனைபடு பொருளான “கள்” எனும் உணவு பொருளுக்கு தடை விதித்து நிறுவனமயப்பட்ட மதுக் கொள்கையினை கொண்டு வந்தனர். மேற்சொன்ன கள்ள சாராயத்தின் பொருட்டு ஏற்படும் குமுகத் தீமைகளை விட ஆலை உற்பத்தியான சீமைச் சாராயத்தால் அதிகத் தீமைகள் ஏற்படுகின்றன என்பது கசப்பான உண்மை. இந்தத் தீமைகளைக் கவனிக்கத் தவறி விட்டோம். அல்லது கட்டுப்படுத்தத் தவறுகிறோம்.

சீமைச் சாராயத்தை அரசே நேரடியாக விற்பனை செய்யத் தொடங்கிய பின் தமிழ்க் குமுகம் பாரிய சீரழிவுகளைச் சந்தித்து வருகிறது. அரசு ஒருபுறம் இலக்கு வைத்து மது விற்கிறது. மறுபுறம் திரைப்படம் போன்ற வெகு மக்கள் ஊடகங்களில் மது குடிப்பது, மதுவைக் கொண்டாடும் வகையில் உரையாடல்/

பாடல் காட்சிகள் அமைப்பது போன்ற போக்குகள் இளைஞர்கள்/பெண்கள்/மாணாக்கர்கள் ஆகியோரை மது நுகர்வை நோக்கித் தள்ளுகின்றன. “Weekend Drinker, Occasional Drinker, Social Drinker, Party Drinker” போன்ற குமுக ஊடகச் சொல்லாடல்கள் மது குடிப்பதை ஞாயப் படுத்துகின்றன. புனிதப் படுத்துகின்றன. செய்தி ஊடகங்கள் ‘‘மதுப் பிரியர்’’ என்று பெயரிட்டு பொறுப்பற்று செய்தி சொல்கின்றன. மது விடயத்தில் ஊடகங்கள் குமுக அறம் என்பதை எப்போதோ மறந்து விட்டன. தெருவிற்கு ஒரு குடிகாரன் என்ற காலம் போய் தெருவெங்கும் குடிகாரன் என்கிற நிலைக்குத் தமிழகத் தெருக்கள் மாறி விட்டன என்பது மிகை அல்ல.

உழைக்கும் மக்களின் பொருளியல்/குமுக வாழ்வியலில் மது பெரும் சீரழிவை ஏற்படுத்தி வருகிறது. பணம் படைத்தவரும் குடிக்கிறார். பணம் அற்றவரும் குடிக்கிறார். குடிப்பதால் இவ்விருவரும் ஒரே அளவுகோளில் அளக்கப்படுவதில்லை. இருவரையும் குமுகம் ஒரே மாதிரி அணுகுவதுமில்லை. அன்றாடம் உழைக்கும் மக்களின் பொருளியல் நிலை இறங்கு நிலையில் போய்க் கொண்டிருப்பதை எந்த ஒரு பொருளாதாரக் குறியீடு அலகுகளும் குறியிட்டுக் காண்பிக்கவுமில்லை. மாறாக மது விற்பனையில் ஆண்டாண்டு வருமானம் கூடுவதை துறை அமைத்துக் கண்காணித்து வருகிற சூழல் நிலவுகிறது. குடும்பங்களின் மகிழ்ச்சி அளவீடு(Happiness Index) எடுத்துப் பார்த்தால் குடும்பங்களில் சாராயம் ஏற்படுத்தி இருக்கும் விளைவுகள் புரிய வரும்.

2003-இல் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு மது விற்பனையின் வணிகத்தை அரசுடைமையாக்கியது. அன்று தொடக்கம் இன்று வரைக்கும் மது விற்பனை ஏறுமுகம்தான். ஒழுங்கமைக்கப்பட்ட, நிறுவனமயமாக்கப்பட்ட அரசுடைமையாக்கப்பட்ட ‘‘மது விற்பனை’’ மக்களின் நுகர்வை குறைக்கவில்லை மாறாகக் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு அதிகரிக்க வைத்திருக்கிறது.

நிறுவனமயமாக்கப்பட்ட மது வகைதொகையின்றி பாலின/வயது வேறுபாடின்றி அனைவரையும் உள்ளிழுத்திருக்கிறது. திராவிட கட்சிகளின் அரசு நிர்வாக முறையில் வேறுபாடுகள் இருந்தாலும் மதுக் கொள்கை என்று வருகின்ற பொழுது இரண்டு தரப்பிற்கும் வேறுபாடில்லை.

| பெறுமதி ஆண்டு (Financial year) | வருவாய்(கோடி) |
|---|---|
| 2022-2023 | 44,098.56*** |
| 2021-2022 | 36,050.65*** |
| 2018-2019 | 37,026.48** |
| 2017-2018 | 31,978.00** |
| 2016-2017 | 31,483.53** |
| 2003 | 3,639* |

***source - Indian Express

**விகடன் குழுமம் கோரிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் தகவல்

*Frontline Hindu

மதுவின் வருவாய் அதிகரிப்பது போலத் தோன்றினாலும் அரசிற்கு நிகர லாபம் என்பது ஏமாற்றம் தருவதாக இருக்கிறது. தனியார் மது ஆலைகளிடமிருந்துதான் அரசு மதுவைக் கொள்முதல் செய்கிறது. வருவாயில் இருந்து கொள்முதல்,விற்பனை வரி,பணியாளர்கள் ஊதியம், இதர செலவுகள் போக இரண்டு வீதமே லாபம் வருவதாகக் கூறப்படுகிறது. விகடன் குழுமம் தகவல் உரிமைச் சட்டத்தின் படி 2009-2019 ஆண்டுகளுக்கான மது வருவாய்க் கணக்கினை அரசிடம் கேட்டறிந்தது. அதன்படி தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்(Tas-mac) நட்டத்தில் இயங்குவதாக அறிக்கை தெரிவிக்கிறது. மதுவை உற்பத்தி செய்யும் தனியார் ஆலைகளுக்கு எந்தச் சரிவுமில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. பல இலட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கெடுக்கும் மதுவிற்குப் பூரண மது விலக்கு கேட்டுப் போராட்டங்கள் நடந்து வருகின்றன. மறுதலையில் மது விற்பனை பணியாளர்கள் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, பணிப் பாதுகாப்புக் கேட்டு அவரவர் குடும்பத்துடன் அவர்கள் சங்கத்தினூடாகப் போராட்டம் செய்திருக்கின்றனர். இப்படியான முரண் நகையுடன் தான் மது விலக்கும் மது வளர்ப்பும் தமிழகத்தில் நிலை பெற்றிருக்கிறது.

புத்தம் புதிய இளைஞர்கள், பதின்ம வயதுச் சிறுவர்கள், பெண்கள், சிறுமியர்கள் மதுப் பழக்கத்திற்கு ஆளாவது அதிகரித்து வருகிறது. ஒரு புறம் புதிய இளைஞர்கள் மதுப் பழக்கத்திற்கு ஆளாவதைக் கண்காணித்துக் கட்டுப் படுத்துவோம் என்கிறார் மது விலக்கு அமைச்சர். மறுபுறம் அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்து அவற்றிற்கெனத் தனியாகக் கடைகள்

திறக்கப்படுகிறது. இதற்கு முந்தைய ஆட்சியின் அமைச்சர் (2016 -2021) மதுக்கடைகளை படிப்படியாக குறைப்போம் என்றார். ஆனால் முதன்மைச் சாலையின் முகப்பில் இருக்கும் கடைகளை மூட வேண்டும் என்று நீதிமன்ற தீர்ப்பைச் சமாளிக்கும் விதமாகக் கடைகளின் முகப்பை மூடிவிட்டு கொல்லைப் புறத்தை முகப்பாக்கி வெற்றி கண்டனர். எதிர்காலத் தமிழகத்தின் இயங்கு ஆற்றல் வீதிகளில் மனம் பிறழ்ந்து கிடப்பதைக் காணச் சகிக்க முடியவில்லை. நினைத்துப் பார்க்க முடியாத வன்முறைகள் நாளும் அரங்கேறுகின்றன. குறிப்பாக ஊரகங்களில் சாராய போதையும் சாதி வெறியும் இன்றைய இளைஞர் குழாமைச் சீரழித்து வருகின்றன. நகரங்களில் வழிப்பறி,கொள்ளை,கொலை போன்ற குற்றச் செயல்களின் அதிகரிப்பில் மதுவின் பங்கு முதன்மையானது. பள்ளிக் கூடங்களில், கல்லூரிகளில் மக்களிய ஆற்றல்கள் ஊடுருவ வேண்டும். கல்வி என்பதை இயந்திர கதியாக அணுகாமல் குமுகத்தைப் பற்றிய புரிதலை ஏற்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். பாடத் திட்டங்களில் சீர்திருத்தம் கொண்டு வருவதைப் போல கல்வி அமைப்பில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். பொருள்சார் கல்வி முறையைக் காட்டிலும் குமுகத்திற்கு அறம்சார் கல்வி அவசியமாகிறது.

தந்தை குடிகாரராக இருப்பதால் குடும்பப் பிரச்சனைகள் காரணமாக வளர்ந்து வரும் பிள்ளைகள் குமுகத்தில் தங்களை நிலை நிறுத்திக் கொள்வதில் தடைகள் ஏற்படுகின்றன. ‘‘குடிகாரன் மகன்’’, ‘‘குடிகாரன் பொண்ணு’’, ‘‘குடிகாரன் பொண்டாட்டி’’ போன்ற சொல்லாடல்களை எதிர்கொள்ள முடியாமல் கூனிக் கூறுகிப் போகிறார்கள். இவர்கள் வெளிப்படையாக இந்தச் சொற்களை சந்திக்காவிடினும் குடும்பத்தின் பொருளியல் நிலை இவர்களை இந்தச் சொற்களின் சொந்தக்காரர்களாக மாற்றுகிறது. குமுகத்தின் ஏளனப் பார்வை இவர்களைத் தாழ்வு மானப்பான்மைக்குள் விழச் செய்கிறது. இதனையொட்டி தற்கொலைகள் நடக்கின்றன. குடி கூடவே இருப்பவரையும் கொல்கிறது. குடி எனும் ‘‘சேர்ந்தாரைக் கொல்லி’’ ஒரு குற்றமும் அறியாத இளம் பருவத்தினரையும் தன்னோடு சேர்த்து அழித்து வருகிறது.

ஆண்டிற்கு 30 இலட்சம் பேர் மதுவினால் இறந்து போகிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம்(உ.சு.நி) சொல்கிறது. மேலும் மதுவிற்கு எதிராக ஓர் அரசு 10 வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என வழிகாட்டுகிறது. மது விற்பனை வணிக விளம்பரங்கள் மற்றும் விளையாட்டுகளில் மதுபான நிறுவனங்களின் பங்கேற்பு ஆகியவை கவலை அளிக்கும் செயல்பாடுகள் என உ.சு.நி தெரிவிக்கிறது. இந்திய ஒன்றியத்தில் துடுப்பாட்டப் போட்டிகளில்

பெரும்பாலும் மது விற்பனை நிறுவனங்களின் ஆதிக்கம் இருப்பதை மறுக்க முடியாது. Sponsor என்று சொல்லப்படும் நிதி வழங்குபவர்களாக இந்த மதுபான நிறுவனங்கள் இருக்கின்றன. இளைஞர்கள் இந்த போட்டிகளின் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் மதுவிற்கு ஆட்படுகிறார்கள். போலவே கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்த் திரைப்படங்களில் பெருவாரியான காட்சிகள் மதுவின்றிக் காண்பிக்கப்படவில்லை என்பதும் கருதத்தக்கது.

வீட்டில் வளரும் குழந்தைகள், வீதியில் விளையாடும் பிள்ளைகள், குமுக இடங்களில் கூடும் இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரும் மதுவை தத்தம் புத்தியில் மிக இயல்பாக ஏற்றுக் கொள்ளும் (Social Acceptance) அளவிற்குத் தமிழ்ச் சூழல் மாறி வருகிறது. மதுப் பழக்கத்தால் கிட்டதட்ட 60 நோய்கள் வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று லான்செட் கூறுகிறது. இந்திய ஒன்றியம் உலகின் மூன்றாவது பெரிய சாராயச் சந்தை என்றறியப்படுகிறது.

தாய் வழிக் குமுகமான தமிழர்களின் குடும்பங்களைப் பெண்கள் தான் இயக்கி வருகின்றனர். பெண்கள்தான் வழி நடத்தி வருகின்றனர். மதுவிற்கு அடிமையாகி வாழ்விழந்து வருவாய் இழந்து வீதிகளில் உயிரை/உடைமையை விடும் கணவன்/மகன்/உடன்பிறந்தான் ஆகியோருக்காக வீதிகளில் மதுக்கடைகளை மூடச் சொல்லிப் போராடிய பெண்கள் மீது அரசுகள் கடுமையாக நடந்து கொண்டன. மது ஒழிப்பு என்பது தேர்தல் அறிக்கைகளை அலங்கரிக்கும் வெற்றுச் சொல்லாடலாகிப் போனதைத் தமிழர் கூட்டம் இன்னமும் உணரவில்லை.

**தீர்வு** :

தமிழகக் சூழலில் மது மற்றும் மதுவினால் ஏற்படும் குற்றங்களும் உழைக்கும் மக்களின் பொருளாதாரச் சரிவுகளும் அவர்களின் வாழ்நிலை அவலங்களும் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகிறது. நாம் கடந்த நாற்பது ஆண்டுகளாக மது விலக்கு எனும் சொல்லியத்திற்கு உரிய பொருளை அளிக்கத் தவறி விட்டோம். பூரண மது விலக்கு சாத்தியம் இல்லை என்று சொல்கிற அறிஞர்களும் இருக்கின்றனர். நாம் கேட்பது பூரண மது விலக்கு அல்ல. நாம் கேட்பது நிறுவனமயப்பட்ட மது விற்பனைத் தடை. குவிமையப்படுத்தப்பட்ட இந்த மது விற்பனையால் அரசும் மக்களும் நன்மையோ இலாபமோ அடையவில்லை. மாறாக தனியார் மது உற்பத்தி ஆலை முதலாளிகளே பெரும்பலன் அடைந்து வருகின்றனர். நடைமுறையில் இருக்கும் மதுபான விற்பனை மற்றும் உற்பத்தியை ஒரே இரவில் மாற்றிட முடியாது. கீழ்க்கண்ட வழிமுறைகளின் மூலம் புதிதாகக் குடிக்க வருவோரின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.

- விற்பனையைக் குறைப்பது
- கடைகளை எளிதில் அணுக முடியாதவண்ணம் அமைப்பது
- மதுவின் விலையை அதிகரிப்பது
- தனியார் ஆலைகளிடம் பெறப்படும் கொள்முதலைக் குறைப்பது
- வாரத்திற்கு இவ்வளவு என ஒருவருக்கு அளவை நிர்ணயிப்பது
- மருத்துவரிடம் அனுமதிச் சான்றிதழ் பெற்று நுகர்வது

மறுதலையில் மக்களின் நீண்ட நெடிய அனுபவ அறிவில் பிறந்த பானங்களை சில்லறை வணிகத்தில் விற்பனை செய்வதன் மூலம் மக்களும் நன்மை அடைவர். அரசும் அரசு நிறுவனங்களும் பயன் பெறும்.

பதநீர் மது விலக்கு பரப்புரைக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்றார் ஜே. சி குமாரப்பா. அவரைப் பொறுத்தவரை கள் ஒரு போதை தரும் பானம். ஒரு காந்தியவாதியாக கள் மீது அவருக்கு இருந்த அதே பார்வை பனைபடு பொருட்களின் மீது இல்லை. மாறாகப் பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு, பதநீர் ஆகியவை உள்ளூர் பொருளாதாரத்தில் மக்களுக்கு நல்ல பயனளிக்கும் என்றார். அவர் காலத்தில் கரும்புச் சாகுபடியை அவர் கடுமையாக எதிர்த்தார். நன்செய் நிலங்களை கரும்பிற்குப் பயன்படுத்தி அதிலிருந்து ஆலைச் சர்க்கரையை கொள்முதல் செய்வதை விட காடு கரைகளில் பராமரிப்பு அவசியமின்றி வளர்ந்து நிற்கும் பனை மரங்கள் தரும் கருப்பட்டி, பனங்கற்கண்டு மேலானது என்றார். இன்றைக்கு எரி சாராயம் உற்பத்தி செய்யக் கரும்பு ஆலைகளில் இருந்து பிழிந்து எடுக்கப்பட்ட மொலாஸஸ் தான் அதிகமாகப் பயன்படுகிறது. மேலை நாடுகளில் மது உற்பத்தி செய்யப்படும் முறைகளை விட நம் ஊரில் உற்பத்தி செய்யும் முறைகள் மிகவும் கீழானதாகத்தான் இருக்கிறது.

மது விலக்கிற்குப் பனங்கள் போலவே தென்னங்கள்ளும் நாம் முன்வைக்கிற ஒரு தீர்வாகும். ஆண்டு முழுவதும் சீமைச் சாராயம் போல இந்தக் கள் வகைகள் கிடைக்குமா என்ற கேள்விக்குக் கிடைக்கும் என்றே பதில் சொல்கிறார் பனைச் செயற்பாட்டாளரும் போராளியுமான பாண்டியன். கோடை காலத்தில் கிடைக்கும் பனங்கள் உடலிற்கு குளிர்ச்சி தரக்கூடியது. எல்லா காலத்திலும் கிடைக்கும் தென்னங்கள் குளிர்/மழை காலத்தில் உடலிற்கு சூட்டைத் தரக்கூடியது என்கிறார். அந்தந்த நிலத்து மக்கள் அந்தந்தச் சூழலுக்கு ஏற்பப் பானங்களை அருந்தி வந்திருக்கின்றனர். நெய்தல் நிலத்தில் சுண்ட கஞ்சி, குறிஞ்சி நிலத்தில் தினை மாவில் உற்பத்தி செய்த தோப்பி, தேறல் முல்லை/மருத நிலத்தில் அரிசி வகைகளில் உற்பத்தி செய்த மது (rice beer) எனப் பன்முகத்

தன்மையான பானங்களைத் தமிழர்கள் அருந்தி வந்திருக்கின்றனர். பன்முகத் தன்மையான பானங்களை அருந்தி வந்த தமிழர்கள் இன்று ஒற்றைத் தன்மையான நிறுவனமயப்பட்ட சாராயத்தை அருந்தி வருகின்றனர்.

கள் இறக்குவதற்கு தடையை நீக்க வேண்டும். அரசே கள்ளினை பனைத் தொழிலாளர்களிடம் இருந்து கூட்டுறவு முறையில் கொள்முதல் செய்து சில்லறை வணிகத்தின் மூலம் விற்பனை செய்ய வேண்டும். நம் மரபறிவில் இருந்த பல வகையான மது வகைகளை இனம் கண்டு முறையாக உற்பத்தி செய்து நெறிபடுத்தப்பட்ட முறையில் வணிகம் செய்திட வேண்டும். அரசுசார் நிறுவனங்களை ஏற்படுத்திக் கலப்படங்கள், முறையற்ற உற்பத்தி ஆகியவற்றைத் தடுத்திட அதிகாரம் அளிக்கலாம். இவ்வகையில் ஊரக மகளிருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி ஊரக பொருளாதாரத்தை வலுப்படுத்தலாம். குவிமையப்படுத்தப்பட்ட மது விற்பனையைப் பன்முகத் தன்மை கொண்ட மது உற்பத்தி மற்றும் விற்பனை மூலம் பரவலாக்கம் செய்கிற பொழுது ஜே. சி குமாரப்பாவின் கீழ்க்கண்ட சிந்தனை முழுமை பெறும்.

“நமக்கு பெரும் உற்பத்திகளை விட வெகு மக்களின் உற்பத்தி தான் சரியானது”

**பார்வை நூல்கள் :**


(1). பனை மரம், தமிழ்நாட்டு தாவரக் களஞ்சியம், இரா. பஞ் சவர்ணம்,

(2). குமரப்பாவிடம் கேட்போம், மொழியாக்கம் அமரந்த்தா, பரிசல் பதிப்பகம்

(3). பனை மரமே பனை மரமே, ஆ. சிவசுப்பிரமனியன், காலச் சுவடு


**பார்வை இணைய தளங்கள் :**


(1). <https://indianexpress.com/article/cities/chennai/tamil-nadu-sees-a-rise-in-liquor-sale-revenue-last-fiscal-8554082/>

(2). <https://frontline.thehindu.com/social-issues/booze-bumps-time-to-turn-around-tasmac-from-its-terrible-mess/article65662104.ece>

(3). <https://www.vikatan.com/government-and-politics/politics/tas-mac-liquor-sell-in-rs31243-crore-loss-what-is-the-reason>

(4). <https://www.hindutamil.in/news/supplements/ilamai-puthu-mai/54460-.html>

(5). <https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC5353818/>

(6).. <https://www.thelancet.com/article/S0140-6736(18)31310-2/fulltext>

7. <https://www.who.int/news-room/feature-stories/detail/10-ar-eas-for-national-action-on-alcohol>

# தென்னிந்தியாவில் இந்துத்துவ மீட்டுருவாக்கமும், நிலைப்படுத்துதலும்: கிருஷ்ணதேவராயர் ஆட்சியை முன்வைத்து

அழகிய பெரியவன்

அரசாட்சி என்பதே ஒருவரை ஒருவர் வீழ்த்திவிட்டு பதவிக்கு வருவது; படையெடுத்தும், ஆக்கிரமித்தும் பிறநாட்டு நிலப்பகுதிகளை பிடித்துக் கொள்வது என எளிமையாக வரையறுக்கலாம். தனி மனித விருப்பம் சார்ந்து காலந்தோறும் நடந்து வந்த இந்த நிகழ்வுகளுக்கும் மதத்துக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. அவ்வாறு இருந்தாலும், அது மிக மிக சொற்பமானதொன்றே. ஆனால் அதை அப்படியே இருக்கும்படிக்கு வரலாற்றாசிரியர்கள் விடுவதில்லை. அதிலும் இன்று பெருகியிருக்கும் இந்து நோக்கு வரலாற்றாசிரியர்கள் எல்லாவற்றையுமே அப்படிப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள் என்பது நாடறிந்த உண்மை.

தென்னிந்தியாவில் நிலவி வந்த முகமதிய ஆட்சியை வீழ்த்தி இந்து சமயத்தையும், அதைப் பின்பற்றுபவர்களின் ஆட்சியையும் நிலை நாட்டியது விசயநகரப் பேரரசின் ஆட்சி. அவர்களிடம் படைத்தலைவர்களாக இருந்து பின்னர் ஆட்சி நிர்வாகம் செய்த நாயக்கர்களின் ஆட்சியும் விஜயநகரப் பேரரசின் பிரதியே. இவர்களை இன்று இந்து மதவாதப் பார்வையில் வரலாற்று ஆசிரியர்கள் பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்கள். வரலாற்று ஆசிரியர்கள் வைத்திருக்கும் இந்தப் பார்வையை விஜயநகர மன்னர்களும் கொண்டிருந்தார்களா என்பது ஆய்வுக்குரியது.

விஜயநகர அரசாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே முதலாம் அரிஅரருக்கும், முதலாம் புக்கருக்கும் நோக்கமாக இருந்திருக்கிறது. ஆட்சியில் நிலை பெற்ற பின்னர் அவர்கள் தென்னிந்தியாவில் வலுவானதொரு இந்து அடித்தளத்தை மீட்டுருவாக்கம் செய்து நிலைபடுத்த முயன்றிருக்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். இந்தப் பின்னணியில், விசயநகரப் பேரரசு அரசாட்சி குறித்த செய்திகளை ஆய்வு நோக்கில் கவனமுடன் அணுக வேண்டிய தேவை இருக்கிறது.

**முகம்மதியர் வருகை**

முகம்மது பின் காசிம் (கி.பி.672), முகம்மது கஜினி (கி.பி.971 1030), ஆகியோரின் அவ்வப் போதைய படையெடுப்புகளுக்குப் பின்னர், முகம்மது கோரியின் ஆட்சி கி.பி.1206ல் வடஇந்தியப் பகுதிகளில் உருவானது. தொடர்ந்து அவர்கள் தென்னிந்தியாவை ஊடுருவி, இங்கிருக்கும் அரசுகளையும் வீழ்த்த முயன்றார்கள். கி.பி.1323ல் வாரங்கலும், 1327ல் காம்பிலியும் முகம்மதியர் ஆட்சியின் கீழ் வந்தன. 1329ல் முகமதுபின்துக்ளக் தக்காணத்தை வெற்றி கொண்டார்.

வாரங்கல் மற்றும் காம்பிலி வீழ்ச்சியின் போது, வாராங்கல் மன்னர் இரண்டாம் பிரதாப உருத்திரனின் கீழ் பணியாற்றியவர்களான முதலாம் அரிஅரன், முதலாம் புக்கன் இருவரும் அரசியல் கைதிகளாகத் தில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவி சுல்தானிடம் நெருக்கமாக இருந்து வந்தனர். முகம்மதிய ஆட்சியாளர்களிடம் ஆட்சியை இழந்தவர்கள் மாபார்க் (1335) போன்ற இரத்த ஆறு ஓடிய கலவரங்களை, தொடர்ந்த ஆண்டுகளில், தென்னிந்தியப் பகுதிகளில் திட்டமிட்டு நடத்தினர்.

அப்போது தக்காணத்தின் ஆனெகுந்தி பகுதியில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த முகம்மது மாலிக்கால் இந்தக் கலவரங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை. தில்லி சுல்தானாகிய முகமதுபின்துக்ளக் தன்னிடம் அரசியல் கைதிகளாக இருந்த முதலாம் அரிஅரன், முதலாம் புக்கன் ஆகிய இருவரை, ‘முகமதிய சமயத்திலிருந்து மாற மாட்டோம்’ என எழுதி வாங்கிக் கொண்டு கலவரங்களை அடக்க அனுப்பினார்.

முகம்மது மாலிக்கை தென்னிந்திய ஆளுநர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு இவர்கள் இருவரையும் ஆளுநர்களாக நியமித்தார் முகம்மது பின் துக்ளக். அவர்கள் இருவரும் தக்காணத்தின் சுல்தான் பிரதிநிதிகளாக ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்தனர். காலப்போக்கில் இருவரும் வித்தியாரண்யர் என்பவரின் போதனையை ஏற்று இந்துவாக மாறினர்.

**விஜயநகர ஆட்சி**

’சிறீ விருபாஷர்’ பெயரில் அரசு ஆவணங்களில் கையெழுத்திட்த் தொடங்கிய முதலாம் அரிஅரன் தன்னை, தில்லி சுல்தானின் பிரதி நிதியாக அல்லாமல், தனித்த அரசராக அறிவித்துக் கொண்டார். முதலாம் அரிஅரனால் 1336, ஏப்ரல் மாதம் 18 ம் நாள் விஜயநகர அரசு உருவானது. முதலாம் அரிஅரன், முதலாம் புக்கன் இருவருக்கும் ஹொய்சள கன்னட மரபுத் தொடர்பு உண்டு.

விஜயநகர பேரரசை உருவாக்கியவர்கள் குறித்து இப்படி ஒரு

கதையிருக்கிறது! உறுதியாக இது ஒரு மதச்சார்பு கொண்ட கதைதான். உயிருக்கு அஞ்சி இசுலாமைத் தழுவுதல், பின்னர் இந்துமத அடையாளத்துடன் ஆட்சியைப் பிடித்தல் என்பதை இராஜதந்திரம் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், முதலாம் அரிஅரனும், முதலாம் புக்கனும் தனித்த ஓர் ஆட்சியை அமைக்கின்ற சந்தர்ப்பத்துக்கு காதிருந்தவர்களாகவே கருதிட முடியும். அவர்களால் தொடங்கப்பட்ட நாயக்கர்களின் ஆட்சியானது கி.பி.1646 வரை நீடித்தது.

**குமார கம்பண்ணா**

விஜயநகர பேரரசின் மன்னனான குமார கம்பண்ணா கி.பி.1371 ல் தமிழகத்துக்குள் நுழைந்து வழியிலிருக்கும் சிறு சிறு அரசுகளையெல்லாம் வீழ்த்தி காஞ்சியை தலைமையாகக் கொண்டு நிலை பெற்றார். பின்னர் அவர் மதுரை வரை படையெடுத்து, அப்போதிருந்த மதுரை சுல்தான் பக்ருதின் முபாரக் ஷாவை வென்றார். மதுரையை மய்யமாகக் கொண்ட மாபார் சுல்தானியர் ஆட்சி கி.பி.1335 முதல் 1378 வரை நீடித்தது.

எப்போதுமே ஓர் ஆட்சி நிலை பெற்ற பின்னர் அதை காலாதீதத்துக்குமாக வேர்விட வைப்பதற்கு ஆட்சியாளர்கள் எடுக்கும் கருவிகளில் மிகப்பிரதானமானது மதமாகும். குமார கம்பண்ணாவின் தந்தை முதலாம் புக்கன் ஆவார். அவருடைய தாயின் பெயர் கங்காதேவி. இவர் ஒரு கவிஞரும் கூட! கங்காதேவி எழுதிய மதுரா விஜயம் நூலில், அன்று மதுரை சுல்தானியர் ஆட்சியில் பார்ப்பனர்களின் நிலை எப்படி இருந்தது என்று எழுதியிருக்கிறார். பார்ப்பனர்களின் நிலைதான் ஒட்டு மொத்த இந்துக்களின் நிலை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பார்வையே இன்று வரைக்கும் தொடர்ந்திடும் இந்துத்துவ பார்வை! கங்காதேவி எழுதிய இந்தக் குறிப்புகள் இன்றைய இந்து எழுச்சிக்கும் வெறியூட்டக் கூடியவையாக இருக்கின்றன.

குமார கம்பண்ணா பிறந்த சமயத்தில் அவருடைய தந்தை முதலாம் புக்கன் பார்ப்பனர்களுக்கும், ஏழைகளுக்கும் பரிசுகளை வழங்கியிருக்கிறார். சிறைக் கைதிகளை விடுவித்திருக்கிறார். என்று கங்காதேவி எழுதுகிறார். குமார கம்பண்ணா தருமன், பீமன், அர்ஜுனன் ஆகியோரை ஒருங்கே உருவாக கொண்டவர் என்று வருணிக்கிறார். முல்பாகல் பகுதியின் மகாமண்டலேஸ்வரரான முதலாம் புக்கன், குமார கம்பண்ணாவை, திருவண்ணாமலை சம்புவராயர், மற்றும் மதுரை சுல்தானியர்களை வெற்றி கொள்ள அனுப்பி வைக்கிறார். அப்படி அனுப்பி வைக்கிற போது, குறிப்பாக மதுரை சுல்தானியர்களை அழிக்கும்படி மகனிடத்தில் சொல்கையில் ''மதுரையிலிருக்கும் அவர்கள் இலங்கையில்

இருக்கும் இராவணனின் அரக்கர்களைப் போன்றவர்கள். எனவே, அவர்களை இராமபிரான் அழித்ததைப் போல அழித்துவிடு'' என்று சொன்னதாகக் குறிப்பிடுகிறார்.

குமார கம்பண்ணா சம்புவராயர்களை வெற்றி கொண்ட பின்னர், காஞ்சியில் வந்து இருக்கும் போது, அடையாளம் தெரியாத பெண் ஒருவர் அவரிடம் வந்து தென்னாட்டின் நிலையைச் சொல்லி அழுததாக கங்காதேவி எழுதுகிறார்.

''வேத மந்திரங்கள் ஓதிடும் ஒலியும், யாகம் வளர்த்திடும் புகையும் எழும்பிடும் அக்ரஹாரங்களில் இன்று இறைச்சியை வாட்டிடும் வாடை வருகிறது. மிருதங்க ஒலி கேட்ட கோயில் மண்டபங்களில் குள்ள நரிகளின் ஊளை கேட்கிறது. மார்பில் சந்தனம் பூசி பெண்கள் குளிப்பதால் வெண்ணிறமாக ஓடும் தாமிரபரணியின் நீரோ, இன்று பார்ப்பனர்களையும், பசுக்களையும் கொன்ற ரத்தத்தால் சிவப்பாக ஓடுகிறது''

விஜயநகர மன்னர்கள் தங்களின் ஆட்சி முழுவதும் இந்து மதத்தை நிலை படுத்திட எவ்வாறெல்லாம் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதைக் கங்கா தேவியின் மதுரா விஜயம் நூலை முன்னுரையாக வைத்து அறிந்து கொள்ள முடியும்.

**கிருஷ்ண தேவராயர்**

முதலாம் அரிஅரன் முதல் வீர நரசிம்மர் வரை சுமார் பன்னிரண்டு பேர் அரசாண்டதற்குப் பின்னர் கிருஷ்ண தேவராயர் கி.பி.1510ல் பதவிக்கு வந்தார். விஜயநகர பேரரசின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த, புகழ்ப்பெற்ற அரசர் கிருஷ்ண தேவராயர் ஆவார். இவர் ஒரு கவிஞரும் கூட! ஆமுக்த மால்யதா என்னும் நூல் இவர் எழுதியதே. இவருக்கு மனைவியர்கள் பன்னிரண்டாயிரம் பேர்! விஜயநகர பேரரசை கோவா, மகாராட்டிரம், ஒரியா முதல் மதுரை வரை விரிவாக்கம் செய்வதற்காக தன்னுடைய ஆட்சிக் காலத்தில் முக்கியமான எட்டு போர்களை அவர் நிகழ்த்தினார். சிங்களம் வரையிலும் கூட போரிட்டுச் சென்றதாக அறியப்படுகிறது.

இவர் ஆட்சியில் தென்னிந்தியாவில் இந்து மதம் புத்துயிர்ப்பு பெற்று நன்றாக தன்னை நிலைபடுத்திக் கொண்டது. இவருடைய பதவியேற்பு நிகழ்ச்சி குறித்த செய்திகளை பார்த்தாலேயே இது விளங்கிவிடும். கிருஷ்ண தேவராயருக்கு முடிசூட்டு விழா நடத்திய நாளில் ஒரு கோடிப் பசுக்கள் தானமாகக் கொடுக்கப் பட்டுள்ளன. நான்கு கடல்கள், எட்டு நதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித நீரால் பார்ப்பனர்கள் அவரை நீராட்டியிருக்கிறார்கள். இராமாயணத்தின் சில சருக்கங்களை பாடுகையில் அவர் அரியணையில் அமர்ந்திருக்கிறார். பொன்னும், பொருளும் கோ யில்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**இந்துத்துவ அடிப்படை**

கிருஷ்ண தேவராயர் தன்னுடைய தலைநகரத்தில் மட்டும் ஐந்து கோயில்களை கட்டினார். நரசிம்மரின் மிகப்பெரிய சிலையொன்றை கி.பி.1528ல் நிறுவி, இன்று இந்துக் கடவுளரின் பெருஞ்சிலைகளை அமைக்கும் பழக்கத்துக்கு அடிகோலியவர் கிருஷ்ண தேவராயரே. திருப்பதி கோயிலை முக்கியத்தலமாக மாற்றியதும் இவர் தான்.

மதுரை திருமாலிருஞ்சோலை, சிறீவில்லிபுத்தூர், கருவநல்லூர், சங்கரநயினார், தென்காசி, குற்றாலம், அகத்திய பர்வதம், திருநெல்வேலி, தோத்தாத்திரி, திருக்குறுங்குடி, கன்னியாகுமரி, திருச்செந்தூர், ஆழ்வார் திருநகரி, திருவண்ணாமலை, சிறீசைலம், சிதம்பரம், காளஹஸ்தி, இராமேஸ்வரம் ஆகிய ஊர்களிலிருக்கும் கோயில்களுக்கு நிலங்களையும், கொடைகளையும் அளித்திருக்கிறார். இப்படி இந்து கோயில்களுக்கு நிலங்களை வழங்குவது இவருக்கு முந்தைய காலத்திலும் கூட இருந்திருக்கிறது. முதலாம் அரிஅரன் தஞ்சை மாவட்டம், மாயூரம் வட்டத்திலிருக்கும் சித்தாமூர் கிராமத்தை பார்ப்பனர்களுக்குக் கொடையாக அளித்துப் பட்டயம் எழுதிக் கொடுத்திருக்கிறார். இது கோமல் கொடை என்று அழைக்கப் படுகிறது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோவில்களில் ஸ்மார்த்த பார்ப்பனர்கள் பணியமர்த்தப் பட்டிருக்கிறார்கள். வடமொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர் ராயர் ஆவார்.

**நிர்வாகம்**

இவர் காலத்தில் பார்ப்பனர்கள் நல்ல செல்வாக்கையும், உயர்ந்த நிலையையும், பதவியையும் பெற்று வாழ்ந்திருக்கிறார்கள். பார்ப்பனர்கள் கோட்டைகளின் தலைவர்களாக அமர்த்தப் பட்டுள்ளனர். பார்ப்பனர்கள் நேர்மையானவர்கள், ஆற்றலும் ஊக்கமும் உடையவர்கள், கணக்குகளை அமைப்பதிலும், அரசியல் அலுவல்களிலும் பெரிதும் உதவியாய் இருப்பவர்கள் என கிருஷ்ண தேவராயர் திடமாக நம்பியிருக்கிறார். இவர்களில் பலர் மடாதிபதிகளாகவும், நில உரிமையாளராகவும் இருந்திருக்கின்றனர்.

அமைச்சரவையில் பார்ப்பன, சத்திரிய, வைசிய வருணத்தவர்கள் மட்டுமே இருந்திருக்கிறார்கள். ''விஜயநகர அரசர்களின் அரச தர்மமே இந்து தர்மத்தை அழியாமல் பாதுகாப்பதாகும்'' என்று கிருஷ்ண தேவராயர் தன்னுடைய நூலில் குறிப்பிடுகிறார். இவரின் நம்பிக்கையான ஏழுவகையான சந்தானங்களைப் பெறுவதில் அக்ரஹாரம் அமைப்பதும், கோயில் எழுப்புவதும் முக்கியமானவையாகும்.

நிலவுடைமையாளர்கள் அனைவரும் ஆகிக்கச்சாதியினரே. இவர்கள் கட்டிய ஐந்து வகையான வரிகளில் இரண்டு பார்ப்பனர்களுக்கும், கோயில்களுக்கும் வழங்க வேண்டிய

வரிகளாகும். எடுத்துக்காட்டாக, ஒரு நிலத்தில் முப்பது கலம் நெல் விளைவிக்கப் படுகிறதென்றால், அதில் ஒரு கலத்தை கோயிலுக்கும், ஒன்றரை கலத்தை பார்ப்பனருக்கும் கொடுக்க வேண்டும். ஆனால் பார்ப்பனர்களுக்கு சொத்து வரி விதிக்கப்படவில்லை. வைசியர் வீட்டுக்கு 1 பணமும், வெட்டியார் வீட்டுக்கு 1.5 பணமும் வசூலித்திருக்கிறார்கள் என்பதிலிருந்தே இந்த ஆட்சியில் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை என்னவாக இருந்திருக்கும் என்பதை உணரலாம். மேலும் பண்ணையில் வேலையாளாக இருப்பவரும் தொழில் வரியாக 1 பணத்தை செலுத்த வேண்டுமாம்.

மனுதர்ம சட்டங்களின்படியே ஆட்சியும், நீதி நிர்வாகமும் நடைபெற்றிருக்கின்றன. கிருஷ்ண தேவராயர் தன்னுடைய நூலில், "மனுதர்மத்தின் படி அரசன் கொடுக்கும் தண்டனைக்கு பயந்துதான், கணவனுடன் மனைவி அன்பாகவும், ஆண்கள் பெண்கள் ஒழுங்காகவும், சன்னியாசிகள் இந்திரியங்களை அடக்கியும், உயர் வருணத்தவரிடம் தாழ்ந்தவர்கள் பணிவுடனும், எஜமானனின் கட்டளையை ஏற்று வேலைக்காரரும் நடப்பார்கள்" என்று குறிப்பிடுகிறார். ஒரு சமூகத்துக்கு எதிராக நடப்பதோ, பேசுவதோ, செயல்படுவதோ ராஜதுரோகக் குற்றமாக கருதப்பட்டிருக்கிறது. பறையர்களில் சில குழுக்களை குற்றவாளிகள் பட்டியலில் சேர்த்திருக்கிறார் கிருஷ்ண தேவராயர். இவர் காலத்தில் உடன்கட்டை ஏறுதல், பலதார மணம், இளைமையிலேயே திருமணம், மணக்கொடை ஆகிய வழக்கங்கள் இருந்திருக்கின்றன. பரத்தமை அனுமதிக்கப் பட்டிருக்கிறது. தேவதாசி முறையும் வழக்கத்தில் இருந்திருக்கிறது.

**முடிவு**

வடஇந்திய மாநிலங்களில் இருப்பதைப் போன்ற சமூக நிலைமைகள் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் நிலவுகின்றன. இந்த சாதிமத வழக்கங்களை, இந்து மதவெறியின் அடிப்படையில் விஜயநகர பேரரசும், கிருஷ்ண தேவராயரும் இந்து அறம் அல்லது இந்து தர்மம் என்ற பெயரில் உறுதியாக நிலைபடுத்தி மக்களிடையே கெட்டித்தட்டிப் போகச் செய்திருக்கிறார்கள்.

ஏனைய மாநிலங்களைப் போலன்றி, நல்வாய்ப்பாக தமிழ்நாட்டில் தந்தை பெரியாருடைய கடும் உழைப்பே இந்த மதவெறியிலிருந்து மக்களை ஓரளவு மீட்டெடுத்திருக்கிறது. தென்னிந்திய இந்து நிலையாக்கம் என்ற பார்வையில் விஜயநகர பேரரசை முன்வைத்து விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்கு ஒரு சிறு குறிப்பாக இக்கட்டுரையை எடுத்துக் கொள்ளலாம்.

**உதவிய நூல்கள்:**

*(1). கிருட்டிணதேவராயர், பு.ச.அரங்கநாதன், வரலாற்றுத்துறை பேராசிரியர், அரசு பயிற்சிக் கல்லூரி, வேலூர், தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், வரிசை எண்589, 1974*

*(2). The Tamil Country under Vijayanagar, Dr.A.Krishnaswami, Reader in History, Annamalai University, 1964*

*(3). ஆமுக்த மால்யத, கிருஷ்ண தேவராயர், தமிழில்: எம்.ஜி.ஜெகன்நாதராஜா, ஜி.குணசேகர், தெலுங்கு பல்கலைக்கழகம், ஹைதிராபாத், 1988*

❖❖❖

**கவிதை**

# அவமானங்கள்

**ரவி குமாரசாமி**

மயிர்நீப்பின் உயிர்வாழாக்
கவரிமான் அல்ல என்பதால்
அவமானங்கள் ஒன்றும்
புதியது அல்ல.

மேலும்
கழிவிரக்கத்தை என் இதயச் சுவற்றில்
வரைந்து கொள்பவனும் அல்ல.

கல்விச் சாலையில்
கடன் பெற்ற இடத்தில்
அன்பற்ற உறவில்
பணியிடத்தில்
அறிவுப் பற்றாக்குறையில்
பாகுபாடான பயணங்களில்
இப்படி அவமானங்களை
வெகுவாக ஈட்டி வைத்துள்ளதை
நான் அறிந்தே வைத்துள்ளேன்.

அதன் தடயங்களை
அழித்துவிட
எனக்கு விருப்பமும் இல்லை.

ஏனென்றால்
அவை
அறிதலை
ஆன்மாவை
பற்றறுதலை
மென்மேலும் மேம்படுத்தக்கூடும்.

உனது வாய்க்கு
அவ்வப்போது
நான் இரையாகவும் கூடும்

♦♦♦♦

## உங்கள் மனஓசை

# புதுமலர்’ பாவேந்தர் பாரதிதாசன் ஆவணச்சிறப்பிதழ் அறிமுகம்.

**மு.சிவகுருநாதன்**

‘புதுமலர்’ இதழ் வள்ளலார், கவிஞர் தமிழ் ஒளி ஆகியோருக்கு முன்பு ஆவணச் சிறப்பிதழ் வெளியிட்டது. பாரதிதாசனின் பிறந்த (1891, ஏப்ரல் 29) மற்றும் நினைவு நாள் (1964, ஏப்ரல் 21) வரும் ஏப்ரல் மாதத்தினை ஒட்டி வெளியான இச்சிறப்பிதழில் ஜமாலன், ஈரோடு தமிழன்பன், கண.குறிஞ்சி, வே.மு.பொதியவெற்பன், எஸ்.சண்முகம், ஆ.தனஞ்செயன், இரா.முரளி, செந்தலை ந.கவுதமன், எல்.இராமமூர்த்தி, மணிகோ பன்னீர்செல்வம் ஆகியோரின் பாரதிதாசன் குறித்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

பாரதிதாசனின் படைப்புகளை ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்த்து அரசே மலிவுப்பதிப்பாக வெளியிட வேண்டும். மகாராஷ்டிர மாநிலத்தில் மூடநம்பிக்கைகளுக்காகக் குரல்கொடுத்துப் போராடி, இந்து சனாதனவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட டாக்டர் நரேந்திர தபோல்கரின் கோரிக்கையை ஏற்று அம்மாநிலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவந்ததுபோல், பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக, மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டுவரவேண்டுமென, இதழின் தலையங்கம் வலியுறுத்துகிறது.

‘தமிழ் நவீனத்துவ மரபில் பாரதியும் பாரதிதாசனும்’’, என்ற கட்டுரையில் தமிழில் மறுமலர்ச்சிக் காலத்தில் இயங்கியவர்கள் பாரதியும் பாரதிதாசனும் என்றாலும், பாரதி மறுமலர்ச்சியுடன் நின்றுவிட, பாரதிதாசனோ தமிழ் அறிவொளி இயக்கத்தின் முன்னத்தி ஏராக தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருப்பதை அவரது இலக்கிய இயக்கம் வெளிப்படுத்துவதாக உள்ளது, என்று ஜாமலன் புதிய பார்வைக் கோணத்தை முன்வைக்கிறார்.

பாரதி சமஸ்கிருத தர்மாக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர். பாரதிதாசன் தமிழ் அறக் கோட்பாட்டை ஏற்றவர். இதனால் திருக்குறளில் உள்ள துறவறம், வீடுபேறு உள்ளிட்ட சமணம் சார்ந்த நம்பிக்கைகளைப் புறந்தள்ளி, சமஸ்கிருத தர்மாக் கோட்பாட்டின் அடிப்படைகளான நால் வர்ணம், நால்வேதம், நான்கு ஆசிரமம், நான்கு நிலைகள் ஆகியவற்றை மறுத்து, முத்தமிழ், முக்கனி, முச்சங்கம், மூவேந்தர்கள், அறம், பொருள், இன்பம் என்ற மூன்று நிலைகள் என்கிற தமிழ் அறக் கோட்ப்பாட்டை தனது காப்பியங்களில் எடுத்துரைப்பதை ஜமாலன் விரிவாக விளக்குகிறார்.

தமிழர் நிலவளங்களைப் பாதுகாப்பதும் தமிழ் மொழி மீதான பண்பாட்டுத் திணிப்பை எதிர்ப்பதும் பாரதிதாசனின் முதன்மை நோக்கமாக இருப்பதால் அவரைத் தமிழ்ப் பின்காலனியத்தின் முன்னோடி என்று பேரா.இரா.முரளியின் கட்டுரை மதிப்பிடுகிறது.

பாரதிதாசனுடான நினைவுகளைப் பகிரும் ஈரோடு தமிழன்பனின் ‘பாவேந்தர் சில நினைவுகள்’ கட்டுரையில் பெரியாரியத் தாக்கம் இருந்த காரணத்தினால் பொதுவுடையாளர்கள் பாரதிதாசனை உரிய இடத்தில் வைத்துப் பார்க்கவோ, பாராட்டவோ முன்வரவில்லை என்கிறார். பாரதிதாசன் வீட்டை அடமானம் வைத்து ‘பாண்டியன் பரிசு’ காவியத்தைத் திரைப்படமாக்க முயன்று ஏமாற்றங்களால் உடல்நலம் குலைந்துபோனதையும் எடுத்துக்காட்டுகிறார்.

சீர்திருத்தக் கவி, தமிழ்த் தேசிய கவி, பொதுவுடைடைமைக் கவி, பிரபஞ்சக் கவி போன்ற பாரதிதாசனின் சிந்தனைப் பரிமாணங்களையும் அவரது கவிதைகளில் உள்ள சில முரண்பாடுகளையும் விளக்குகிறது தோழர் கண.குறிஞ்சியின் கட்டுரை.

‘மணிக்கொடி’ இதழில் எழுதிய பாரதிதாசனை நவீன இலக்கிய உலகம் பொருட்படுத்தவில்லை, என்கிற சுகுணா திவாகரின் கருத்தை பகுதி உண்மை என்று சொல்லும் தோழர் வே.மு.பொதியவெற்பனின் கட்டுரை (பாரதிதாசனும் புதுமைப்பித்தனும்), இதன் பொருட்டு பேரா. ய.மணிகண்டன், தி.க.சி., இளங்கோ கிருஷ்ணன், தமிழவன் போன்ற தரப்புகளை இடையீடு செய்து, பாரதி பரம்பரை, பெரியார் பரம்பரை இரண்டிலும் ஒருசேர இயங்கிய பாரதிதாசனுக்கும் மணிக்கொடியாளர்களுக்கும் இடையிலான உடன்பாடு மற்றும் முரண்பாடுகளின் வெவ்வேறு தரப்புகளை தமது வழக்கமான பாணியில் மேற்கோளிடுகிறார்.

பாரதிதாசனின் ‘அழகின் சிரிப்பு’ மூலம் ‘தமிழ்’ என்ற சொல் அவரது கவிதைகளின் இயற்கூறாகவும் விளங்குவதையும் ‘தமிழ்’ என்ற குறியீட்டை கவிதையாடலின் பரப்பில் நீட்சி கொள்ளச் செய்வதையும் நவீன இலக்கிய விமர்சகர் எஸ்.சண்முகம்

எடுத்துக்காட்டுகிறார். இயற்கையின் எண்ணிலியான அசைவுகளைப் பல்வேறு காட்சிகளாகப் பிரதியாக்கம் செய்திருக்கும் ‘அழகின் சிரிப்பு’ தமிழின் மொழிபிம்பத்தை அகவயப்படுத்தியுள்ளது என்றும் கூறுகிறார்.

“வட்ட மேசையில் சுயமரியாதை இதழியலின் இருக்கை” என்ற பேரா.மணிகோ பன்னீர்செல்வத்தின் கட்டுரையில் சுயமரியாதை இதழியலின் படைக்கலன்களின் ஒன்றான ‘புதுவை முரசையும்’ பாரதிதாசனின் எழுத்தாக்கங்களையும் எடுத்துரைக்கிறது. ஸ்வராஜ்யம் பற்றிய சுயமரியாதை நோக்கு, நாட்டைச் சுற்றிய ராட்டை, ஆணவச் சுதந்திரம் அடைந்துவிட்டோர், வகுப்புவாரி உரிமையிலிருந்து இரட்டை வாக்குரிமை, வட்ட மேசையில் படர்ந்த சதுர்வருணம் போன்ற தலைப்புகளில் பாரதிதாசனது பெரியாரியப் பார்வை வெளிப்படுத்தப்படுகிறது.

பாரதியார் வழியாக பெரியாரை வந்தடைந்த பாரதிதாசன், பரந்த அறிவுப்பார்வை கொண்டு உலகை அணுகிக் கவிதைகளில் புதிய போக்குகளைக் கையாண்டதை ‘பெரியார் ஒளியில் பாரதிதாசன்’ என்கிற செந்தலை ந.கவுதமன் கட்டுரை அவரது படைப்பு வழிநின்று நிறுவுகிறது.

கவிதை என்பது வெறுமனே அகவுணர்வு வெளிப்பாட்டிற்கான வடிகால் சாதனமாக அமைவது என்னும் நிலைப்பாட்டிலிருந்து வேறுபடும் வகையில், சமுதாயத்தைப் பாதுகாக்கப் போராடுவோரின் ஆயுதமாகக் கவிதையின் பரிமாணத்தை வலிமைமிக்கதாக மாற்றியதைப் பாரதிதாசனின் சாதனையாக முனைவர் ஆ.தனஞ் செயன் கட்டுரை குறிப்பிடுகிறது.

பேரா.எல். இராமமூர்த்தியின் ‘பாவேந்தர் தமிழ்’ எனும் கட்டுரை, மொழியியலின் ஊடாக பாரதிதாசனின் கருத்தியல் கோட்பாடு அணுகுமுறைகளை ஆராய்கிறது. நாம் X பிறர், தெற்கு X வடக்கு, தமிழ் X பிறமொழிகள், நகரம் X கிராமம், மாற்றம் X பழமை, அறிவியல் விவசாயம் X பண்டைய விவசாயம், சந்தைப் பொருளாதாரம் X தேவை சார்ந்த பொருளாதாரம், வளர்ச்சி X நிலைத்தன்மை போன்ற இருமை எதிர்வுகளைக் கட்டமைக்கும் மொழியியல் கூறுகளைக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

இன்றைய அரசியல் சூழலைக் கவனத்தில் கொண்டும் நவீன இலக்கிய உலகில் பாரதியைப் போன்று யாரும் அதிகம் உச்சரிக்காத பாரதிதாசனின் பல்வேறு நவீன முகங்களை வெளிப்படுத்தும் வகையில் ‘புதுமலர்’ ஆவணச் சிற்ப்பிதழில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அமைந்துள்ளது சிறப்பான ஒன்றாகும்.



# புத்தகப் பேழை

**ஓர்மைத்தடம்**

**பேரா. வீ.அரசு**




ஆசிரியம் ஆய்வு உரையாடல்கள்

தொகுப்பும், பதிப்பும் **அ. மங்கை**

பக்கங்கள் 352

விலை ரூ. 500

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.,

சென்னை 600 050.

044 2625 1968,2625 8410,4860 1884.

பேரா. வீ.அரசு அவர்களின் மணிவிழா நிறைவின் பொழுது, அவரது மாணவர்கள் நிகழ்த்திய ஆய்வுகள் குறித்து மாணவர்களே எழுதிய "ஓர்மை வெளி" எனும் நூல் 2014 ல் வெளியிடப்பட்டது. இப்பொழுது அதன் தொடர்ச்சியாக அவரது 70ஆம் அகவை நிறைவில் "ஓர்மைத்தடம்" எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. பல்வேறு பொறுப்புகளில் இருக்கும் அரசு அவர்களின் மாணாக்கர்கள் பல்வேறு பொருண்மையில் அவருடன் நடத்திய உரையாடல்கள் இதில் தொகுக்கப் பட்டுள்ளன. பல்கலைக் கழகத்திலும், பல்கலைக் கழகத்திற்கு வெளியேயும் அரசு அவர்கள் கற்றுத் தந்த எண்ணற்ற செய்திகள் இந்த 15 உரையாடல்கள் மூலம் ஆவணமாகப் பதிவாகியுள்ளன.

தமிழ் இலக்கியத் துறையில் பாடத்திட்டம், வகுப்பறை சீர்திருத்தம், தமிழ் ஆய்வு வெளி, அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், பயணங்கள் / மின் ஊடகங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவம், அச்சுப் பண்பாடு, அரங்க நிகழ்வுகள், புத்தக உருவாக்கம், ஆய்வு மரபு, ஈழத்தின் கல்வி இலக்கியச் சூழல் என இந்நூலின் பயணம் மிக விரிவானது. தவிரவும் பேராசிரியர் அரசு அவர்களின் வாழ்வும் பணியும் மற்றும் அவரது புகழ் பெற்ற நூலகம் குறித்த சுவையான பகுதிகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

கல்விப் புலம் , இலக்கியத்தளம், பதிப்புத்துறை சார்ந்து சிந்திப்பவர்கள் கரங்களில் கட்டாயம் இருக்க வேண்டிய நூல் இது.




“லத்தீன் அமெரிக்காவில் நம்பிக்கைக் கீற்று இருபத்தொன்றாம் நூற்றாண்டு சோசலிசம்”
**அமரந்த்தா**,

2023, பக். 208, விலை: ரூ 200,

பன்மை வெளி, சென்னை 78,

தொடர்புக்கு: 98408 48594 / 94439 18095


---

“காஸ்த்ரோவின் கூபாவும் லத்தீன் அமெரிக்க மார்க்சியமும்”

**அமரந்த்தா,** 2023, பக். 260,விலை: ரூ 250,

பன்மை வெளி, சென்னை 78,

தொடர்புக்கு: 98408 48594 / 94439 18095





இலத்தீன் அமெரிக்க இலக்கியம் அரசியல் குறித்துக் கடந்த 40 ஆண்டுகளாகத் தமிழில் பேசியும், எழுதியும், மொழிபெயர்த்தும் வரும் அமரந்த்தா அவர்களின் இரண்டு நூல்கள். கூபா உள்ளிட்ட இலத்தீன் அமெரிக்க நாடுகளின் வரலாற்றை பொலிவாரில் துவங்கி ஹொரசோ மார்த்தி வழியாக காஸ்ட்ரோ, செகுவேரா, சாவேஸ் வரை எளிமையாக பேசும் 40 கட்டுரைகளைக் கொண்ட இரண்டு தொகுப்பாக வெளிவந்துள்ளது. முதல் நூல் காஸ்த்ரோவின் கூபா குறித்தும், அவர்களது புரட்சிகரச் செயல்பாடுகள், ஆட்சி நிர்வாகத்தில் அவர்களது மக்கள் சார்ந்த பணிகள், மக்களின் நலவாழ்வை முதன்மைப்படுத்தும் விவசாயம், மருத்துவம், கல்வி ஆகியவற்றில் அரசின் அக்கறை ஆகியவற்றைத் திறம்பட விளக்கி உள்ளார். பொதுவாக, சோஷலிச (சமஅறக்) குடியரசுகள் குறித்து இன்றைய முதலாளிய சக்திகள் பரப்பும் எதிர்மறையான கருத்துக்களுக்கான விடையை எப்படி கூப சமஅறக் குடியரசு வெளிப்படுத்துகிறது என்பதை அவரது நேரடி அனுபவங்கள் வழியாக விளக்கியுள்ளார். ஓர் அமெரிக்க ஆய்வாளர் தமிழகம் வந்து தமிழகத்தில் உள்ள இயற்கை விவசாயத்தை ஆய்வு செய்து இந்தியாவில் இயற்கை விவசாயம் பல சாதனைகளைப் புரிய முடியும் என்பதைக் குறிப்பிடுவதோடு, தமிழகத்தில் உள்ள பெரும்பாலான

இயற்கை விவசாயப் பண்ணைகளையும் அறிமுகப்படுத்துகிறார் ஒரு கட்டுரையில். அமெரிக்க வல்லரசு கூபாவை எப்படி அழிக்க முயல்கிறது என்பதையும் அதையும் தாண்டி அது எப்படி ஒரு வளர்ச்சியடைந்த நாடாக முன்னேறி உள்ளது என்பதையும், விவரிக்கும் பல கட்டுரைகள் இதில் உள்ளன.

இரண்டாவது நூலில் இன்றைய சமஅறக் குடியரசுகளின் பல்வேறு சிக்கலுக்கு எப்படி ஒரு நம்பிக்கைக் கீற்றாகக் கூபா விளங்குகிறது என்பதை விவரிக்கிறார். குறிப்பாக வெனிசூலா உள்ளிட்ட பல தென் அமெரிக்க நாடுகள் எப்படி இன்றைய ஆதிக்க வல்லரசு நாடுகளுக்கு ஒரு சவாலாகவும், வளரும் நாடுகளுக்கு நம்பிக்கைக் கீற்றாகவும் உள்ளது என்பதை விளக்குகிறது இந்நூல். பொதுவாக கூபாவின் காஸ்த்ரோ, வெனிசுலாவின் சாவேஸ் ஆகியோரை முன்வைத்து பேசினாலும், பொதுவான தென் அமெரிக்க நாடுகளின் அரசு, அரசியல், அதிகாரப் பரவலாக்கம் மக்கள் வாழ்க்கைத்தர உயர்வு ஆகியவற்றைப் புள்ளிவிபரங்களுடன் விவரிக்கின்றன இந்நூல்கள். குறிப்பாக மருத்துவத்துறையில் உலகில் முதல்தரமான நாடாக கூபா மாறியது எப்படி, மக்கள்நல மருத்துவம், இயற்கை விவ்சாயம் ஆகியவை குறித்து விரிவாக வியப்பூட்டும் பல தகவல்கள் அடங்கியதாக இவ்விரண்டு நூல்கள் அமைந்துள்ளன. இரண்டு நூல்களும் ஒரு குறிப்பிட்ட மையப் பொருளை விளக்கும் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது.

---




“குருமூர்த்தி: ஆர்.எஸ்.எஸ்ஸின் நிழல் அதிகாரம்”

**சுஜாதா சிவஞானம்**,

தமிழில்- **பேரா. சே. கோச்சடை**,

2024, பக். 128, விலை: ரூ. 150,

தமிழ்ப்புலம், மதுரை 18,

தொடர்புக்கு: 77082 80309 / 84281 08721

ஆர்.எஸ்.எஸ். என்கிற அமைப்பே இந்திய அரசியல் சட்டத்தை, இந்திய தேசியக் கொடியை ஏற்காத ஒரு வெகுமக்கள் விரோத பாசிச நிழல் அமைப்புதான். அந்த அமைப்பிற்குள் ஒரு நிழல் அதிகாரமாகத் தன்னை எப்படி எஸ். குருமூர்த்தி வளர்த்துக் கொண்டு இன்றைய பாசிச அதிகாரத்தின் உயர்ந்த அதிகாரத்தைப் பெற்றுள்ளார் என்பதை விவரிக்கும் ;நூலாக இது விறுவிறுப்பாக எழுதப்பட்டுள்ளது. கோவையைச் சேர்ந்த பத்திரிகையாளரான சுஜாதா சிவஞானம் 12 ஆண்டுகள் பலரும் எழுத மறுத்த ஒன்றை, ஒரு சவாலாக ஏற்று பல கள ஆய்வுகள், நேரடியான நேர்காணல்கள் என 8 மாதங்கள் (2022 ஜூன் துவங்கி 2023 பிப்ரவரி வரை) கடுமையாக உழைத்து, ஆய்வு செய்து, ஆதாரங்களுடன் கேரவன் ஆங்கில இதழுக்கு எழுதப்பட்ட ஒரு நீண்ட கட்டுரையே தமிழில் பேரா. கோச்சடை அவர்களால் சமூகப் பொறுப்புணர்வுடன் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. தமிழகத்தின் விழுப்புரம் அருகில் பாணாம்பட்டு என்ற கிராமத்தின் அக்ரஹாரத்தில் பிறந்து, அரசுப்பள்ளியில் தமிழ்வழியில் படித்து, ஒரு கணக்காயராக வாழ்வைத் துவங்கிய எஸ். குருமூர்த்தி அவர்கள் எப்படி தனது சதித்திட்டங்கள் (மகாபாரத கிருஷ்ணசகுனி ராஜதந்திரங்கள்) வழியாகப் பல்வேறு பணக்கார நிறுவனங்களை ஆர்.எஸ்.எஸ். வலைக்குள் கொண்டு வந்தார் என்பதைச் சிறப்பாக எழுதி உள்ளார் கட்டுரையாளர். நூலைப் படித்து முடித்தவுடன் அரசியல் சதுரங்கம் எப்படி ஆளும் அதிகார அமைப்புகளால், இத்தகைய சனாதனப் பார்ப்பனியர்களால் கட்டமைக்கப்பட்டு யதார்த்தமாக ஆக்கப்படுகிறது என்பதை அறிய முடிகிறது. தன் சாதி நலனுக்காகக் கருமமே கண்ணாக இல்லாமல், காரியமே கண்ணாக உழைத்த குருமூர்த்தி போன்றவர்கள் எதிர்மறை ஆசிரியர்களாக நமக்குக் கற்றுத் தருபவர்களாக உள்ளனர். தமிழின் நேர்மை, அறம் ஆகியவை எப்படி ஆரிய வருண தர்மாவின் காரியவாதத்திற்கு எதிராக உள்ளது என்பதை அறியத் தருகிறது இப்புத்தகம் எந்தக் குற்ற உணர்ச்சியும் இன்றி, பரந்துபட்ட மக்கள் நலனுக்கு எதிராக தன் சாதி நவனை முன்வைத்து செயல்படுவதே “ஆரிய தருமம்” என்பதை அறிய இந்நூல் ஒரு சான்றாக அமைந்துள்ளது. இதனைச் சரியான தருணத்தில் வெளியிட்ட தமிழ் புலம், பேரா. கோச்சடை மற்றும் ஈடுபட்ட தோழர்களுக்கும் நன்றியும் வாழ்த்தும் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம்.




“புதுக் கம்யுனிசம் மற்றும் சில கட்டுரைகள்” **தமிழவன்**,
2022, பக். 150, விலை: ரூ. 160,
அடையாளம், திருச்சி 10,
தொடர்புக்கு: 04332 273444 / 9444 77 2686

பொதுவுடைமைக் கோட்பாடுகள் குறித்து பல்வேறு உரையாடல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில் அதன் தற்கால உலகளாவிய விவாதங்களையும், இந்திய, தமிழகப் பொறுத்தப்பாடுகளையும் தொகுத்து, தமிழவன் தனது கருத்துரைகளுடன் வெளியிட்டுள்ள தொகுப்பே இந்நூல். இலக்கியம் சார்ந்தும், அரசியல் சார்ந்தும் 15 கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. அமைப்பியல், பின்அமைப்பியல், பின்நவீனத்துவம் குறித்த உரையாடல்களை இதில் தனது பார்வையில் முன்வைக்கிறார். விமர்சனம், கவிதை, இலக்கியம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் உட்பார்வையாக அரசியல் என்ற சட்டகம் எப்படி அமைகிறது என்பதைச் சொல்வதாக அமைந்துள்ளது. சிமன்தி போவா, நாம் சாம்ஸ்கி குறித்தும் கவிஞர்கள் தமிழச்சி தங்கபாண்டியன், ஞானக்கூத்தன் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகளும் இதில் உள்ளது. சிங்கப்பூர் இலக்கியம் குறித்து விரிவான அறிமுகக் கட்டுரையும் உள்ளது. சார்த்தரின் இலக்கியம் என்றால் என்ன? என்ற கட்டுரையை எடுத்து ஆய்வு செய்கிறது ஒரு கட்டுரை. நவீனக் கவிஞர்களின் கவிதைகளும் திறனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் விமர்சனத்தின் தோல்வி குறித்து விவாதிக்கிறது மற்றொரு கட்டுரை. தமிழ் இலக்கியம் எப்பொழுது நோபல் பரிசு பெறும், தமிழில் மார்க்சியப் பார்வைகளின் இரண்டு போக்குகள் எவை எனப் புதுவகைக் கம்யுனிசப் பார்வையும் தமிழ் இலக்கியமும் வெட்டிச் செல்லும் புள்ளிகளைத் தனக்கே உரிய திறனாய்வு உள்ளாற்றலுடன் இதில் வெளிப்படுத்தி உள்ளார் தமிழவன்

## பொதியவெற்பன் அவர்களது பவளவிழா நிறைவு-தஞ்சை

ஆய்வறிஞர் வே.மு.பொதிய வெற்பன் அவர்களின் ‘பொதிகை76’ பொதிய வெற்பன் பவழ விழா நிறைவுச் சிறப்பு நிகழ்வு 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை தஞ்சை பெசண்ட் அரங்கில் முழுநாள் நிகழ்வாக நடைபெற்றது.

வே.மு.பொதிய வெற்பன் அவர்களின் நூல் வெளியீட்டுடன் நிகழ்வு தொடங்கியது. (1) அ.பழனிச்சாமி தொகுத்து, கடவூர் மணிமாறன் பதிப்பித்த **‘அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே!** பொதியைக் கண்டடைந்த கதைகள்’, (2) **சமகாலக் கவிதைகளும், கோட்பாடுகளும்** (விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு (வம்சி வெளியீடு), (3) **அடையாள அரசியலும் திருமாவின் அனுபவ இயங்கியலும்** (Dravidian Stock), (4) **புதுமைப் பித்தம் வாசகத் தொகை நூல்** (2 தொகுப்புகள்) (பரிசல் வெளியீடு) ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

முதல் அமர்வைத் தோழர் **களப்பிரன்** தொடங்கி வைக்க, தோழர் பேராசிரியர் **இரா.காமராசு**, தோழர் **பசு. கவுதமன்**, பேராசிரியர் **இலக்குமி குமாரன் ஞானதிரவியம்**, கவிஞர் **நா.விச்வநாதன்**, தோழர் **கடவூர் மணிமாறன்** தோழர் **அ.மார்க்ஸ்**, பேரா. **வெற்றிச்செல்வன்** ஆகியோர் வே.மு.பொதிய வெற்பனுடனான தோழமை அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

இரண்டாம் அமர்வு நூல் மதிப்பீட்டரங்கமாக நடைபெற்றது. **‘தமிழின் நிறமும், ஆரிய வர்ணமும்’** நூல் குறித்துத் தோழர் கண.குறிஞ்சி, **‘மார்க்சியத்திற்கும் அஃதே துணை’** நூல் குறித்துத் தோழர் ஜமாலன், **‘திராவிட இயக்க ஒவ்வாமை நோயிலிருத்தல்’** நூல் குறித்து முனைவர் ந.முருகேச பாண்டியன், **‘சமகாலக் கவிதைகளும், கவிதை மதிப்பீடுகளும்’** நூல் குறித்துப் பேராசிரியர் கண்ணம்மாள் மனோகரன், **‘வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்’** நூல் குறித்துத் தோழர் புலியூர் முருகேசன், **‘பொதிய வெற்பன் இறையியல் மெய்யியல் ஆய்வுகள்’** நூல் குறித்துத் தோழர் ‘சிம்ளி’ இரா.விஜயன் ஆகியோர் விரிவாக உரையாற்றினர்.

நிகழ்வில் பொறியாளர் **இரா.கோமகன்**, பேராசிரியர் **வி.பாரி**, பொறியாளர் **கென்னடி**, **மங்கையர்க்கரசி ப்ரகாஷ், சௌந்திர வதனா சுகன்,** தோழர் **செ.சண்முக சுந்தரம்**, **இரா.செழியன்** ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முழுநாள் நிகழ்வையும் தோழர் கவிஞர் **ஸ்டாலின் சரவணன்** மிகச்சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

பதிப்பகங்கள் சார்பில் தோழர் **சிராஜுதீன்** (பாரதி புத்தகாலயம்), **கௌதம் சாம்** (Dravidian Stock), **கருப்பு நீலகண்டன்** (கருப்புப் பிரதிகள்) ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பல தோழமைகள், ஆளுமைகளின் ஒத்துழைப்புடன் ‘பொதிகை76’ நிகழ்வு மிகவும் சிறப்புடன் நடந்தேறியது





தோழர் அ.மார்க்ஸ்




தோழர் கண.குறிஞ்சி




தோழர், ஜமாலன்




பேராசிரியர். இரா.கந்தசாமி




பேராசிரியர் கண்ணம்மாள் மனோகரன்.




தோழர் பொதியவெற்பன் ஏற்புரை

## பேராசிரியர் வீ.அரசு அவர்களுக்குப் பாராட்டு விழா.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1985 முதல் 2014 வரை ஏறக்குறைய 29 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர் பேராசிரியர் வீ. அரசு அவர்கள். தமிழாசிரிய மரபில் கல்விப் புலம் சார்ந்து வழமையாக இயங்கியோர் நடுவில் பாடத்திட்டம், வகுப்பறைச்சூழல், இணைச் செயல்பாடுகள், ஆய்வு நெறியாள்கை எனப் பெரிதும் வேறுபட்டவர் அவர். அவருடைய கல்விசார் செயல்பாடுகள் யாவும் ஒரு மாணவரின் பரந்துபட்ட கல்வியறிவையும் உலகியல் அறிவையும் ஆய்வு முறையினையும் முதுகலைப் பட்டம் தொடங்கியே வளர்த்தெடுக்கும் வகையில் திட்டமிடப்பட்ட செயல்பாடாக அமையும். தன் பணிக்காலத்தில் 50 முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் 148 ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்களையும் உருவாக்கியவர் அவர். அவரின் தமிழியல் சார்ந்த தொடர் தேடல், ஆய்வு வெளி, சேகரிப்புகள் , சிந்தனை மரபு என எல்லாவற்றையும் மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தை மேற்கொண்ட பேராசிரியர் வீ.அரசு அவர்களைப் பாராட்டி அவரிடம் பயின்ற மாணாக்கர்கள், தங்களது நன்றியை வெளிப்படுத்தும் வகையில் "அகவை 70 நிறைவுக் கருத்தரங்கு / நூல் வெளியீடு" எனும் வகையில் மிகச்சிறப்பானதோர் விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். இடி ஓசை கலைக்குழுவினரின் பறை இசையுடன் நிகழ்வு எழுச்சியுடன் தொடங்கியது. சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத் துறையும் தமிழியல் ஆய்வும் ஒருங்கிணைத்த இச்சிறப்புக் கருத்தரங்கினை மெரினா வளாக இயக்குநரும், தமிழிலக்கியத்துறைப் பேராசிரியருமான **கோ. பழனி** அவர்கள் தலைமை ஏற்றுச் சிறப்பானதோர் அறிமுகவுரை நல்கினார்.


பேராசிரியர் அரசு அவர்களின் மாணாக்கர்கள் அவரை நேர்காணல் செய்து தொகுத்த . **"ஓர்மைத்தடம்"** எனும் நூலை மொழி நிறுவன இயக்குநர் பேராசிரியர் **பா.ரா. சுப்பிரமணியன்** அவர்கள் வெளியிட்டு உரையாற்றினார். இந்நூலின் முதற்படியைப் பெற்றுக் கொண்ட ராணி மேரி கல்லூரியின் சமூகவியல் துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் **சரசுவதி இராசேந்திரன்** அவர்கள் வெளியிடப்பட்ட நூலின் பல்வேறு கூறுகளைச் சுட்டிக்காட்டியும், தமிழ் மொழிக்கு அரசு அவர்களின் காத்திரமான பங்களிப்பை எடுத்துக்காட்டியும் விரிவாக உரையாற்றினார்.

தொடர்ந்து **கண. குறிஞ்சி, அரச. முருகபாண்டியன், பிரளயன்** ஆகியோர் பேராசிரியர் அரசு அவர்களின் கல்வி, இலக்கியம், நாடக அரங்கம் ஆகிய துறைகள் சார்ந்தும், அவரது சமூகப் பங்களிப்பு சார்ந்தும் அவரது சாதனைகள் குறித்தும் சுட்டிக்காட்டி

உரையாற்றினர்.

மதிய இடைவேளைக்குப் பிறகு நடைபெற்ற இரண்டு அமர்வுகளில் அரசு அவர்களின் மாணாக்கர்கள் அவரது பன்முக ஆளுமை குறித்து விரிவாக உரையாற்றினர்.

இறுதியில் **பேராசிரியர் வீ.அரசு** அவர்கள் ஏற்புரை வழங்கினார். காலை முதல் மாலை வரை நடைபெற்ற இந்நிகழ்வு கல்விப் புலத்தில் அரசு அவர்கள் உருவாக்கிய சனநாயகப் பண்பிற்குச் சிறப்பானதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தது என்றால், அது மிகையாகாது. பேராசிரியர் **அ.மங்கை** அவர்களின் ஆளுமைத்திறனால் நிகழ்ச்சி ஏற்பாடுகள் செவ்வனே ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன.



தலைமை உடையாற்றும்
பேராசிரியர் கோ. பழனி




நூல் வெளியீடு



மொழி நிறுவனம் இயக்குநர்
பேரா. பா. ரா: சுப்பிரமணியன்
நூலை வெளியிட்டு உரையாற்றுதல்.



பேரா. சரசுவதி இராசேந்திரன்
அவர்கள் நூலின் முதற்படியைப்
பெற்றுக் கொண்டு உரையாற்றுதல்




மக்கள் கல்விக் கூட்டியக்கம் சார்பாகப் பேராசிரியர் சிவக்குமார்,தோழர் கணேசன் மற்றும் தோழர் கண. குறிஞ்சி ஆகியோர் பேரா. வீ. அரசு அவர்களுக்குப் பரிசளித்தல்




நிகழ்வில் பங்கேற்ற இடி ஓசை கலைக் குழுவினருடன் பேராசிரியர் அ.மங்கை அரசு அவர்கள்




"ஓர்மைத் தடம்" நூல் உருவாக்கிய பேரா. வீ.அரசு அவர்களின் மாணாக்கர்கள்




பேராசிரியர் வீ.அரசு அவர்கள் ஏற்புரை




கூட்டத்தின் ஒரு பகுதியினர்

## இதழுக்கு ஆதரவு நல்கியோருக்கு நன்றி

| | |
|---|---|
| பேரா. **ஜி.கே. இராமசாமி**<br>பெங்களூரு | ரூ. 2,000 |
| பேரா. **பாலமுருகன்** தஞ்சை | ரூ. 1000 |
| பேரா. **திருமாறன்**,<br>திருச்சி | ரூ. 1,000 |
| முனைவர் **கடவூர் மணிமாறன்**,<br>குளித்தலை | ரூ. 1,000. |
| தோழர் **முருகபூபதி**<br>சிவகிரி | ரூ. 1000 |

**அறிவிப்பு**

புதுமலர் (ஏப்ரல்-சூன் 2024) பாரதிதாசன் சிறப்பிதழில் "பாவேந்தர் சில நினைவுகள்" எனும் **ஈரோடு தமிழன்பன்** கட்டுரையில், 14.4.1975-ல் பாவேந்தர் கடிதம் எழுதியதாகவும், 21.4.1975-ல் அவர் இறந்ததாகவும் ஒரு குறிப்பு வந்துள்ளது. இதில் அச்சிடப்பட்ட ஆண்டு தவறானது. 1964 என்பதற்கு மாற்றாக 1975 என ஆண்டுப் பிழை நேர்ந்ததற்கு வருந்துகிறோம்

## புதுமலர் இதழ் கிடைக்கும் இடங்கள்

| | |
|---|---|
| **பாரதி புத்தகாலயம்,<br>சென்னை.** | **72995 79627** |
| **ஈரோடு.** | **92454 48353** |
| **டிஸ்கவரி புக் பேலஸ்<br>சென்னை.** | **87545 07070** |
| **பனுவல் புத்தக நிலையம்<br>சென்னை.** | **97890 09666** |
| **அருவி பொத்தக உலகம்<br>சென்னை** | **90929 48002** |
| **விஜயா பதிப்பகம்<br>கோவை.** | **90470 87058** |
| **என் சி பி ஹெச்<br>மதுரை.** | **94430 44106** |
| **கோவை.** | **94427 64286** |
| **ஈரோடு.** | **90475 71857** |
| **எதிர் வெளியீடு<br>பொள்ளாச்சி** | **98650 05084** |
| **பாலம் புத்தக நிலையம்<br>சேலம்** | **94432 22007** |